www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

20-26.06.1993

ரூபா 8/50

දිනමුරසු වාරමලර්

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 4



## இராணுவம் தயாராகிறது வடக்கே தாக்குதல் எப்போது?

கூட்டுப் படைத்தளபதி சிறப்புப் பேட்டி



## கொப்பேகடுவ மரணம்! யாருக்கு யார் செய்த சதி?



மனித வெடிகுண்டும் - அப்புசாமியும் மற்றும்

சிறப்பான சிறுகதைகள்

சினி விசிட்

தேன் கிண்ணம்

காமன் தொடுக்கும் கணைகளும் டாக்டர் லவ் கற்றுத்தரும் வழிகளும

உங்கள் குழந்தையும் நீங்களும்

போர் விமானங்களில் பொழுது போக்கும் பயணம்

தகவல் பெட்டி



சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு!

வணக்கம்.

தினமுரசு வாரமலர்
கிடைக்கவில்லை என்று
பல கடிதங்கள் குறை சொல்லுகின்றன.
விற்பனை வேகமாக இருப்பதால்
பிரதி பெற முந்த வேண்டியது
உங்கள் பொறுப்பல்லவா?
உங்கள் பகுதி ஏஜென்டிடம்
முன் கூட்டியே சொல்லி வையுங்கள்.

■

பக்கங்களின் அதிகரிப்பால்
உங்கள் நெஞ்சில்
சந்தோசத்தின் கனம் கூடி இருக்கிறது.
என்ன செய்வது
எமக்குத் தான்
பொருளாதார பாரம்
சற்று அழுத்துகிறது.
எனினும்
உங்கள் பேரன்பு
வலி தெரியாமல் செய்து விடுகிறது.

■

கொழும்பில்
புலிவேட்டை நடக்கிறது.
தலைநகரில்
சட்டம் ஒழுங்கு நிலைநாட்டுவது
நிலைநாட்ட ஒத்துழைப்பது
அனைவரது கடமையும் ஆகும் என்பதை
மறுப்பதற்கில்லை.
ஆயினும்
அப்பாவிகள் காயப்படக்கூடாது.

குற்றமற்றவர்கள் யார்
குற்றவாளிகள் யார்
என்பதைக் கண்டறிய
பாதுகாப்புப் படையினர்
எவ்வகையான அணுகுமுறையைக்
கடைப்பிடிக்கிறார்கள்
என்பதே கவனிக்கப்பட வேண்டியதாகும்.

வடக்கு கிழக்கிலிருந்து
தென் இலங்கையில் இருந்து
இடம் பெயர்ந்தவர்களுக்கு
மொழி ஒரு பிரச்சினையாக
இருக்கிறது. அதனால்
கைதாகும் தமது உறவினர்களை மீட்க
என்ன செய்வது, எதைச் செய்வது
என்று தெரியாமல் அல்லாடுகிறார்கள்.


எரியும் வீட்டில் பிடுங்கும் கூட்டமொன்று
ஆசை வார்த்தை காட்டி
பொலிஸ் நிலையங்களுக்கு
அருகில் வைத்தே
பணம் கறப்பது
பெரிய கொடுமை.

தமிழ்க் குரலைக் கேட்டால்
புலியாக இருக்குமோ என்று
விழிப்புருவத்தை உயர்த்தி
சந்தேகம் காட்டும் போக்கும்
ஆங்காங்கே இருக்கத்தான் செய்கிறது.
துரிதமாகச் செயற்பட்டு,
உறவினர்களைக் காக்க வைக்காமல்
உரிய தகவல்களை வெளியிடவும்
விசாரணைகளை விரைவாக்கி,
'இன்று போய் நாளை வா'
என்ற இழுத்தடிப்பில்லாமல்
நடவடிக்கைகளை மேற்கொள்வது
தமிழ் பேசுவோரின் அபிமானத்தையும்
ஒத்துழைப்பையும்
காவல்துறைக்குத் தேடிக் கொடுக்கும்.

■

அடுத்த முரசில்
மேலும் அசத்தலான அம்சங்களோடு
உங்களை மீண்டும் சந்திக்கலாம்.

அன்புடன்
ஆசிரியர்.




## கவிதைப் போட்டி இல-4



மேலேயுள்ள படத்தை உற்று நோக்குங்கள். உங்கள் நெஞ்சில் ஊற்றெடுக்கும் கவிதை வரிகளை அஞ்சல் அட்டையில் பதிவு செய்து அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 25.06.1993.பரிசுபெறும் இருவருக்கு தலா ரூபாய் 100/-

# கவிதை விதைத்து வெற்றியை அறுவடை செய்தவர்கள்

இனியவர்களே!
கடல் போன்றதோ உங்கள் கவிதா தாகம் என்று வியப்பின் உச்சிக்கு உந்தித் தள்ளி விட்டன-
உங்களிடமிருந்து வந்து குவிந்த கவிதை முத்துக்கள்! எதனைத் தேர்ந்தெடுப்பது? எதனை விடுவது? என்று அலைபாய்ந்தது; மனம் காரணம்-

பெரும்பாலானவர்கள் சிறப்பாகவே எண்ணத்தில் கருத்தரித்த வார்த்தைகளை ஊனம் இன்றி பிரசவித்துள்ளீர்கள்.
எனினும் அன்போடு உங்களை மேலும் பண்படுத்த யாம் சொல்வது யாதெனில் -
புதுக்கவிதை என்பது, சொல்லவரும் விசயத்தை சுருக் என்று நெஞ்சில் பதிய வைத்து, சுவைதர வேண்டும். சொல்லும் விசயத்தைப் பொறுத்து சூடும் இருக்கலாம். குறைவான வரிகளில் நெத்தியடியாக இருக்க வேண்டும்.
ஓர் இனிய ஆச்சரியம். வெற்றி பெறும் ஒருவருக்கு பரிசளிப்பதாக அறிவித்தோம் அல்லவா? அப்படிச் செய்யப்போவதில்லை.
அதாவது ஒருவருக்கு மட்டும் பரிசல்ல. இருவருக்குத் தரப்பட்டுள்ளது.
புதிய பாடல் கெசட் இருவருக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

## பரிசுக்குரிய கவிதைகள்

### ஆயுத ஆதங்கம்!

இளைஞனே!
வேண்டாம்...
என்னையாவது
இயற்கையாய்
இறக்கவிடு!

எம். சுரேஷ்
வர்த்தகப் பிரிவு
கொழும்பு பல்கலைக்கழகம்.



### தீயில் தள்ளாதே

தூய உள்ளங்களின்
துடிப்பை அறியாமல்
துப்பாக்கியை நீட்டும்
தீய இதயமே
தீயில் தள்ளாதே- இத்
தூய இதயத்தை

செல்வி.வீ.சுதர்ஸினி
தலவாக்கலை த.ம.வி
தலவாக்கலை.

### து(ர்)ப்பாக்கி

தளர்ந்து போன வயதப்பாயிது
தடியெடுத்த கையப்பா!
துப்பாக்கி எனக்கு வேண்டாமித்
துர்ப்பாக்கிய முனக்கும் வேண்டாம்!!
தணிய வேண்டுமின வாதம்
துளிர்க்க வேண்டுமென் வாதம்!!!

வே.ராஜன்
கலஹா

## பாராட்டுப் பெறும் கவிதைகள்:

### உயிர்ப்பிச்சை

ஓ....
என்ன இது
உயிர்களைத்
தீண்டிப் பார்க்கும்
துப்பாக்கித் துளைகளில்
இன்னுமா.....
நஞ்சு ரவைகள்
மிச்சமுள்ளது?
வேண்டாம் இனி
இந்த அவலச் சின்னம்.

ஷஹிர்ஷா தாஸிம்
தர்கா நகர்.

### ஐயோ....துப்பாக்கி வேண்டாம்!

ஆடிப்பாடி ஓய்ந்து விட்டேன்
ஆறுதல் தேடி நான் அமர்ந்தேன்
ஐந்து விரலையும் தூக்கிச் சொல்வேன்
ஐயோ...எனக்கிந்த துப்பாக்கி வேண்டாம்
மனித வேரைச் சாய்த்து வீழ்த்தும்
மரணத் துப்பாக்கி எனக்கு வேண்டாம்.

செல்வி.சி.சுதர்ஷினி
கொஹுவலை, நுகேகொட.

### சாட்டை

இது
பூவின்
கரங்களிற்குள்
பூகம்பத்தை
திணிக்கும் பாதகம்

மானுடத்தின்
இறுதியுரைக்கு
மிருகத்தனம்
கொடுக்கும்
முகவுரை.....!

சு.அஜீசன்
கொழும்பு-14

### வயதானால் கூட

வயதாகிப் போன உன்னைக் கூட
வன்முறை அழைக்கிறது
ஏன் தெரியுமா?
இங்கே மரணங்கள்
மனிதர்களால் நிச்சயிக்கப்படுகின்றன
என்று.

ப.தர்மேந்திரா
கொழும்பு-15

### தொடமாட்டேன்!

அமைதிக் கன்னியை
களங்கப்படுத்தி
கலவரக் குழந்தையை
கருவிலேற்றிய
இந்தக் கண்ராவியைக்
கையாலும்
தொடமாட்டேன்!

கே. கனகராஜா
நுவரெலியா.

### சோகமாக்கிய துப்பாக்கி

வேண்டாம் ஐயா துப்பாக்கி
எத்தனை உயிர்தான் இன்னும் பாக்கி
எங்கள் அனைவரையும் சோகமாக்கி
இப்போ நீட்டுகிறாயா துப்பாக்கி

ஜெ.ஏ.ஏ.கபூர்
கனுல்வெலை
பிபிலை.

### எனக்கு யாரும் எதிரிகளில்லை

அமைதியைத் தேடும் என் பயணத்துக்கு
என் கைத்தடி போதும்,
அது வேண்டவே வேண்டாம்
நீ மாற்றிப் பிடித்தால்
என் மார்பு திறந்து தாங்கிக் கொள்வேன்..
நீயோ நீட்டிப் பிடிக்கிறாயே...
இந்தா கேள்..." எனக்கு யாரும் எதிரிகளில்லை.
இன்னும் கேள்
அந்தத் துப்பாக்கி கலாசாரம்
என்னுடையதல்ல.

எம்.கே.எம். ஷகீப்
கொழும்பு-14

இது
முகலன் வீதியில்
இருந்ததுவா
இந்தச் சமாச்சாரம்
வேண்டவே வேண்டாம்.

பி.பி. நாதன்
கொழும்பு-11

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# கிளாலிக் கடலில் புலிகள் – கடற்படை மோதல்
# கடற்புலிகளின் முக்கிய தலைவர் பலி
## குடாநாட்டில் அஞ்சலிக் கூட்டங்கள்

–யாழ் நிருபர் வர்மா–

யாழ்ப்பாணத்திலிருந்தது பொதுமக்கள் வவுனியா வருவதற்காக கிளாலிக் கடலேரிப் பாதையைத்தான் தற்போதும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அரசாங்கம் போகக்கூடாது என்று சொல்கிறது. புலிகளோ அதனால் மட்டும்தான் போக வேண்டும் என்று சொல்கிறார்கள்.

எவ்வாறாயினும் பயணம் செய்தே ஆக வேண்டிய நிர்ப்பந்தத்தால் கிளாலிக் கடலேரிப் பாதை வழியாகப் பொதுமக்களின் பயணம் நடந்து கொண்டுதான் இருக்கிறது.

கிளாலிக் கடலேரிப் பாதையில் கடற்படையினருக்கும் புலிகளுக்கு மிடையே அவ்வப்போது மோதல்கள் நடைபெற்று வருகின்றன.

அதிவேக விசை கொண்ட இயந்திரப் படகுகளைப் புலிகள் பயன்படுத்துவதால் அவர்களால் சுலபமாகத் தப்பிச்செல்ல முடிகிறது.

கடந்தவாரம் கிளாலிக் கடலேரிப் பாதையில் கடற்படையினருக்கும் புலிகளுக்குமிடையே கடுமையான மோதல் ஒன்று ஏற்பட்டது. இருபக்கத்திலும் சரமாரியான துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.



தமது தாக்குதலால் கடற்படையினருக்குச் சொந்தமான படகொன்று தீப்பிடித்து எரிந்ததாகப் புலிகள் அறிவித்துள்ளனர்.

கடற்படையினரின் தாக்குதலில் புலிகள் இயக்கத்தின் முக்கியமான கடற்புலித் தலைவரான புலேந்திரன் என்பவர் பலியானார். இவர் திருகோணமலையைச் சேர்ந்தவர். புலிகள் இயக்கத்தில் லெப்டினண்ட் கேர்ணல் தரத்தில் அவர் இருந்தார்.

1987ம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தம் அமுலில் இருந்த போது இந்தியாவிலிருந்து வந்த படகொன்று இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்பட்டது. படகில் இருந்தவர்கள் கொல்லப்பட்டனர். படகு தண்ணீரில் மூழ்கியது.

அந்த சம்பவத்தின் போது 17 மணி நேரம் நீச்சலடித்து கரைக்குத் தப்பிச் சேர்ந்தவர் புலேந்திரன் என்று கடந்த திங்கட்கிழமை புலிகள் யாழ்ப்பாணத்தில் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளனர். நமது யாழ் நிருபர் வவுனியா ஊடாக இறுதியாக அனுப்பி வைத்த செய்தியின்படி, கடந்த ஞாயிறு, திங்கள் இரு தினங்களிலும், புலிகளால் யாழ்ப்பாணத்தில் அஞ்சலிக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

# தென்பகுதி மக்கள் சமாதானத்தை விரும்புகின்றனர்
## வெளிநாட்டு நல்லெண்ணக்குழு தெரிவிப்பு

யாழ் சென்ற வெளிநாட்டு நல்லெண்ணத் தூதுக்குழுவினர் யாழ்ப்பாணத்திலுள்ள அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சிகளுக்குத் தென்பகுதி மக்கள் ஆதரவு காட்டி வருகின்றனர். யாழ்ப்பாணத்திலும் சமாதான முயற்சிகள் விடயத்தில் பரவலான ஆர்வமும் வரவேற்பும் காணப்படுகிறது. இவ்வாறு நல்லெண்ணத் தூதுக்குழுவினர் யாழப்பாணத்தில் தெரிவித்தனர்.

அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களோடு தாம் நடத்திய கலந்துரையாடல்களில் தெரிவிக்கப்பட்ட ஆக்கபூர்வமான கருத்துக்களை இலங்கை ஜனாதிபதிக்கு எடுத்து விளக்கி சமாதானத் திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளப் போவதாகவும் அவர்கள் அங்கு தெரிவித்தனர்.

புலிகளின் வசமுள்ள சிங்களப் பொலிசாரையும், ஒரு இராணுவ வீரரையும் சுமார் அரைமணி நேரம் சந்தித்து உரையாடினார்கள். தமது விரைவான நடவடிக்கைக்கு ஆவன செய்யப்பட வேண்டுமென்று அவர்கள் தூதுக்குழுவினரிடம் தெரிவித்தனர். தாம் உத்தேசித்துள்ள உண்ணாவிரதப் போராட்டம் பற்றியும் அவர்கள் தூதுக்குழுவினரிடம் தெரிவித்தனர்.

பூநகரிப் பாதை திறப்பு விடயமாகவும் தாம் அரசாங்கத்தோடு பேசவுள்ளதாக நல்லெண்ணத் தூதுக்குழுவினர் யாழ்ப்பாணத்தில் வைத்துக் கூறினார்கள்.

நல்லெண்ணத் தூதுக்குழுவினரைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட போதும் அவரது பிரதிநிதிகளாக திரு. அன்ரன் பாலசிங்கம், திரு. பேபி சுப்ரமணியம், புலிகளின் யாழ் மாவட்டப் பொறுப்பாளர் ஆகியோரே சந்தித்தனர்.

தூதுக்குழுவினர் தமது யாழப்பாண விஜயத்தை முடித்துக் கொண்டு நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு விஜயம் செய்து நிலைமைகளைக் கண்டறிந்து வருகின்றனர். கொழும்பு திரும்பியவுடன் ஜனாதிபதியையும் அரசாங்க உயர்மட்டத் தலைவர்களையும் சந்தித்துப் பேச்சு நடத்துவார்கள் என்று தெரிகிறது.

# வெளிநாட்டுத் தூதுக்குழு விஜயம்
## பௌத்த மதகுரு கண்டனம்

தாய்லாந்து பௌத்த மதகுருவும், கத்தோலிக்க மதகுருமாரும் யாழ்ப்பாணம் சென்று புலிகளைச் சந்தித்ததை பெப்பிலியான சுனித்திராதேவி ஆச்சிரமத்தின் தலைவர் கலாநிதி மெதகொட சுமணதிஸ்ஸ கண்டித்துள்ளார்.

தாய்லாந்திலிருந்து இங்கே தூதுக்குழுவோடு வந்திருக்கும் பௌத்த மதகுருவானவர் அங்கீகரிக்கப்பட்ட பௌத்த மதத்தைச் சார்ந்தவர் அல்ல என்றும் அவர் ஒரு சர்வதேச ரீதியான அரசியல் அமைப்பின் அங்கத்தவர் என்றும் அவர் தனது கண்டனத்தில் குறிப்பிட்டுள்ளார்.

முன்பு ஒரு தடவை புலிகளைச் சந்தித்துத் திரும்பிய கத்தோலிக்க ஆயர் ஒருவர் கூறிய விடயங்கள் எமக்கு நன்றாக நினைவிருக்கிறது. அவரைப் புலிகள் நன்றாக உபசரித்து விட்டார்கள் என்பதற்காக, புலிகள் நல்லவர்கள், நியாயமானவர்கள், கருணை உள்ளம் கொண்டுள்ளவர்கள் என்று வர்ணித்திருந்தார். அந்தப் புலிகள் அப்பாவி மக்களுக்கெதிராக நடத்திய கொலைகள் மூலம் அவர்கள் யார் என்பதை நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். புலிகளோடு பேச்சு நடத்த அவர்களை அரசாங்கம் அனுமதித்திருக்கக் கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

# குடிக்க வரும் நீரில் கால்நடைகள் குளிப்பு!

–நமது புத்தளம் நிருபர்–

மக்கள் சீனக் குடியரசு அரசாங்கத்தின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட புத்தளம் நகர குழாய் நீர் விநியோகத் திட்டம் தற்போது பூர்த்தியடையும் நிலையிலுள்ளளது.

பலகோடி ரூபாய் செலவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள இத்திட்டத்தின் மூலம் மக்களின் நீண்டகால குறையொன்று பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

தற்சமயம் பரீட்சார்த்தமாக வீதிகளில் நிறுவப்பட்டுள்ள பொது குழாய்கள் மூலம் நீர் வழங்கல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் இந்த பொது குழாய் மூலம் வழங்கப்படும் நீர் சில பாவனையாளர்களினால் துஷ்பிரயோகம் செய்யப்படுவதுடன் அநியாயமான முறையில் வீணடிக்கப்படுவதாகவும் தெரியவருகின்றது.

இந்த பொது குழாய்கள் மூலம் இருபத்தி நான்கு மணி நேரமும் நீர் விநியோகம் செய்யப்படுவதினால் சில பாவனையாளர்கள் தாங்கள் குளிப்பது மாத்திரமன்றி தங்களது கால் நடைகளையும் குளிப்பாட்டுகின்றனர்.

இதன் காரணமாக பொது குழாய்களுக்கு தண்ணீர் பிடிக்க வரும் பெண்கள் கூட இவர்களினால் தாமதிப்பதுடன் வீண் ஏச்சுக்களுக்கும் ஆளாகுவதாகவும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இவ்விடயத்தில் நீர்வடிகால் சபை கூடிய கவனமெடுத்து தண்ணீரை வீண்விரயம் செய்யும் நபர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தினால் தான் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும் என பொதுமக்கள் பலரும் எமது நிருபரிடம் முறையிட்டனர்.

ஜப்பான் நாட்டின் முடிக்குரிய இளவரசர் நறுஹிட்டோ. வயது 33. ஜப்பான் வெளியுறவுத்துறை அதிகாரியின் மகள் மசாகோ. வயது 29. கண்டனர் - காதல் கொண்டனர். ஜூன் 9ம் திகதி வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொண்டனர். அவர்களது மரபு உடையோடு கூடிய திருமணப் போட்டோ கீழே இருக்கிறது.

# சுடச்சுட ஒரு போட்டோ
## விலை உயர்ந்த திருமணம்



www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# பொஸ்ரன் நகரில் 'தமிழீழக் கொடி' ஏற்றம்





மே மாதம் 22ம் திகதி அமெரிக்காவின் பொஸ்ரன் நகரத்தில், இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணத்தை பிரித்துக்காட்டி தமிழீழம் என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட கொடி பறக்க விடப்பட்டது. அது சிவப்பு, மஞ்சள் நிறங்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தது.

பொஸ்ரன் நகர மேயர் திரு. சுப்புவானா அமெரிக்க தேசியக் கொடியோடு சேர்த்து அக்கொடியையும், பொஸ்ரன் நகர சபை மைதானத்தில் ஏற்றி வைத்தார்.

அமெரிக்காவில் தமிழீழ பிரகடனம் செய்யப்படுவது இது முதல் தடவையல்ல. 1981ம் ஆண்டிலும் ஈழத்தமிழ் சங்கம் என்ற அமைப்பினால் ஈழப்பிரகடனம் செய்யப்பட்டது.

பொஸ்ரன் நகரில் உள்ள தில்லையம்பலம் சகோதரர்களால் 1981ல் ஈழப் பிரகடனம் செய்யப்பட்டது. தில்லையம்பலம் சகோதரர்களில் ஒருவரான சிறீபதி என்பவரே இப்போதும் முன்நின்று கொடியேற்றும் நிகழ்ச்சியை நடத்ததி வைத்துள்ளார்.

அவரது மற்றொரு சகோதரர் பொஸ்ரன் தில்லையம்பலம் தனது கொள்கையை மாற்றிக் கொண்டுள்ளார்.

ஐக்கிய இலங்கையில் இனப்பிரச்சனையைத் தீர்க்க முடியும் என்று அவர் ஓர் அறிக்கை வெளியிட்டார்.

அதனையடுத்து கனடாவில் உள்ள புலிகளின் பத்திரிகையான 'உலகத்தமிழர்' பொஸ்ரன் தில்லையம்பலம் மீது கண்டனம் தெரிவித்துள்ளது.

கொடியேற்றும் நிகழ்ச்சிக்கு வந்திருந்தவர்களில் ஒருவர் அமெரிக்காவின் மசசூசட்ஸ் மாநில முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினரான திருமதி மேரி ஹாவ்.

1970களின் நடுப்பகுதியில் மசசூசட்ஸ் மாநிலத்திலும் ஈழப்பிரகடனம் ஒன்று செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தற்போது கொடியேற்றும் நிகழ்சி நடைபெற்ற பொஸ்ரன் நகரசபை அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த பிரிவல்ல.அதனால் 'ஈழக்கொடி' ஏற்றம் அமெரிக்கரின் கவனத்தை ஈர்ப்பதாக அமையவில்லை. அத்தோடு மேயர் சுப்புவானாவும் அரசியல் ரீதியில் பெரும் முக்கியத்துவம் கொண்டவர் அல்ல.

ஈழத்தமிழ் சங்க பொஸ்ரன் சகோதரர்களுக்கிடையே முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதால் எதிரும் புதிருமாக பணிகள் நடக்கின்றன. ஒருவர் ஐக்கிய இலங்கை என்கிறார். மற்றவரோ தமிழீழப் பிரகடனம் செய்கிறார்.

மேற்படி கொடியேற்ற நிகழ்ச்சிக்கு யாழ்ப்பாணத்திலோ அல்லது வெளிநாடுகளில் உள்ள புலிகளின் உறுப்பினர்களோ முக்கியத்துவம் கொடுக்கவில்லை. குறைந்த பட்சம் கருத்துக்கூட தெரிவிக்கவில்லை.

ஏனைய தமிழர் அமைப்புக்கள் அதை ஒரு பொருட்டாகவே எடுக்கவில்லை.என்றாலும் சிறீபதி திருப்தியோடு இருக்கிறார். ஒரு வேளை தனக்கு எப்படியோ விளம்பரம் கிடைத்த திருப்தியாக இருக்கலாம்!

## கல்விக்கென்ன தடை?

பொலன்னறுவை மாவட்டத்தில் திம்புலாகலை பிரதேச செயலகப் பிரிவில் உள்ள தமிழ்ப் பாடசாலைகள் கவனிப்பாரற்ற நிலையில் உள்ளன.

அப்பாடசாலைகளுக்கத் தேவையான அத்தியாவசியத் தேவைகள் நிறைவு பெறாவிட்டாலும் ஆசிரியர்களின் தட்டுப்பாடே பெரிதும் கவலை தருகிறது.

பொலன்னறுவை மாவட்டத்தில் ஆறு தமிழ்ப் பாடசாலைகள் உள்ளன. இவை திம்புலாகலை பிரதேச செயலகப் பிரிவில் அமைந் துள்ளன. இவற்றில் பொ. மன்னம் பிட்டி தமிழ் மகா வித்தியாலயம் முக்கியமானதாகும். கடந்த காலத் தில் அகில இலங்கை ரீதியாகவும் அதிக பெறுபேறுகளை பெற்று வந்துள்ளது. 1995ல் நூற்றாண்டு பூர்த்தியைக் கொண்டாட உள்ள இம்மகாவித்தியாலயத்தின் நிலமை கேள்விக் குறியாக உள்ளது.

பொ. முத்துக்கல் தமிழ் வித்தியாலய நிலையும் இதுதான்.

இப்பாடசாலையைப் போன்றே க.பொ.த. சாதாரணம் வரை வகுப்பு களைக் கொண்ட பொ.முத்துக்கல் த.வித்தியாலயம் அதிபர் உட்பட இரண்டு ஆசிரியர்களுடனும், க.பொ.த. சாதாரண தரம் வரையுள்ள பொ. ஹவன்பிட்டி த.வித்தியாலயம் அதிபருடன் மூன்று ஆசிரியர்களுடனும், நான்காம் ஆண்டுவரை உள்ள பொ.சரஸ்வதி வித்தியாலயம் பொ. றொட்டவவ த.வித்தியாலயம் அதிபர்களுடனும் எட்டாம் ஆண்டு வரை உள்ள பொ. சொறிவில் த.வித்தியாலயம் நான்கு ஆசிரியர் களுடனும் இயங்கிக் கொண்டி ருக்கின்றன.

நிலமை இப்படி இருக்கையில் வறுமைக் கோட்டுக்குள் வாழும் விவசாயிகளின் பிள்ளைகள் வெளி மாவட்டங்களுக்குச் சென்று படிக்க முடியாத நிலையில் கல்வியை கற்க முடியாதுள்ளது. ஆக்கமும் ஊக்கமும் உள்ள இம்மாணவர்களின் கல்வி நிலையை எண்ணிப் பார்க்கவே முடியாதுள்ளது. இதுபற்றி சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் கவனமெடுப்பார்களா?....

கணபதி –சுரேந்திரன்
(தலைவர்)
விபுலானந்தா
இ.சே.மன்றம்.
மன்னம்பிட்டி

## கேகாலை மாவட்டத்தில் மாணவியர் மனக்கவலை

சப்பிரகமுவ மாகாணத்தில், கேகாலை மாவட்டத்தில் அமைந்திருக்கும் சாந்த மரியாள் தமிழ் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவிகளின் பெரும் குறை, மழைக்காலத்தில் படும் பாடாகும். பாடசாலை செல்ல ஒழுங்கான பாதை இல்லாமையால் வழுக்கி விழுந்தும் பெரும் அவலப் பட்டுமே பாடசாலைக்கு செல்லமுடிகிறது.

–தகவல். ஆர்.கோபால்.

## தண்ணீர்-தண்ணீர்

கொழும்பு- 13 கொட்டாஞ் சேனை வீதி மேட்டில் பல வருடகாலமாக சீரான குடிநீர் வசதி இல்லை. இப்பகுதியில் உள்ள மக்களில் அநேகர் இவ்வீதியில் உள்ள குழாய்களில்தான் இரவிரவாக தண்ணீர் நிரப்பிக்கொள்ளுகின்றனர்.

ஏற்கனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பலமுறை அறிவித்தும் பலன் கிட்டவில்லை. இனியாவது கவனிப்பார்களா?

என். கஜேந்திரன்
கொழும்பு-13

## கொஞ்சம் கவனிக்கலாமா?

களுத்துறை மாவட்டத்தின் பேருவளைப் பிரதேசத்தில் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்று களுத்துறை மகாவித்தியாலயம் ஆகும். இப்போது ஆசிரியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

சுமார் 1600க்கு மேற்பட்ட மாணவ மாணவிகளுக்கு 20க்கும் குறைவான ஆசிரியர்களே கற்பிக்கின்றனர். இந்த நிலை தொடருமானால் மாணவர்கள் பெரிதும் பாதிப்படைவர். மாணவ சமூகத்தின் நலன்கருதி சம்பந்தப்பட்டவர்கள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தகவல். ஏ.பி.எம் ஜிப்ரி
பேருவலை

## தொடருமோ இந்த நிலை?

தெரணியகல நகரப் பகுதியில் உட்பாகை தோட்டத்தில் வாழும் சுமார் நூறு குடும்பங்களுக்கு மலசலகூடம் இல்லாமல் இருக்கிறது. இவ்வளவு காலமாக தோட்டத்தில் ஒரு காட்டுப் பகுதியை உபயோகித்தனர். தற்போது அதையும் தோட்ட வேலைக்கு எடுத்துவிட்டதால் நிலமை மோசமாக இருக்கிறது. அப்பகுதியில் உள்ள மக்கள் இ.தொ.காவில் இருக்கின்றனர்.

இரத்தினசபாபதி இராஜ்மோகன்
பொரலங்கட

## புகார் பெட்டி

### உளுத்துப்போன அரிசியும் கற்பிட்டி அகதிகளும்!

கடந்த ஹஜ்ஜிப் பெருநாளுக்கு இரண்டொரு நாட்களுக்கு முன்பாக கற்பிட்டியில் வாழும் அகதிகளுக்கு வழங்கப்பட்ட அரிசி பாவனைக்கு உதவாததாக இருந்தது. வடமாகாணத்தில் இருந்து புலிகளால் வெளியேற்றப்பட்ட அகதிகள் கற்பிட்டியில் வாழ்ந்து வருகின்றனர்.

தகவல் எஸ்.எச். நி.:மத்

### தர்காநகர் தபாலகத்தில் ஒரு சங்கடம்

அதிக முஸ்லிம்கள் வாழும் பேருவலை தொகுதியில் உள்ள தர்கா நகரில் உள்ள அஞ்சல் அலுவலகத்தில் கடமைபுரியும் அநேகர் பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவர்கள். இதனால் பாஷைப் பிரச்சனை காரணமாக முஸ்லிம் பெண்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

எம்.ஜ.ரம்ஸின்
தர்காநகர்.

### உள்ளதும் போச்சடா!

அம்பாறை அன்னமலை, நாவிதன்வெளியில் வாழும் கிராமவாசிகள் சில காலமாய் நாவிதன்வெளி உதவி அஞ்சல் அலுவலக தொலைபேசியைப் பாவித்து வந்தனர். இப்போது அங்கேயும் தொலை பேசி இல்லாமல் போய்விட்டது.

தி. உலகநாதன்
அன்னமலை.

## இரத்தினபுரியில் படகு உற்பத்தி

இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொடர்ந்தும் நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டு வருவதாக சப்பிரகமுவ மாகாண முதல்வர் திரு. ஜி.வி.புஞ்சி நிலமே அறிவித்துள்ளார்.

எனினும் நிவாரணப் பொருட்கள் போதுமானதாக கிடைக்கவில்லை என்று பாதிக்கப்பட்டவர்களில் சிலர் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே இரத்தினபுரியில் பய்பர் கிளாஸ் படகு உற்பத்தி செய்யும் திட்டமொன்றை ஆரம்பிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு புனரமைப்பு சமூகநல அமைச்சர் திரு.பி. தயாரத்னா ஆலோசனை வழங்கியுள்ளார்.

## மத்திய மாகாண பாடசாலைகள். குறைகளை தீர்க்க விரைவான நடவடிக்கை!

மத்தியமாகாண சபைக்குட்பட்ட பாடசாலைகளில் குறைகள் உள்ளன. அவற்றை நான் அறிவேன். இக்குறைகள் பற்றிய ஆய்வுகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு, தீர்வுகள் காணப்படும்.

இவ்வாறு மத்திய மாகாண சபையின் அமைச்சர் திரு.எஸ் சதாசிவம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் மத்திய மாகாண ஆளுநர் திரு.பி.ஸி. இம்புலான முன்னிலையில் திரு.எஸ்.சதாசிவம் அமைச்சராக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இ.தொ.காவுக்கும் ஐ.தே.கட்சிக்கும் இடையே உள்ள உறவும், புரிந்துணர்வும் நீடிக்கும் என்றும் அவர் கூறினார்.

(கண்டி நிருபர்)

# புலிகள் ஜனநாயக வழிக்கு வருவது சந்தேகம்
# புலிகளை முழுமையாகச் செயலிழக்க வைப்பதே நோக்கம்!



இலங்கையின் இராணுவத் தளபதியாக இருந்து ஓய்வு பெற்று தற்போது கூட்டுப் படைத் தளபதியாகப் பதவி வகித்து வருபவர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க.

எல்லோரோடும் எளிமையாகப் பழகக் கூடியவர். இராணுவ அதிகாரிக்குரிய அச்சமூட்டும் தோரணையும், அநாவசியமான பந்தாக்களும் அவரிடம் இல்லாதது குறிப்பிடும்படியான சிறப்பு.

'இராணுவ விவகாரங்களில் நீண்ட கால அனுபவம் முகத்திலே முத்திரையாய்த் தெரிய, ஒரு காலை வேளையில், அடிக்கடி அழைத்துக் கொண்டிருக்கும் தொலைபேசிகளுக்கு நடுவே எமது பிரதம ஆசிரியர் தொடுத்த வினாக்களும், அவற்றை எதிர்கொண்டு அவர் தந்த விடைகளும்:

**கேள்வி:** காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசாவின் மறைவிற்குப் பின்னர் இராணுவத் திட்டங்களில் ஏதாவது மாற்றங்கள் செய்யப் பட்டுள்ளனவா?

**பதில்:** இல்லை. திட்டமிட்டபடி பாதுகாப்புப் படையினர் தமது நடவடிக்கைகளை தொடர்ந்து வருகின்றனர்.

**கேள்வி:** என்றாலும் இராணுவ நடவடிக்கைகளில் தற்போது ஒரு மந்தமான நிலை காணப்படுகிறது என்று கூறப்படுகிறதே?

**பதில்:** நல்லது. சிலர் அப்படி நினைத்துக் கொண்டிருக்கலாம். எம்மைப் பொறுத்தவரையில் நாம் ஒரு திட்டத்தின் அடிப்படையில் செயற்படுகிறோம். சில சந்தர்ப்பங்களில் எங்களது நடைமுறைத் தந்திரங்கள் காலநிலை போன்ற பூகோளச் சூழல்களால் சற்றுத் தாமதமடையலாம்.

**கேள்வி:** கெரில்லா தாக்குதலுக்கு இராணுவத்தால் தொடர்ந்து முகம் கொடுக்க முடியும் என்று நினைக்கிறீர்களா?

**பதில்:** இதற்கான சிறந்த பதிலைப் புலிகள் தான் சொல்ல வேண்டும்.

**கேள்வி:** புலிகள் தங்களுக்கு வெற்றி என்கிறார்களே?

**பதில்:** அது அவர்கள் வெளியே சொல்லிக் கொள்வது. உண்மை என்னவென்று அவர்களுக்குத் தெரியும். அவர்களின் பிடியில் இருந்த பல பகுதிகளை விடுவித்திருக்கிறோம். உண்மையாகவே வெற்றி என்று கூறவேண்டுமானால் அந்தப் பகுதிகளை அவர்கள் மீண்டும் தம் வசப்படுத்தியிருக்க வேண்டுமே!

**கேள்வி:** ஜெனரல் அவர்களே! பகுதிகளை விடுவிப்பதைவிட ஆயுதங்களை கைப்பற்றுவதே தமது நோக்கம் என்றுதான் புலிகள் சொல்கிறார்கள். அந்த நோக்கத்தில் வெற்றி பெற்றுள்ளார்களா?

**பதில்:** சில தாக்குதல்களில் அவர்கள் வெற்றி பெற்றுள்ளார்கள் என்பதை மறுக்க முடியாது.

**கேள்வி:** என்ன காரணம்? ஏன் முறியடிக்க முடியவில்லை?

**பதில்:** திடீர்த்தாக்குதலில் ஈடுபடுவோருக்கு சில சாதகங்கள் உண்டு. தாக்குதலுக்கான நேரம், காலநிலை, இடம் போன்றவற்றை அவர்களே தெரிவு செய்கிறார்கள்.

**கேள்வி:** இந்தியப்படையின் உதவி மீண்டும் பெறப்படவேண்டும் என்று நினைக்கிறீர்களா?

**பதில்:** அதைப்பற்றிய பேச்சுக்கு இப்போது அவசியம் இல்லை. எனினும் எமக்கான உதவிகளை நாம் வரவேற்போம். நண்பர்களின் உதவிகளை மறுக்கமாட்டோம்.

**கேள்வி:** இராணுவத்தின் கவனத்தை தெற்கு நோக்கி திருப்பும் புலிகளின் திட்டம் வெற்றி என்று சொல்லலாமா?


**பதில்:** நிச்சயமாக இல்லை! இப்போதுகூட கிழக்கில் புலிகள் கொல்லப்பட்ட செய்தி கிடைத்திருக்கிறது.

**கேள்வி:** தெற்கில் அரசியல் தலைவர்கள் படுகொலை விடயத்தில் இராணுவத்தின் பங்கு என்ன?

**பதில்:** விசாரணைகளில் நாம் சம்பந்தப்படுவதில்லை.

**கேள்வி:** பூநகரிப் பாதை திறப்பதாயின் அங்கிருந்து இராணுவம் விலகிக் கொள்ளுமா?

**பதில்:** அப்படியான கோரிக்கையை புலிகளே கைவிட்டு விட்டார்கள். UNHCR பிரதிநிதியோடு நாம் விவாதித்தோம். எமது தரப்பில் உள்ள பிரச்சனைகள் தீர்க்கப்பட்டுள்ளன. மக்களின் போக்குவரத்துக்கு இடையூறு இருக்கக்கூடாது என்பதே எமது நிலை.



## கூட்டுப் படைத்தளபதி விசேட பேட்டி



**கேள்வி:** கிளாலிப் பாதையில் செல்லும் அப்பாவி மக்கள் தாக்கப்படுவது சரியாகுமா?

**பதில்:** அப்பாதை தடை செய்யப்பட்டது என்று பலமுறை தெளிவாக அறிவித்துள்ளோம். மக்களை கேடயங்களாக வைத்து புலிகள் பயணம் செய்வதை நாம் எப்படி **அனுமதிக்க முடியும்? கடந்த 11ம் திகதி கூட கிளாலியில் இரண்டு புலிகள் கொல்லப்பட்டனர்.** அதில் ஒருவர் புலேந்திரன் அவர்தான் புலிகளின் கடற்புலிப் பிரிவில் முக்கியமானவர். உணவு-எரிபொருள் என்பவற்றை புலிகளுக்கு கொண்டு செல்ல பொறுப்பாக இருந்தவர். பயங்கரவாதிகளின் கடத்தல்களை தடுப்பது எமது கடமையாகும்.

**கேள்வி:** கிழக்கு மாகாணத்தில் கைது செய்யப்படும் பலர் காணாமல் போய் இருப்பதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளனவே?

**பதில்:** அங்கே எம்மால் கைது செய்யப்படுகின்றவர்கள் பற்றிய விபரங்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கு அறிவிக்கிறோம். அவர்கள் பார்வையிடவும் அனுமதிக்கிறோம்.

**கேள்வி:** வாழைச்சேனையில் கைது செய்யப்பட்டவர்கள் பற்றி இதுவரை தகவல் எதுவும் இல்லையே?

**பதில்:** சில விடயங்களில் விபரங்களை பெறமுடியவில்லை என்பதை ஒப்புக் கொள்கிறேன். இப்போது அவ்வாறான புகார்கள் இல்லை.

**கேள்வி:** கொக்கட்டிச்சோலை படுகொலைக்கு காரணமான இராணுவ அதிகாரிமீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

**பதில்:** அவர் இராணுவத்தை விட்டு விலத்தப்பட்டுள்ளார். அதிலே பிரச்சனை என்னவென்றால் அவருக்கு எதிராக நேரடியாகச் சாட்சியம் அளிக்க எவரும் முன்வரவில்லை. என்றாலும் அந்தப் பிரிவின் தலைவர் என்ற வகையில் தனது தார்மீகப் பொறுப்பில் இருந்து, அவர் தவறியதை மறுத்துவிடமுடியாது.

**கேள்வி:** வடக்கே நடைபெறும் விமானத்தாக்குதல்களால் அப்பாவிகள் தானே பாதிக்கப்படுகிறார்கள்.?

**பதில்:** நாம் இலக்குகளை பரிசீலித்தே தாக்குதல் நடத்துகிறோம். பொதுமக்கள் பாதிப்படையாமல் தடுக்க, புலிகளின் நிலைகளை விட்டு விலகி இருக்குமாறு கூறிவருகிறோம்.

**கேள்வி:** இனப்பிரச்சனைக்கு இராணுவத் தீர்வு மூலம் மட்டுமே தீர்வு காணமுடியுமா?

**பதில்:** பயங்கரவாதப் பிரச்சனையைத்தான் புலிகளிடம் இருந்து எதிர்

(மறுபக்கம்)

## அதிரடி ஐயாத்துரை



முன்னாள் பெரியவரின் பாரியாரைச் சந்திப்பதையே சிலர் நிறுத்திக்கொண்டு விட்டார்களாம். உறவும் வேண்டாம் பகையும் வேண்டாம் என்கிறார்கள். தங்களையும் 'ஹே'குழுவில் சேர்த்து விடுவார்களோ என்ற தயக்கம் தான் யாவற்றிற்கும் காரணம்.

யாழ் விஜயம் செய்த வெளிநாட்டுத் தூதுக்குழுவை இரண்டெழுத்து இயக்கத் தலைவர் சந்திக்கவில்லையாம். அதனால் தூதுக்குழுவினர் வருத்தத்தோடு தான் திரும்பி இருக்கிறார்கள். யாழில் உள்ள முக்கியமான வணக்கத்திற்குரியவர் எவ்வளவோ முயன்றும் கூட சந்திப்புக்குச் சம்மந்தப்பட்டவர் மறுத்து விட்டதாகச் சொல்கிறார்கள்.

அராலிக் குண்டின் மர்மத்தைத் துலக்கும் விசாரணை அறிக்கையை ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் வழிமேல் விழிவைத்து பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இலண்டன் நிபுணர் ஒருவரின் அறிக்கையைச் சிலர் தூக்கிப்பிடித்தபோதிலும் அதிலே அப்படி ஒன்றும் விசயம் இல்லையாம். எல்லாம் அறிக்கை வந்தால் தெரியும்.

வெளிநாடுகளில் இலங்கைத் தமிழர்களின் தொகை எக்கச்சக்கமாக உயர்ந்துகொண்டே போகிறது. அதற்குச் சமமாக குத்துக்கள், வெட்டுக்கள், குழுச்சண்டைகள் என்று எல்லாமே பெருகி ஒரே அமர்க்களம். ஊர்ப்பழக்கத்தை உலகமயப் படுத்துகிறார்கள். வெள்ளைக்காரனுக்கு வெறுக்கப்போகிறது.

கோயிலில்லாத ஊரில் குடியிருக்காதே. இது பழமொழி. இதன்படி நடக்கவெளிக்கிட்டால் வெளிநாடுகளிலுள்ள தமிழர்கள் கடலிலே தான் குடியிருக்க வேண்டும். ஆகவே பழமொழியைப் புதுசாக மாற்றியிருக்கிறார்கள். "கோயிலில்லாத ஊரில் குடியிருந்து, மறந்து போகாமல் ஒரு கோயில் கட்டு." லண்டன், ஜேர்மன் இப்படிப் பல்வேறு நாடுகளில் கோயில் கட்டிக்கோலாகலமான திருவிழாக்களும் நம்மவர்களால் நடத்தப்படுகிறதாம். அண்மையில் ஜேர்மனிலிருந்து வந்த நண்பர் ஒருவர் சொன்னது இது: அங்கொரு நகரில் அம்பாள் வீதி உலா போக வெள்ளைத்தோல் எல்லாம் வியந்து போனதாம்.

பச்சை அணியும் அதில் இருந்து பிரிந்தவர்களும் மீண்டும் ஒன்று கூடலாம் என்று ஒரு பேச்சு அடிபடுகிறது. அப்படிச் சில முயற்சிகள் நடந்தாலும் தற்போதைக்கு நிச்சயமாக அது சாத்தியமில்லை என்று பச்சை அணி வட்டாரம் அடித்துச் சொல்கிறது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

கொள்ளுகிறோம்.

கேள்வி: இராணுவத்தை விட்டு பலர் தப்பி ஓடுவதாகக் கூறப்படுகிறதே?

பதில்: வெளியே கூறப்படும் அளவுக்கு பெரிதாக இல்லை. சிலர் விடுப்பில் சென்று நீண்ட காலமாக திரும்பி வராமல் இருக்கிறார்கள். இப்படி சாதாரண காலத்திலும் நடப்பதுண்டு.

கேள்வி: வடக்கே மீண்டும் பாரிய இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

பதில்: ஆம்.

கேள்வி: எப்போது?

பதில்: உரிய காலத்தில், உரிய நேரத்தில்

கேள்வி: பொதுமக்களின் பாதிப்பை எவ்வாறு தவிர்ப்பீர்கள்?

பதில்: சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் போன்ற அமைப்புக்களோடு பேசி மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்து வோம். ஈ.பி.டி.பி, புளொட் போன்ற தமிழர் அமைப்புக்களும் எமக்கு உதவத் தயாராக உள்ளன. அவற்றின் உதவியைப் பெறுவோம்.

கேள்வி: புலிகள் ஜனநாயக வழிக்கு வருவார்கள் என்று நம்புகிறீர்களா? இதுவரை கால அனுபவத்தில் உங்கள் தனிப்பட்ட கருத்து என்ன?

பதில்: பல சந்தேகங்கள் உண்டு. சகல அரசியல் தரப்பினரையும் பகைத்துக்கொண்டார்கள். ஒரு ஜனநாயக சக்தியாக செயல்பட நாட்டம் உள்ளவர்கள் அவ்வாறு செய்யமாட்டார்கள். புலிகளைப் பொறுத்தவரை அவர்களை முழுமையாகச் செயல் இழக்கச் செய்வதே ஒரே வழி.

கேள்வி: காங்கேசன்துறைப் பாதை வழியாக யாழ்ப்பாணத்திற்கு உணவு லொறிகள் செல்வதில் உடன்பாடு ஏற்பட்டுள்ளதா?

பதில்: புலிகள் உடன்படவில்லை. மக்கள் பொருட்களை வாங்கிச் செல்ல வருவதை புலிகள் அனுமதித்தால், காங்கேசன்துறையில் சகல பொருட்களையும் பெற்றுக் கொள்ள முடியும். அங்கு கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் ஒன்று திறக்கப்பட இருக்கிறது.



கேள்வி: தமிழ் பேசும் மக்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?

பதில்: பாசிசத்துக்கு எதிராக ஐக்கியப்பட வேண்டும். புலிகளின் கொடூரப் பிடியில் இருந்து தமிழர்களை மீட்டெடுப்பதே எமது நோக்கம் ஆகும்.

இந்த யுத்தம் புலிகளுக்கு - ஆம், புலிகளுக்கு மாத்திரமே எதிரான யுத்தமாகும். ●

# வடக்கு-கிழக்கு பிரிப்பும் தமிழ் கட்சிகளின் எதிர்ப்பும்

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

**நாரதர்**

பாராளுமன்றத் தெரிவுக்குழு வடக்குக் கிழக்கு தொடர்ந்து இணைந்திருப்பதா, இல்லையா என்பதைத் தீர்மானிக்க கிழக்கே ஒரு சர்வஜன வாக்கெடுப்பை நடத்த சிபார்சு செய்திருக்கிறது.

அதனை அடுத்துச் சகல தமிழ்க்கட்சிகளும் தமது அதிருப்தியினை வெளிப்படுத்தித் தமது கருத்தினை மிகத் தெளிவாக முன்வைத்துள்ளன.

புலிகளுக்கெதிரான நடவடிக்கைகளில் அரசாங்கத்திற்கு ஆதரவளித்து வரும் தமிழர் அமைப்புக்களும் வடக்கு, கிழக்கு ஒரே நிர்வாக அலகாக இருக்க வேண்டும் என்பதில் உறுதியான கருத்துக்களை வெளியிட்டுள்ளன.

அண்மையில் யாழ் சென்று திரும்பிய வெளிநாட்டுத் தூதுக்குழுவிடம் தமிழர் தாயகம் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்று புலிகள் தெரிவித்துள்ளனர். அதை ஒரு அடிப்படைக் கோரிக்கையாக அவர்கள் முன்வைத்துள்ளனர்.

தமிழர் அமைப்புகளிடையே பல்வேறு முரண்பாடுகள் இருக்கின்றன. ஆனாலும் வடக்கு கிழக்கு இணைப்பு விவகாரத்தில் பொதுக்கருத்து நிலவுகிறது.

சிங்கள அரசியல்வாதிகள் சிலர் வடக்கு, கிழக்கு இணைப்பு என்ற சொல்லைக் கேட்டவுடன் ஏன் துள்ளிக் குதிக்கிறார்கள் என்று தெரியவில்லை.

முன்பும் ஒரு முறை இப்படித்தான் நடந்தது. காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசா அவர்கள் தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கிடையே உடன்பாடு ஏற்பட்டால் வடக்கு, கிழக்கு இணைப்பில் எவ்வித பிரச்சினையும் இல்லை என்பது போல கருத்துச் சொல்லப் போக-விட்டேனா பார் என்று பெரும்பான்மை இனத்தோரால் நடத்தப்படும் சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் ஒரு பட்டிமன்றமே நடத்தி முடித்தன.

வடக்கு, கிழக்கு இணைப்பிற்கு சாதகமான கருத்துக்கள் பெருமளவில் இடம்பெறாமல் பார்த்துக்கொண்டதும் அதிலே கவனிக்கப்பட வேண்டிய விசயமாகும்.

இணைந்திருப்பதை எதற்காகப் பிரிக்க வேண்டும்? அத்தோடு வடக்கு, கிழக்கு சம்மந்தப்பட்ட விவகாரத்திற்கு கிழக்கில் மட்டுமே தேர்தல் நடத்துவது எப்படி நியாயமாகும்?

இதுதான் தமிழ்க்கட்சிகள் தொடுக்கும் கேள்வியாகும்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்படி கிழக்கே சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது அப்போதே முடிவு செய்யப்பட்ட விடயம் என்பது பெரும்பான்மை இன அரசியல் வாதிகள் முன்வைக்கும் வாதமாகும்.

ஜே.ஆர். ஜெயவர்தனவும் அமரர் ராஜீவ் காந்தியும் அப்போதுள்ள நிலமைகளைச் சமாளிக்க அப்படி ஒரு விதியை ஒப்பந்தத்தில் சேர்த்துக் கொண்டாலும் கூட வாக்கெடுப்பு நடக்காதென்று ராஜீவ் காந்தி எம்மிடம் உறுதி அளித்தார். அதுதான் ஒப்பந்தத்தையே ஏற்றுக் கொண்டோம்.

இதுதான் தமிழ்க்கட்சிகள் முன்வைக்கும் வாதமாகும்.

இது எந்த அவையிலும் செல்லாத வாதமாகும். அமரர் ராஜீவ் காந்தி அப்படிக் கூறியிருந்தால் கூட புலிகள் உட்பட சகல தமிழர் அமைப்புக்களும் அந்தக் குழந்தைத் தனமான சமாதானத்தை எப்படி ஏற்றுக்கொண்டன என்று தெரியவில்லை.

எனவே அந்தவாதம் செல்லாதவாதம் என்பதால் அதனை வெளியே சொல்லாமல் இருப்பதே தமிழ்க் கட்சிகளுக்கு ஒரு மரியாதையாக இருக்கும்.

தமிழர்கள் தரப்பில் உறுதியான கருத்துக்களை முன்வைத்து அக்கருத்துக்களை மதியூகத்துடன் முன்னெடுத்துச் செல்லக்கூடிய தலைவர்கள் இன்று எம்மிடையே இல்லை. அதற்கான முழுப் பொறுப்பும் புலிகளையே சாரும்.

இவ்வாறான நிலையில் தமிழ்க்கட்சிகள் நிலைமைகளை எவ்வாறு எதிர்க்கொள்ளப் போகின்றன? அரசாங்கத்தை எதிர்த்துப் பேசுவதாகக் காட்டிக் கொள்ளும் ஓரிரு தமிழர் அமைப்புக்கள் கூட அரசாங்கத்தின் தயவில்லாமல் தெற்கே இருக்க முடியாது.

புலிகளைப் பொறுத்த வரையில் தமிழ்பேசும் மக்களின் ஐக்கியம் என்ற வலிமையான கோட்டையைஉடைத்துப்போட்டு விட்டுத் தாங்களும் தனிமைப் பட்டுத் தமிழினத்தையும் தனிமைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

முஸ்லிம்களின் மீது புலிகள் மேற்கொண்ட வன்முறையும், முஸ்லிம்களைத் தமது சொந்தப் பகுதிகளிலிருந்து வெளியேற்றிய நடவடிக்கைகளும் தமிழ்பேசும் மக்கள் என்கின்ற ஐக்கியப்பட்ட கருத்தோட்டத்தை அக்கு வேறு ஆணிவேறாகப் பிரித்துப் போட்டு விட்டது.

தற்போது கிழக்கில் மட்டும் ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுமானால் வடக்கு-கிழக்குப் பிரிப்புக்கு சாதகமான முடிவு கிடைக்கக் கூடுமென்றே தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள் உள்ளே நினைத்துக் கொள்கிறார்கள்.

கிழக்கிலுள்ள முஸ்லிம் மக்கள் வடக்கு கிழக்கு இணைப்பு நிரந்தரமாக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கக் கூடும். அங்குள்ள சிங்கள மக்களின் வாக்குகளும் தாக்கம் செலுத்தக் கூடும்.

முஸ்லிம் மக்கள் உண்மையாகவே வடக்கு கிழக்கு இணைப்பிற்கு எதிரான கண்ணோட்டத்தைக் கொண்டிருப்பார்களேயானால் அதற்குப் பிரதான காரணம், புலிகளால் அவர்கள் பட்டகாயமாகவே இருக்கும்.

தமிழர்களும் முஸ்லிம்களும் இணைந்து வாழ்வதும் ஒருமித்த அரசியல் அபிலாசைகளை வெளியிடுவதுமே இரு சமூகங்களுக்கும் நீண்டகாலம் நன்மைபயப்பதாக இருக்கும்.

ஆளும் கட்சியில் இருக்கின்ற முஸ்லிம் தலைவர்கள் தமிழ், முஸ்லிம் ஐக்கியத்தை வலியுறுத்தும் அதே நேரத்தில் வடக்கு, கிழக்கு இணைப்புக் கெதிரான கருத்துக்களையே வெளியிட்டு வருகின்றனர் என்பதையும் கவனிக்க வேண்டும்.

பாராளுமன்றத் தெரிவுக்குழு சிபாரிசுகளை முன்வைத்துள்ள போதும் அரசாங்கம் அதனைக் கருத்தில் எடுத்து உடனடியாக நடைமுறைப்படுத்த முன்வரும் என்று கருத இடமில்லை.

தமிழர் அமைப்புக்கள் அனைத்தோடும் முரண்பட்ட நிலையொன்றை ஏற்படுத்திக் கொள்ளவும், தமிழர்களின் அபிலாசைகள் என்று சொல்லப் படுகின்ற வடக்கு-கிழக்கு இணைப்புக்கு மாறாக நடந்து கொண்டு தமிழர்களின் அதிருப்திகளைச் சம்பாதிக்க அரசாங்கம் விரும்பாது என்றே அவதானிகள் கூறுகின்றனர்.

கடந்த மாகாணசபைத் தேர்தலின் பின்னர், தமது பலவீனங்களைக் கண்டறிந்து அவற்றைக் களைந்து அடுத்த தேர்தலுக்குத் தயாராக வேண்டிய அவசியம் ஆளும் கட்சிக்கு இருக்கிறது.

இந்த நேரத்தில் ஒரு சிக்கலான பிரச்சினையை அரசாங்கம் கையாள முனையும் என்று கூறமுடியாது.

எப்படியோ ஒத்திப் போடப்பட்டுக் கொண்டிருந்தாலும் கூட நீறுபூத்த நெருப்பாகவே இருக்கும். வடக்கு, கிழக்கு இணைந்திருப்பதா, அல்லது பிரித்து விடுவதா என்ற பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டியது அவசியமாகும்.


இல்லாவிட்டால் இடைக்கிடையே தோன்றி பிரச்சினையை உருவாக்கிக் கொண்டிருக்கும் ஒரு விவகாரமாகவே அது இருக்கும்.

அரசியலே யாவற்றுக்கும் தடையாக இருக்கிறது.

வாக்கு வங்கிகளை பற்றிச் சிந்திக்காமல் அரசியல்வாதிகள் செயல்படத் துணிந்தால் தீர்வுகள் காண்பது சிரமம் அல்ல.

பிரதான பிரச்சனைகளுக்கான தீர்வுகள் தள்ளிப் போடப்படுவது நாட்டின் எதிர்காலத்திற்கே பாதகமாக அமையும் என்பதை அனைவரும் உணர வேண்டும். ●

## இது எங்கள் போக்குவரத்து



www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

ஜெனரல்

# கொப்பேகடுவ விவகாரம்: யாருக்கு யார் செய்த சதி?

அலசுவது – இராஜதந்திரி



**வட**பகுதிக்கான இராணுவத் தளபதியாக இருந்து கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் அமுக்க விசைக் குண்டு வெடிப்பொன்றில் பலியான லெப்டினன்ட் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ மற்றும் அவருடன் கொல்லப்பட்ட ஏனைய சிரேஷ்ட அதிகாரிகளின் மரணங்கள் குறித்த சர்வதேச விசாரணைக் குழுவின் விசாரணைகள் தற்போது விரிவான முறையில் இடம் பெற்று வருகின்றன.

நைஜீரியா, கானா, நியூஸிலாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த மூன்று நீதியரசர்கள் இந்த விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் உத்தரவின் பேரிலேயே இந்த சர்வதேச விசாரணைக்குழு அமைக்கப் பட்டது.

ஆனால் இன்று திரு.பிரேமதாசாவும் கோரமான முறையில் குண்டு வெடிப்பொன்றில் கடந்த மாதம் கொலையுண்ட நிலையில், சர்வதேச விசாரணைக் குழு ஜெனரல் கொப்பேகடுவவின் மரணத்தின் பின்னணியை அறிவதில் மும்முரமாக இயங்கிக் கொண்டிருக்கின்றது.

ஜெனரல் கொப்பேகடுவவும், அவரது துணை அதிகாரியான பிரிகேடியர் விஜயவிமலரத்ன, மற்றும் ஏனைய சிரேஷ்ட அதிகாரிகள் கொல்லப்பட்ட சிலவாரங்களில், அவர்களது மரணங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு, அறிக்கையொன்றை வெளியிடும் பொருட்டு இலங்கையரான முன்னாள் நீதியரசர் திரு. இஸ்மாயில் தலைமையில் விசாரணைக் கமிஷன் ஒன்று அமைக்கப் பட்டிருந்தது.

இந்த தனிநபர் விசாரணைக் கமிஷன் கொப்பேகடுவ கொலையுண்ட வடபகுதியின் அராலித் துறைப் பகுதிக்கும் நேரடி விஜயம் மேற்கொண்டு ஸ்தல விசாரணைகளையும் மேற்கொண்டிருந்தது. மேலும் இராணுவ, மற்றும் அரசாங்க வட்டாரங்களில் விசாரணைகளை மேற்கொண்டு இறுதியாக கொப்பேகடுவவினதும் அவரது சகாக்களினதும் மரணங்கள் நிலத்தில் புதைத்து வைக்கப் பட்ட அமுக்க விசைக்கண்ணி வெடியொன்றினால் ஏற்பட்டிருந்தன என்று அறிக்கையொன்றையும் வெளியிட்டிருந்தது.

ஆயினும் நீதியரசர் இஸ்மாயில் விசாரணைக் கமிஷன் தனது நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்த வேளை, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் முக்கியஸ்தர்களான மறைந்த திரு.லலித் அத்துலத் முதலி, மற்றும் அவரது சகாவான திரு.காமினி திஸாநாயக்கா ஆகியோர் கொப்பேகடுவ மரணத்தில் மர்மம் இருப்பதாக அறிவித்து ஒரு புதிய புரளியைக் கடந்த ஆண்டின் இறுதியில் கிளப்பி விட்டிருந்தனர்.

கொப்பேகடுவவின் மரணத்தில் மர்மம் இருப்பதாகக் கூறி தாம் வெளியிட்ட தகவல்களுக்கு ஆதாரமாக இங்கிலாந்தின் இராணுவ நிபுணரான திரு.ஜே.ஆர். வயட் என்பவர் கெப்பேகடுவ மரணம் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையொன்றையும் பெரியளவில் பகிரங்கப்படுத்தியிருந்தனர். அத்துடன் கொப்பேகடுவவின் விதவை மனைவியான திருமதி. லாலி கொப்பேகடுவவையும் பத்திரிகையாளர் முன்பாக கொண்டு வந்து, கொப்பேகடுவ மரணத்தில் மர்மம் இருப்பதாக அப்பெண்மணி மூலமாகவும் கூற வைத்திருந்தனர்.

இதனையடுத்தே மறைந்த ஜனாதிபதி. ஆர்.பிரேமதாசா, கொப்பேகடுவ மரணம் தொடர்பாக சர்வதேச விசாரணைக் கமிஷன் ஒன்றை அமைப்பதற்கு அங்கீகாரமளித்திருந்தார்.


லலித், காமினி ஆகியோர் பெரிதுபடுத்தியிருந்த இங்கிலாந்து நிபுணரான திரு.ஜே.ஆர். வயட்டின் கொப்பேகடுவ மரணம் குறித்த அறிக்கை இங்கிலாந்திலிருந்து வெளியிடப்பட்டதொன்றாகும்.

எந்தவொரு நபரையும் திரு. வயட் விசாரணை செய்திருக்கவில்லை. இலங்கைக்குக் கூட அவர் வந்திருக்கவில்லை. ஆனால் தமக்குக் கிடைத்த ஸ்தலத்தில் எடுக்கப்பட்ட படங்கள், மற்றும் வரைபடங்களின் அடிப்படையிலேயே நிபுணர் வயட் கொப்பேகடுவ மரணம் தொடர்பாக சந்தேகங்களை தெரிவித்து, தமது அறிக்கையை வெளியிட்டிருந்தார்.



கூடவே அந்த அறிக்கையின் இறுதியில் அடிக்குறிப்பாக, தாம் நடத்திய ஆய்வுகள் தமக்குக் கிடைத்த படங்கள் மற்றும் எழுத்து மூலமான தஸ்தாவேஜுக் களின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தனவென்றும், தமது அறிக்கை முடிந்த முடிவானதல்ல. அது ஒரு தனிப்பட்ட கண்ணோட்டம் மட்டுமே என்றும் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் லலித், காமினி ஆகியோர் திரு. வயட்டின் அறிக்கையை அடிப்படையாக வைத்து, ஜெனரல் கொப்பேகடுவ விவகாரத்தை ஒரு பெரும் அரசியல் சர்ச்சையாக மாற்றிவிட முடிவு செய்திருந்தனர். இச்சர்ச்சையின் மூலம் ஜனாதிபதி பிரேமதாசாவின் ஆட்சிக்கு நெருக்கடியைக் கொடுத்து, அரசியல் ரீதியாகத் தமது கைகளை ஓங்கச் செய்வதே அந்த அரசியல் இரட்டையர்களின் உள்நோக்கமாகக் காணப்பட்டது.



எனவே ஜெனரல் கொப்பேகடுவ மரணம் ஓர் 'உள்வீட்டு வேலை' என்று பிரேமதாசா அரசுக்கு மாசு கற்பிப்பதன் மூலம் அரசியல் சதியொன்றை மேற்கொள்ள லலித்–காமினி ஆகியோர் நன்கு திட்டமிட்டிருந்தனர்.

ஆனால் இன்று ஜனாதிபதி பிரேமதாசா மீது குற்றஞ் சுமத்த முயன்ற திரு லலித் அத்துலத் முதலியும், அக்குற்றச்சாட்டை சர்வதேச விசாரணை மூலம் முறியடிக்க முயன்ற ஜனாதிபதி பிரேமதாசாவும் உயிரோடில்லாத நிலையிலேயே கொப்பேகடுவ விசாரணை வெறுமனே ஒரு சுவாரஸ்யமான விவகாரமாக பத்திரிகைகள் வாயிலாக வெளிவந்த வண்ணமிருக்கின்றது.

ஜெனரல் கொப்பேகடுவ, மற்றும் அவரது சிரேஷ்ட சகாக்களைப் பலியெடுத்த அமுக்க விசைக் குண்டு தமிழீழ விடுதலைப் புலிகளினால் நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்ததொன்று என சிரேஷ்ட உதவி அரசாங்கப் பகுப்பாய்வாளர் திரு.காமினி குணதிலக்கா திட்டவட்டமாக சர்வதேச விசாரணைக் கமிஷன் முன்பாக சாட்சியமளித்திருந்தார்.

அத்துடன் தமது சாட்சியத்துக்குச் சான்றுகளாக வடக்கே அராலித்துறையில் குண்டு வெடிப்பு இடம்பெற்ற இடத்தில் காணப்பட்ட பாரிய குழியில் இருந்து கண்டெடுக்கப்பட்ட, வெடித்த குண்டின் உலோகத் தகடுகள் பற்றியும் விரிவான விளக்கத்தை திரு.குணதிலக்கா வழங்கியிருந்தார்.

திரு. குணதிலக்கா இலங்கையில் மட்டுமல்லாது பிரிட்டனில் ஜரிஷ் குடியரசுக் கெரில்லாக்கள் நடத்திய குண்டுவெடிப்புக்கள் பற்றியும் ஆய்வுகளை மேற்கொண்ட அனுபவமுடையவர். எனவே குண்டு வெடிப்புக்கள், மற்றும் அவற்றின் பாதிப்புக்கள், குண்டுகளை வெடிக்கவைக்கும் முறை என்பன குறித்து தெளிவான விளக்கத்தைக் கொண்டவராகவே திரு. குணதிலக்கா காணப்படுகின்றார்.

## பாசாங்கு செய்யும் பாராளுமன்றத் தெரிவுக்குழு

இதே வேளை தமிழீழ விடுதலைப் புலிகள் இயகக்த்தினர் கண்ணி வெடித் தாக்குதலில் மிகுந்த நிபுணத்துவம் பெற்றவர்களாகவே காணப்படுகின்றனர். அவர்களது இராணுவ ரீதியிலான வெற்றிகளில் முக்கிய மானவை கண்ணி வெடித் தாக்குதல்கள் மூலமாகக் கிடைத்தவையாகும்.

சில வருடங்களுக்கு முன்னர் திருகோணமலைப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவிருந்த பிரிகேடியர் லக்கி விஜயரத்ன, மற்றும் ஒரு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஆகியோர் ஜீப் வண்டியொன்றில் பயணஞ் செய்த வேளையிலும் அமுக்கவிசைக் கண்ணி வெடியொன்றில் சிக்கி உயிரிழந்தனர்.

இது தவிர முன்பு வடபகுதி இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவிருந்த மேஜர் ஜெனரல் ஜெரிசில்வா, புலிகளின் கண்ணி வெடித்தாக்குதல் பற்றி ஒரு தடவை விமர்சித்தபோது, இந்திய அமைதிப்படை உயரதிகாரிகளும் ஆச்சரியமடையுமளவுக்கு புலிகளின் கண்ணி வெடியொன்று கனரக இந்திய இராணுவ டாங்கி ஒன்றை தாறுமாறாகத் தகர்த்தெறிந்து விட்டிருந்ததெனக் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் புலிகளின் அமுக்க விசைக் கண்ணி வெடித் தாக்குதலிலேயே ஜெனரல் கொப்பேகடுவவும் அவரது சகாக்களும் கொல்லப்பட்டிருப்பது தெளிவாகியுள்ளது. ■

இலங்கை அரசியலைப் பொறுத்தவரை வடக்கு–கிழக்கு விவகாரத்தை தீர்த்து வைப்பதில் ஆரோக்கியமான அறிகுறிகள் தென்படுவதாக இல்லை.

பாராளுமன்றத் தெரிவுக்குழு நீண்ட நாட்களுக்குப்பின் மீண்டும் அண்மையில் கூடியிருந்தது. ஆனால் இத்தெரிவுக்குழு இது வரை காலமும் மேற்கொண்ட நடவடிக்கைகள் எந்த விதத்திலும், முன்னேற்றகரமானதாகக் காணப் படவில்லை.

45 பேர் அங்கம் வகித்த பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் இடம் பெற்றிருந்த தமிழ் அரசியல் கட்சிகள் தெரிவித்த யோசனைகள் தகுந்தவகையில் ஏற்றுக் கொள்ளப் படவில்லையென அத்தமிழ்க் கட்சிகளின் உறுப்பினர்கள் அதிருப்தி வெளியிட்டிருந்தனர். கூடவே தம்மைத் திருப்திப்படுத்தாத இடைக் கால அறிக்கையைப் பாராளுமன்றத் தெரிவுக்குழு முன் வைத்ததையடுத்து, தமிழ் கட்சிகள் தெரிவுக் குழுவிலிருந்தும் வெளிநடப்புச் செய்திருந்தன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் (இ.தொ.கா) தலைவர் திரு. செள. தொண்டமான் அவர்களும் தெரிவுக்குழு நடவடிக்கையில் அதிருப்தி தெரிவித்து அதிலிருந்தும் வெளியேறியிருந்தார்.

எனவே பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் கடந்தகால நடவடிக்கைகள் ஒரு கண் துடைப்புப் போன்றே காணப் படுகின்றன.

வடக்கு–கிழக்குப் பிரச்சினையின் தாக்கத்தை நேரடியாக எதிர்நோக்கும் தமிழ் அரசியல் கட்சிகள் தமது தீர்வு யோசனைகளை பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம் தெரிவித்திருந்தன.

ஆனால் தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கும் பிரதான அரசியல் கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி என்பன இதுவரை தமது யோசனைகள் எதனையும் முன் வைக்கவில்லை.

தமிழ்க்கட்சிகள் தமது தீர்வு யோசனையாக வடக்கு–கிழக்கு மாகாணங்களின் இணைப்பையும் மற்றும் அந்த இணைப்பில் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பையும் தனித்துவத்தையும் பேணக்கூடியவை என்று கருதப்பட்ட சில யோசனைகளையும் முன்வைத்திருந்தன.

ஆனால் பாராளுமன்றத் தெரிவுக்குழு பிரதான அரசியல் கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றின் தீர்வு யோசனைகள் எதுவும் முன்வைக்கப்படாத நிலையில், வடக்கு கிழக்கு நிலவரம் குறித்து இடைக்கால அறிக்கையொன்றை சில மாதங்களுக்கு முன்னர் வெளியிட்டிருந்தது.

இன்று நிலவும் வடக்கு–கிழக்குப் பிரச்சினை அப்பிராந்தியத்துக்கு மட்டும் உரித்தான ஒரு பிரச்சினையாகக் காணப்படவில்லை. வடக்கு–கிழக்கு பிரச்சினை முழுநாட்டையும் பாதிப்படையச் செய்துள்ளது.

எனவே இனியும் இப்பிரச்சினையை நீடிக்க வைத்து அரசியல் தீர்வொன்றை காண்பதில் தாமதத்தை ஏற்படுத்தும் பட்சத்தில், அரசியல் ரீதியிலான நடவடிக்கைகளில் மக்கள் பூரணமாக நம்பிக்கையிழக்கும் சூழ்நிலையே தோன்ற ஆரம்பிக்கும்.

பாராளுமன்றத் தெரிவுக்குழு வடக்கு–கிழக்குப் பிரச்சினையை விரைவாகவும், நடைமுறைச் சாத்தியமாகவும் அணுக முன்வர வேண்டும்.

இலங்கையில் வடக்கு–கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினை இன்று, நேற்று ஏற்பட்டதொன்றல்ல. இப்பிரச்சினை இன்று பல பரிமாணங்களையும் பெற்று ஒரு பூதாகாரமான நிலையை அடைந்துள்ளது.

எனவே இப்பிரச்சினையை அணுகுவதற்கு துணிகரமான அரசியல் முயற்சிகளே இன்று தேவைப்படுகின்றன. இதை விடுத்து பாராளுமன்றத்திலும், நீதிமன்றங்களிலும் பிரச்சினைக்குரிய விடயங்களை ஒத்திப் போடுவது போல, பாராளுமன்றத் தெரிவுக்குழுவிலும் ஒத்திவைப்புக்களும், தாமதங்களும் தொடருமானால் வடக்கு–கிழக்குப் பிரச்சினை மேலும் மோசமான நிலையையே அடையும் எனக் கொள்ளலாம்.

இன்று லட்சக்கணக்கான மக்கள் அடிப்படைவசதிகள் கூட கிடைக்காத நிலையில் வடக்கு கிழக்கில் மரண அவஸ்தைக்குள்ளாகியுள்ளனர்.

இந்நிலையில் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் நடிவடிக்கைகள் அரசியல் ரீதியிலான கண்ணோட்டத்தைவிட மனிதாபிமானக் கண்ணோட்டத்தைக் கொண்டதாகத் துரிதமடைய வேண்டுமென்பதுவே வடக்கு- கிழக்கு மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

எனவே அம்மக்களின் இந்த எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யாத வரை பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் நடவடிக்கைகளை வெறுமனே ஒரு 'பாசாங்கு' என்றே அர்த்தங்கொள்ள முடியும்.



# அமெரிக்காவுக்கு பசுபிக் தேவை!

கடந்த காலத்தில் அமெரிக்கா பசுபிக் பிராந்தியத்தில் நிலைத்திருந்து தனது நலனையும் கவனித்துக் கொண்டு அந்தப் பிராந்தியத்தின் மேம்பாட்டிற்கும் ஓரளவு உதவியது.

தொடர்ந்து பசுபிக் பிராந்தியத்தில் நிலைத்திருப்பதும் அங்கு தன்னை ஒரு சக்தியாகத் தக்க வைத்துக் கொள்ளுவதும் அமெரிக்காவின் அக்கறையாகும்.

பசுபிக் பிராந்தியத்தில் அமெரிக்காவின் நம்பகமான பங்காளி ஜப்பான் ஆகும். 1945ம் ஆண்டின் பின்னர் அமெரிக்காவின் உதவிகள் ஜப்பானுக்குக் கிடைத்து வந்தன. தற்போதுள்ள புதிய சிக்கல்களுக்கேற்ப நடைமுறைகளை வகுக்க வேண்டிய தேவை கிளின்டன் நிர்வாகத்திற்கு ஏற்பட்டுள்ளது.

வர்த்தக ரீதியான போட்டிகளும் தேசிய வாதங்களும் தலையெடுத்துள்ள இக்காலகட்டத்தில் அமெரிக்கா தனது பங்காளிகளுடன் கொண்டுள்ள தொடர்புகளை அதிகாரத் தோரணையில் இனிமேலும் பேணிக்காக்க முடியாது.

ஜப்பானிலும், தென்கொரியாவிலும் இருந்த தொண்ணூறாயிரம் அமெரிக்கத் துருப்புகளை அமெரிக்கா பின்வாங்கத் தொடங்கி இருக்கிறது. அமெரிக்காவின் ஜனாதிபதியாக ஜோர்ஜ் புஷ் இருந்த போது இந்தப் பின்வாங்கல் ஆரம்பித்துவிட்டது. இப்போது கிளின்டன் நிர்வாகமும் பின் வாங்கல் தொடருமென்று அறிவித்துள்ளது. ஆனாலும் பசுபிக் பிராந்தியத்தில் தனது பிடியை அமெரிக்கா தளர்த்தும் என்று சொல்லிவிட முடியாது.

ஆசிய-பசுபிக் பிராந்தியத்தில் ஓரளவு இராணுவ பலத்தை அமெரிக்கா கொண்டிருப்பது, அமெரிக்காவின் பொருளாதார நலனுக்கு அவசியமாகும். எதிர்காலத்தில் ஜப்பானுடன் மேலும் உறவுகளைப் பலப்படுத்துவதும் அமெரிக்காவின் ஆசிய- பசுபிக் பிராந்திய வெளியுறவுக் கொள்கையில் பிரதானமானதாக இருக்கும்.

தென்கிழக்காசிய நாடுகளின் சங்கம் போன்ற அமைப்புகள் உருவாகுவது ஆசியாவின் எதிர்காலத்தை நிர்ணயிக்க தகுதி வாய்ந்ததாக அமையுமென்று மலேசியாவின் பிரதமர் மொகாதீர் முகமது கூறியிருக்கிறார். "கிழக்காசியா உலகின் மையம் என்ற நிலை மீண்டும் ஏற்படப் போவதில்லை. ஆனால் எமது உலகின் மையமாகவேனும் நாம் விளங்க வேண்டும்" என்று அவர் கூறியுள்ளார். தென்கிழக்காசிய நாடுகள் சங்கம் போன்ற அமைப்புக்களோடு இணைந்து அப்பிராந்திய நாடுகளின் பாதுகாப்புத் தொடர்பாக ஆராய்வதற்கு அமெரிக்கா தயாராக இருக்கிறது.

## செஞ்சீனம் நிறம் மாறுகிறது

சீனாவில் அதிக உற்பத்திப் பெருக்கம் ஏற்பட்டிருப்பது மக்கள் தொகை விடயத்தில் தான். இப்போது கொஞ்சம் மாற்றம் தெரிகிறது. ஏனைய துறை முன்னேற்றங்களிலும் உற்சாகம் காட்டத் தொடங்கியிருக்கிறார்கள்.

ஏழு வருடங்களுக்கு முன்னர் பெய்ஜிங் றியானன்மன் சதுக்கம் ஆயிரக்கணக்கான மாணவர்களின் இரத்தத்தில் நனைந்தது. சுயசிந்தனைக்கான மாணவர்களின் போராட்டத்தை செஞ்சீனா சினம் கொண்டு இரும்புக்கரத்தால் ஒடுக்கியது.


இப்போது அதே சீனா தன் முகத்தை மாற்றிக்கொள்ளத் தொடங்கிவிட்டது. தனியுடமை மேலோங்கத் தொடங்கியிருக்கிறது. தனியார் வர்த்தகத்தில் ஈடுபடுவோர் தொகை பெருகிவிட்டது. வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் இணைந்து வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கு, முன்னர் இருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு விட்டன. அதனால் லட்சக்கணக்கானோர் வர்த்தகத்தில் ஈடுபட்டுச் செல்வம் குவிப்பதில் போட்டி போடுகின்றனர்.

இதே வேளையில் சிச்சாவுண் மாகாணத் தலைநகரான செங்டுவில் கடந்த வருடம் முதல் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பெறுவதற்கான செய்மதியுடன் நேரடியாக தொடர்பு கொள்ளக் கூடிய கோபுரங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

சீனாவில் சகல பகுதிகளிலும் ஒரே விதமான முன்னேற்றம் ஏற்பட்டு விடவில்லை. சில பகுதிகளில் செஞ்சீனத்தை உருவாக்கிய மாசேதுங் மறைந்த செய்தி கூட அங்குள்ளவர்களுக்குத் தெரியவில்லை. எனினும் தனியுடமை தலையெடுத்தால் ஏற்றத் தாழ்வுகள் மேலும் அதிகரிக்கும் என்றும் அவதானிகள் கூறுகின்றனர்.

## புத்திசாலிப் பிள்ளை

ஒருவருக்கு மூன்று பையன்கள். இவர்களில் யார் குடும்பத்துக்கேற்றவன்- புத்திசாலி என்பதை அறிய ஒரு சிறு பரீட்சை வைத்தார் தகப்பனார். மூவரிடமும் தலா நூறு ரூபா வீதம் கொடுத்து தங்கள் வீட்டிலுள்ள அறையைக்காட்டி, இவ்வறை முழுவதையும் நிரப்பக் கூடிய பொருளை ஒவ்வொருவரும் வாங்கிவரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.



மூத்த மகன் நூறு ரூபாவைக் கொடுத்து முழு பதுக்கும் புல்லை வாங்கிக் கொண்டு பரப்பி வைத்தான். இரண்டாவது மகன் மூடை மூடையாகப் பஞ்சைக் கொண்டுவந்து அறை முழுதும் பரப்பினான். ஆனால் கடைசி மூன்றாவது மகன் 10 ரூபாய் செலவிட்டு ஒரு விளக்கை வாங்கி வந்து அறையுள் ஏற்றிவைத்தான். வீடு முழுவதும் ஒளி பரவி எங்கும் பிரகாசமாகவிருந்தது. இதனைக் கண்ட தகப்பனார் மூன்றாவது மகனையே புத்திசாலி என்று ஏற்றுக்கொண்டார்.

இந்திரா காங்கிரஸ் கட்சிப் பிரமுகர்கள் சூழ்ந்திருந்த ஒரு கூட்டத்தில் காங்கிரசின் பேச்சாளரான வி.என். காட்கில் இக்கதையைக் கூறியபோது ஏனையோர் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தனர். கதை முடிவில் "அந்தப் புத்திசாலி மகன் தான் நரசிம்மராவ். அவர்தான் நாடெங்கணும் ஒளிமயமாவதற்காகப் பாடுபடுகிறார்" என்றார். பலதரப்பட்ட உணர்ச்சிகள் அவ்விடத்தில் தென்பட்டன. அப்போது ஒரு குரல் கேட்டது. "மீதமுள்ள 90.00 ரூபாவையும் கட்சிக்கணக்கில் சேர்த்துவிடச் சொல்லுங்கள்" என்றது.

## உலக ரவுண்டப்

### கிரிக்கட் ஆடுகிறார் நவாஸ் செரீப்! குலாம் இஷாகின் ஆட்டம் முடிகிறதா?

பாகிஸ்தானில் தனது பிரதமர் பதவியைத் தப்ப வைத்துக் கொண்டுள்ள திரு. நவாஷ் செரிப் ஒரு கிரிக்கெட் விளையாட்டுப் பிரியராவார்.

பாகிஸ்தான் ஜனாதிபதி திரு.குலாம் இஷாக் கானினால் பிரதமர் பதவியிலிருந்தும் நீக்கப்பட்டிருந்த திரு . நவாஷ் செரிப் உயர் நீதிமன்றம் வரை சென்று வாதாடி இறுதியில் தமக்குச் சார்பாகவே நீதிமன்றத் தீர்ப்பையும் பெற்றுக் கொண்டுள்ளார்.



இதனையடுத்து இரு மாதங்களுக்கு முன்னர் பதவி நீக்கம் செய்யப்பட்ட திரு. நவாஷ் செரிப் தற்போது மீண்டும் பாகிஸ்தான் பிரதமராகியுள்ளார்.

எனவே தமது வெற்றிக்காகப் போராடிய களைப்பை நீக்கவும், தமது வெற்றியை தமக்குப் பிடித்த விதத்திலேயே கொண்டாடும் வகையிலுமே திரு. நவாஷ் செரிப் லாகூரில் கடந்த வாரம் கிரிக்கெட் பந்தயமொன்றில் பங்குபற்றியிருந்தார்.

பாகிஸ்தானில் திரு. நவாஷ் செரிப் மீண்டும் பிரதமராகப் பதவிக்கு வந்துள்ளதையடுத்து ஜனாதிபதியாக இருக்கும் திரு. குலாம் இஷாக் நெருக்கடி நிலையை எதிர் நோக்கியுள்ளார்.

திரு நவாஷ் செரிப் மீண்டும் தமது பதவியைக் கைப்பற்றிய பின்னர் மேற்கொண்ட முதலாவது நடவடிக்கையாக பாகிஸ்தான் ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்துவதற்கு, பாராளுமன்றத்திடம் இருந்து ஆதரவைக் கோரியுள்ளார்.

இதற்கென பாகிஸ்தான் எதிர்கட்சித் தலைவியும், பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவியுமான திருமதி. பெனாஸிர் பூட்டோவின் ஆதரவையும் திரு. நவாஷ் செரிப் நாடியுள்ளார்.

திரு. நவாஷ் செரிப்பின் இந்த நடவடிக்கை எவ்வளவு தூரம் வெற்றியளிக்கும் என்பது கேள்விக்குரிய விடயமே. இருந்த போதிலும், ஜனாதிபதி பதவியிலுள்ள திரு. குலாம் இஷாக்கான் தமது கௌரவத்தைப் பாதுகாக்க வேண்டுமானால் தாமாகவே முன்வந்து தமது பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டுமென்றே பாகிஸ்தானில் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

பாகிஸ்தானின் அரசியல் நிலவரம் எப்போதும் ஒரு 'கலாட்டா' விவகாரமாகவே இருந்து வந்துள்ளது. இதன் காரணமாக பாகிஸ்தானில் பல தடவைகள் இராணுவ ஆட்சியும் ஏற்பட்டிருந்தது. எனவே இந்த இராணுவ ஆட்சியின் இறுதிக் கட்டமாகவே ஜெனரல் ஸியாவுல் ஹக்கின் ஆட்சியும் சிலவருடங்களுக்கு முன்னர் அவரது மரணத்துடன் நிறைவெய்தியிருந்தது.

ஜெனரல் ஸியாவுல்ஹக்கின் மரணத்தின் பின்னர் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் பாகிஸ்தான் மக்கள் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியிருந்தது. ஆனால் திருமதி. பெனாஸிர் பூட்டோவை தலைமையாகக் கொண்ட பாகிஸ்தான் மக்கள் கட்சி குறுகிய காலமே பதவியிலிருந்தது. தொடர்ந்து திரு. நவாஷ் செரிப் பெனாஸிரிடமிருந்தும் ஆட்சியைக் கைப்பற்றியிருந்தார்.


திருமதி. பெனாஸிர் பூட்டோ பாகிஸ்தான் அரசியலில் ஓர் உறுதிமிக்க தலைவராகவே காணப்படுகின்றார். ஆயினும் அவரால் ஆட்சியை மீண்டும் கைப்பற்றுமளவுக்கு ஓர் ஆரோக்கியமான தேர்தல் சூழ்நிலை இன்னும் பாகிஸ்தானில் உருவாகவில்லை.

திரு நவாஷ் செரிப்பை மீண்டும் பிரதமராக பதவியில் அமர்வதற்கு வழிவகுத்த பாகிஸ்தான் உயர்நீதிமன்றத் தீர்ப்பை எதிர்க்கட்சித் தலைவி திருமதி. பெனாஸிர் பூட்டோ வெகுவாகக் கண்டித்துள்ளார்.

ஜனநாயக நாடொன்றில் பிரதமர் பதவியை நிர்ணயிப்பது மக்களின் தீர்ப்பே தவிர நீதிமன்றத் தீர்ப்பல்ல என்று திருமதி. பெனாஸிர் பூட்டோ கடந்த வாரம் பாகிஸ்தானில் இடம்பெற்ற பொதுக்கூட்டமொன்றில் குறிப்பிட்டிருந்தார்.

கூடவே திரு. நவாஷ் செரிப் குளறுபடிகளைச் செய்து முறையற்ற விதத்தில் ஆட்சியைக் கைப்பற்றிய ஒருவர் என்றும் திருமதி. பூட்டோ குற்றஞ் சாட்டியுள்ளார்.

ஆனால் திரு. ஷெரிப் இக் குற்றச் சாட்டுகளையெல்லாம் செவிமடுப்பவராகக் காணப்படவில்லை. எந்தவொரு கண்டனச் சாட்டைக்கும் தாக்குப் பிடிக்கக் கூடியவகையிலேயே தாம் இருப்பதை மீண்டும் பிரதமராகிய பின், கிரிக்கெட் வீரராகப் பந்தாடி திரு.நவாஷ் செரிப் நிரூபித்துள்ளார்.



## சமைப்போம் சுவைப்போம்

### ஆக்கித் தருபவர்-அன்ன பூர்ணா

#### சுலப மீன் வறுவல்

**தேவையான பொருட்கள்:**

மீன் 500 கிராம். புளி 25 கிராம். எண்ணெய் 100கிராம். மிளகாய்ப் பொடி 20 கிராம், மஞ்சள் பொடி ஒரு மேசைக்கரண்டி, உப்பு தேவையான அளவு.

**செய்முறை**

மீனைச் சுத்தம் செய்து துண்டங்களாக நறுக்கிக் கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் புளியையும் உப்பையும் போட்டு சிறிது தண்ணீர் விட்டு ஊற வைக்கவும். சிறிது நேரத்திற்குப் பிறகு புளி உணவைக் கெட்டியாகக் கரைத்து ஒரு பாத்தி ரத்தில் விடவும். மிளகாய்ப்பொடி, மஞ்சள்பொடியைப் போட்டு நன்றாகப் பிசறி விடவும்.

வாணலியை அடுப்பில் வைத்து எண்ணெயை விடவும். அது நன்றாகக் கொதித்ததும் மீன் துண்டங்களைப் போட்டுச் சிவக்க வறுபட்டதும் இறக்கி வைத்து உபயோகிக்கவும்.

#### சுவையான சுறாப்பிட்டு

**தேவையான பொருட்கள்:**

சுறாமீன் 400 கிராம், வெங்காயம் 50 கிராம், எண்ணெய் 50 கிராம், பச்சை மிளகாய் 10 கிராம், பூண்டு 10, சீரகம் ஒரு மேசைக்கரண்டி, மிளகாய்ப்பொடி, இஞ்சி ஒரு துண்டு, கறிவேப்பிலை சிறிது, உப்பு தேவையான அளவு.

**செய்முறை.**

மீனைச் சுத்தம் செய்து துண்டுகளாக நறுக்கி ஒரு பாத்திரத்தில் போடவும். மஞ்சள் பொடியை மீன் முழுகும் அளவு தண்ணீர் விடவும். அடுப்பில் வைக்கவும். வெந்ததும் இறக்கித் தண்ணீரை வடித்து விடவும். சூடு ஆறியதும் மீன் துண்டுகளிலிருந்து தோலையும் எலும்பு, முள் ஆகியவற்றை நீக்கி விட்டு மற்றவற்றை நன்றாகப் பிசைந்து வைக்கவும்.

பூண்டு, இஞ்சி, சீரகம் மூன்றையும் தனித்தனியே விழுதாக அரைத்துக் கொள்ளவும்.

வெங்காயம், பச்சை மிளகாயை பொடியாக நறுக்கவும்.

வாணலியில் எண்ணெய் விட்டு அடுப்பில் வைக்கவும். எண்ணெய் கொதித்ததும் வெங்காயம், பச்சை மிளகாயைப் போட்டுச் சிவக்க வதக்கவும். பிறகு அரைத்த மசாலாவைப் போட்டுக்கிளறவும். வாசனை வந்ததும் மீன் பிசையலைப் போட்டுக் கிளறவும். எல்லாமாகச் சேர்ந்து நறுமணம் வந்ததும் இறக்கி வைத்து உபயோகிக்கவும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# மருத்துவப் பக்கம்

## அறிந்து கொள்ளுங்கள்



## மூளைக்கு வலுவூட்டுகிறது எஸ்ட்ரோஜன்

**எஸ்ட்ரோஜன் உண்மையில் ஒரு மந்திரசக்தி வாய்ந்த ஹோர்மோன்.**

**வயதான பெண்களின் இருதய நோயையும் எலும்பு தொடர்பான நோய்களையும் தடுக்க வல்லது இது. அதுமட்டுமல்லாமல் மூளையின் உயிரணுக்களை சீர்படுத்துவதுடன் நினைவாற்றலையும் அதிகரிக்க வைக்கிறது.**

"நரம்புகளிலுள்ள உயிரணுக்கள் சிதைவடைவதை தடுக்க வல்லது எஸ்ட்ரோஜன்" என்று மான்ஹாட்டனிலுள்ள றொக்பெல்லர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் ஹோவாட் பில்லிட் கூறுகிறார். நரம்பின் உயிரணுக்களுக்கு ஏதாவது காயம் ஏற்பட்டால் அதனை உடனடியாகக் குணப்படுத்த வல்ல எஸ்ரோஜன், அவற்றின் உற்பத்திக்கும் உதவுவதுடன் அதன் செயலுக்கும் ஊக்கமளிக்கிறது என்று அவர் மேலும் தெரிவிக்கிறார்.

வயதான பெண்களுக்கு மாதவிடாய் நின்றதும் எஸ்ட்ரோஜன் ஹோமோன் உற்பத்தியும் உடலில் மெல்ல நின்று விடுகிறது. இவர்களுடைய எலும்புகள் வலுவிழந்துவிடாமலும் இருதயம் நோயுறாமலும் தடுக்கவல்ல ஆற்றல் இந்த ஹோமோனுக்குண்டு. சிந்தனையை ஒரு முகப்படுத்தவும் நினைவாற்றலை விருத்தி செய்து ஊக்கம் உண்டாக்கவும் சிறந்த சுரப்பியாக இது விளங்குகிறது.

மாதவிடாய் நின்றுவிட்டால் அல்லது அதற்குரிய காலத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் போது ஏற்படும் சில நோய்களிலிருந்தும் உங்களைக் காத்துக்கொள்ள ஒரு மருத்துவரை அணுகி ஹோர்மோன் சிகிச்சையைப் பெற்றுக்கொண்டால் நினைவாற்றலை மீண்டும் பெறுவீர்கள். நோய்களும் குணமாகும்.

## பக்கவாதமா?



பக்கவாதத்தால் பீடிக்கப்பட்டவர்கள் வீட்டில் சிறிய வேலைகளைச் செய்யலாம். இது அவர்களது மனநிலையில் மாற்றத்தைத் தரும். நோயாளிகளைச் சார்ந்தவர்கள், அவரது நோய், படிப்படியாக குணமாகி வருவதை எடுத்துச் சொல்வதோடு அவர்களுக்கு ஆறுதல் வார்த்தை சொல்லி ஊக்கப்படுத்த வேண்டும். பொழுதுபோக்குகள், நண்பர்களுடன் வெளியில் செல்வது போன்ற காரியங்கள் நோயாளியின் மன ஊக்கத்திற்கு வழிவகுக்கும். இதனால் வழக்கமாக இத்தகைய நோயாளிகள் அதிகமாக உணர்ச்சி வயப்படுதலும், குறைதலும் தவிர்க்கப்படுகிறது.

## நீண்ட பயணம் செய்பவர்கள் கவனிக்க



பஸ்ஸில், ரயிலில், விமானத்தில் நீண்ட தூரம் அல்லது நீண்ட நேரம் நீங்கள் பயணம் செய்பவரா? அல்லது அத்தகைய பயணத்தில் ஆர்வம் உடையவர்களா? அப்படி யானால் நீங்கள் இதைப் படியுங்கள்:

பஸ்ஸில், ரயிலில், விமானத்தில் நிலையாக உட்கார்ந்தபடி, அசைவின்றி அமர்ந்து செல்வது சில சமயங்களில் மரணத்தைக்கூட விளைவித்து விடும் என்று மருத்துவ ஆராய்ச்சித் தகவல் வெளியாகி இருக்கிறது.

பஸ், ரயில், விமானம் போன்ற வாகனங்களில் அசைவின்றி, நீண்ட தூரம் பயணம் செய்யும்போது ரத்தக் குழாயில் அடைப்பு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.


இத்தகைய இரத்தக்குழாய் அடைப்புகள் கால்கள், கைகள், இடுப்புப்பகுதியில் ஏற்பட அதிக வாய்ப்புகள் இருக்கின்றன. ரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்படும் போது அது இருதயத்தைக் கூட தாக்க நேரிடுகிறது. இதனால் மூச்சுவிட-சுவாசிக்க சிரமம் ஏற்படுகிறது. அதிகமான நெஞ்சுவலிக்கு ஏதுவாகிறது.

குறிப்பாக வயதானவர்கள், அதிகமான கொழுப்புச் சத்தினை உடையவர்கள், கர்ப்பிணிகள், அதிக இரத்தப்போக்கு உடையவர்கள் நீண்ட பயணம் மேற்கொள்வது ஆபத்தில் முடியலாம். இதய நோயாளிகளும் இதற்கு விதி விலக்கல்ல. நல்ல தேக ஆரோக்கியம் உடையவர்கள் மட்டுமே இத்தகைய இடர்பாடுகளில் இருந்து தப்பிக்கலாம்.

பொதுவாக நீண்டதூரம் பயணம் செய்பவர்கள் தொள தொள (லூஸ்ஃபிட்டிங்) என உள்ள ஆடைகளை அணிவது நல்லது என ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். தொள தொளவென இருக்கும் ஆடைகளை அணிவதன் மூலம் ரத்த ஓட்டம் சீராக நடைபெறும்.

பஸ்ஸில், ரயிலில், விமானத்தில் பயணிக்கும் போது சிறிது நேரத்திற்கு ஒரு முறை கை, கால்களை நீட்டி மடக்கி விடுதல், மூச்சை உள்ளிழுத்து மெதுவாக வெளிவிடுதல் மிக்க நலம் பயக்கும்.


## வீட்டுக் குறிப்புக்கள்



வீட்டிலுள்ள இரவு விளக்கு அதிக வெளிச்சமாக எரிந்தாலோ அல்லது லாம்ப் ஷேட் இல்லாமல் இருந்தாலோ விதவிதமான கலர் பேப்பர்களையோ, அல்லது பரிசுப் பொருட்களின் மீது சுற்றப் பயன்படும் பேப்பர்களையோ வாங்கி உங்களுக்குப் பிடித்தமான வடிவில் வெட்டி இரவு விளக்கின் மீது மாட்டி விடுங்கள். புதுமையாகவும், அழகாகவும் இருக்கும். உங்களது பிரச்சினையும் தீரும்.



கண்ணாடி டம்ளர்களைக் கழுவி, ஒரு செய்தித்தாளின் மீது ஒரு மணிநேரம் கவிழ்த்து வைத்திருந்து, பிறகு அதை லேசாக ஒரு துணியில் துடைத்து பீரோவில் வைத்து விடுங்கள். கண்ணாடி டம்ளர்கள் புது மெருகு குலையாமல், கீறல் விழாமல் நன்றாக இருக்கும்.



பெரிய ஹோலில் இருந்து ஒரு சிறு பகுதியை படுக்கை அறையாக தடுக்க விரும்பினாலும், அடுத்தவீட்டு சத்தம் உங்கள் படுக்கை அறைக்குக் கேட்காமல் இருக்கவும், மூங்கில் தடிகளை வரிசையாக இணைத்து வைத்து விடுங்கள் போதும்.

உங்கள் வீட்டைச் சுற்றி சிறிதளவு வெற்றிடம் இருந்தாலும், அப்படியே விட்டுவிடாதீர்கள். ஏதாவது பூச்செடிகளை வளர்க்கவும். குரோட்டன்ஸ், புல் வகைகளைக் கூட வளர்க்கலாம். இது காற்றில் கலந்து வரும் மாசுக்களைக் கட்டுப்படுத்தும். சுத்தமான காற்று கிடைக்க வழி செய்யும். கண்ணுக்குக் குளிர்ச்சியாகவும் இருக்கும்.



ஜன்னல் கண்ணாடி, புகைப் படம் உள்ள கண்ணாடி பிரேம், கண்ணாடி போடப்பட்ட சாமி படங்கள் ஆகியவற்றைச் சுத்தம் செய்ய சாதாரண துணியைப் பயன்படுத்துவதைவிட, பனியன் துணி போன்ற மென்மையான துணியைப் பயன்படுத்த வேண்டும். இதனால் கண்ணாடி நன்கு சுத்தமாவதோடு, கீறல் ஏதும் விழாமலும் இருக்கும்.

வீட்டுக்குள் வைத்திருக்கும் செடிகளுக்கு எவ்வளவு வெப்பமான நாளாக இருந்தாலும் சிறிதளவே தண்ணீர் ஊற்றினால் போதுமானது. நிறைய ஊற்றி வீடு முழுக்க வழிந்தோட விடாதீர்கள். செடிகள் நிழலிலேயே இருப்பதால் அதிக தண்ணீர் தேவை இருக்காது. அளவுக்கு அதிகமான தண்ணீரில் செடிகள் அழுகி விடவும் வாய்ப்புள்ளது.

## உங்கள் குழந்தைகளும் நீங்களும்

## லேடீஸ் ஸ்பெஷல்

உங்களுக்கு எத்தனை குழந்தைகள்? என்ன? இன்னும் திருமணமே ஆகவில்லையா? விலகுங்கள். ஆனவர்களைத்தான் கேட்கிறோம். நில்லுங்கள்! இதைப் படித்தால் நாளை உங்களுக்கும் உதவுமல்லவா?

பெற்றோர்கள் குழந்தைகளிடம் காட்டும் பாச உணர்வு- பராமரிப்பு போன்றவை குழந்தைகளிடம் ஏற்படுத்தும் தாக்கங்கள் அவர்கள் பெரிதாக வளர்ந்த பினனரும் மறைவதில்லை.

பெற்றோர்களால் தங்கள் சகல குழந்தைகள் மீதும் ஒரே விதமான அன்பைச் செலுத்த முடியாது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

எந்தப் பெற்றோரும் தம் பிள்ளைகள் மீது அன்பு கிடையாது என்று கூறமாட்டார்கள். எனினும் ஒவ்வொரு பிள்ளை யிடமும் சரிசமமான அன்பை அவர்களால் செலுத்த முடியாது என்கிறார்கள் ஆய்வாளர்கள்.


அதுபோலவே ஒவ்வொரு பிள்ளையும் தமது பெற்றோரிடம் வெளிப்படுத்தும் பாசமும் வித்தியாசமானது.

நீ அப்பா பிள்ளையா? அம்மாபிள்ளையா என்று கேட்டால் ஒவ்வொரு பிள்ளையிடமும் இருந்து வரும் பதில்கள் வெவ்வேறானதாக இருக்கும்.

ஒரு குழந்தையை விடுத்து மற்றொரு குழந்தை மீது அதிக அன்பு கொள்வது பாபகாரியமல்ல. இதையிட்டு குற்ற உணர்வு கொள்ளத் தேவையில்லை என்கிறார், இங்கிலாந்திலுள்ள குழந்தைகள் மருத்துவமனையின் உளவள ஆற்றல் நிபுணர் ஆர்தர் கட்மன்.

குழந்தைகள் வளர்ச்சி அடையும் போது இந்த நிலையில் மாற்றங்கள் ஏற்படும் என்றும் அவர் சொல்லுகிறார்.

'எங்களுடைய இளமைக்கால நினைவுகளை எண்ணிப் பார்த்தால் எமது பெற்றோரில் தாய் மீது அல்லது தந்தை மீது அதிக அன்பினை செலுத்தியதை உணர்வோம். அவர்கள் நம்மீது சரிசமமான அன்பு செலுத்தி இருப்பினும் நாம் அவர்களில் ஒருவர் மீது அபரிமிதமான அன்பைச் செலுத்தி இருப்போம். உண்மையில் எங்கள் குழந்தைகள் மீது நாம் எவ்வளவு ஈடுபாடு கொண்டுள்ளோம் என்பதில்தான் பெற்றோருக்கான நிலையைக் கணக்கிட முடியும்.



பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவது, சரியாக பராமரிப்பது, அவர்களை சமூகத்தின் சிறந்த பிரஜைகளாக உருவாக்குவது போன்றவற்றில் எமக்குள்ள ஈடுபாடு முக்கியமானது. அந்தக் கடமைகளை செய்கிறோமா என்பதே பிரதானம். அதை விடுத்து யார் மீது அதிக அன்பு செலுத்துகிறோம். ஒவ்வொரு பிள்ளையிடம் போதுமான அன்பு செலுத்துகிறோமா என்று கவலைப் பட்டுக்கொண்டிருக்கத் தேவையில்லை.

இன்று உலகில் பிரபல மானவர்கள் சிலர் தமது பிள்ளைகளோடு கொண்டுள்ள உறவு எத்தகையது என்று பார்ப்போம்.

இங்கிலாந்தின் இளவரசி டயானா தன் குழந்தைகளிடம் கொண்டுள்ள உறவு பராமறிப்பு- பாச உணர்வு- ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது.

டயானாவின் பெற்றோர் விவாகரத்து செய்த போது டயானா தாதிகளால் வளர்க் கப்பட்டார். அதனால் ஏற்பட்ட கசப்புணர்வுகள் போல் தனது குழந்தைகளுக்கு ஏற்படக்கூடாது என்பதில் கவனம் கொண்டுள்ளார்.

டயானாவுக்கு இரு குழந்தைகள். ஒரு குழந்தை மீது மற்றக் குழந்தையை விட அவருக்கு அன்பு அதிகம் இருக்கக்கூடும். அதை டயானா வெளிப்படையாகக் காட்டுவதில்லை.

இன்று உலகில் அதிரடியான கவர்ச்சி மங்கை மடோனா. அவரோடு கூடப்பிறந்தவர்கள் ஆறுபோர்.

தனது தந்தையார் பற்றி மடோனா சொல்லும் போது-

"எனது தந்தையின் கவனத்தை ஈர்க்க பல முயற்சிகளை மேற் கொண்டேன். வகுப்புப் பாடங்களில் அதிக புள்ளிகளை எடுத்தேன். என்னை அறிவுள்ளவள் என்று நிரூபிப்பதன் மூலம் அவரது அதிக அன்பைப் பெற முயன்றேன்" என்றும் மடோனா சொல்லுகிறார்.

இங்கிலாந்தின் இலட்சாதிபதியான மக்காட்னே மற்றும் அவரது மனைவி லிண்டா இருவரும் தமது நான்கு பிள்ளைகளையும் வளர்க்கும முறையே தனிதான். சாதாரண பாடசாலைகளுக்கே அவர்களை அனுப்புகிறார்கள். மிகச் சாதாரண விளையாட்டுப் பொருட்களையே கொடுக்கிறார்கள். தாதிகள் கிடையாது. தாயே குழந்தை களுக்கு தேவையானதை செய்கின்றார். 'செல்லப் பிள்ளை சேலை உடுக்காது, பள்ளிக்குப் போனால் பாடம் படிக்காது' என்பதை நினைவில் வைத்து செயற்படுகிறார்கள். குழந்தை களை தாயே நேரடியாகக் கவனிப்பதன் மூலம் அவர்கள் குடும்பப் பற்றுள்ளவர்களாக வளர உதவ முடியும் என்கின்றனர்.

குழந்தைகள் மீது செலுத்தும் அன்பு வேறுபடலாம். ஆனால் பாகுபாடு காட்டப்படக்கூடாது. குழந்தைகளை நேர்மையாக நடத்துவது பிரதானம் என்கின்றனர் குழந்தை நல மருத்துவ நிபுணர்கள்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

ஜொலிக்கும் நட்சத்திரம்

—சோபி அலி—






## ஆயத்தமாகிறான் முரடன்

சேவகன், பிரதாப் ஆகிய படங்களை இயக்கி நடித்த அர்ஜுன் அடுத்ததாக முரடன் திரைப்படத்தை இயக்கி நடிக்கவுள்ளார்.

## சினி மைக்

வரம் தரும் வடிவேலன் படத்தில் ராதாரவி சூரனாக புராணப்படத்திலும் வில்லன்.

டி. ராஜேந்தர் சிலம்பரசனை வைத்து புதிய பட தயாரிக்கவுள்ளார்.

ரஜினியின் சொந்தப்படமான வள்ளியில் ப்ரியா ராமன் புதுமுக நடிகை அறிமுகமாகிறார்.

கார்த்திக் நடித்து திரைக்கு வந்த பொன்னுமணி அடி வாங்கி சென்னையில் பட விநியோக உரிமையில் ஒரு பாதியை வா கார்த்திக் கையைச் சுட்டுக்கொண்டுள்ளார்.

அரங்க நாயகன் என்னும் படத்தை தனது கணவர் வைத்து ஆரம்பித்த ஜெயசித்ரா கதையை முடிவு செய்யா தடுமாறுகிறார்.

கோகுலம் படத்தை அடுத்து புதுவசந்தம் புகழ் இயக்கு விக்ரமன் இயக்கும் படம் நான் பேச நினைப்பதெல்லாம். இந்தப்படமு ரசிகர்களால் பேசப்படுமோ?

திரைக்கு வந்துள்ள தலைவாசல் படத்தில் நாசர் நடித்துள்ள குணசித்திர பாத்திரம் பலரது பாராட்டைப் பெற்றுள்ளது.

பொன்விலங்கு பெரிய வெற்றியைப் பெறவில்லை என்பதால், அடுத்துவரும் பிரதாப் போத்தன் இயக்கும் 'ஆத்மா'வை நம்பியி ருக்கிறார் ரகுமான்.

'உடன்பிறப்பு' படத்தில் சத்யராஜ், கனகா பங்கு கொள்ளும் பாடல்காட்சிக்கு மணம் தண்ணீராய் செலவழிக்கப்பட்டுள்ளதாம். காட்சியை ரஜினிக்குப் போட்டுக் காண்பித்தார்கள். வியந்து பாராட்டினாராம்.

சொந்தப்படத் தயாரிப்பை கைவிடலாமா என்று விஜயகாந்த் யோசிக்கிறாராம்.

## உழைப்பாளி ரெடி

ரஜினி ரசிகர்களுக்கு பட்டாசு கொளுத்தி சந்தோசம் கொள்ளக்கூடிய செய்தி. இம் மாதம் 25ம் திகதி உழைப்பாளி திரைக்கு வருகிறது. திரையுலகையே திகைக்க வைக்கும் அளவிற்கு மிகப் பிரம்மாண்டமாக தயாராகி இருக்கிறதாம். இளையராஜாவின் இசையில் பாடல்கள் பிரமாதமாக வந்திருக்கின்றன.

மூன்று நாயகிகளோடு ரஜினி பங்கு கொள்ளும் பாடல் காட்சி சுப்பர். நாயகிகள் ரூபிணி, பல்லவி, மற்றொரு பம்பாய் நடிகை. ரஜினிக்கு ஜோடி ரோஜா.

இன்னொரு மினிச் செய்தி. ரஜினி நடிக்கும் படமொன்றைக் கமலும், கமல் நடிக்கும் படமொன்றை ரஜினியும் தயாரிக்கும் திட்டம் ஒன்றும் இருக்கிறதாம்.

## அடுத்து தலைமுறை

புதிய முகம் திரைப் படத்தைத் தயாரித்து நடித்த நடிகை ரேவதியின் கணவர் சுரேஷ் மேனன் அடுத்து வழங்கவுள்ள படம் தலைமுறை. நடிப்பெல்லாம் கிடையாது. தயாரிப்பு மட்டும்தான்.

## ரஞ்சிதா அழுத கண்ணீர்

வோல்டர் வெற்றிவேலில் சத்தியராஜின் தங்கையாக நடித்தவர் ரஞ்சிதா. வெற்றிவேல் வெற்றி பெற்றதால் தங்கையாக நடிக்கவே எல்லோரும் கூப்பிடுகிறார்களாம். வருத்தப்பட்ட ரஞ்சிதா சத்தியராஜை சந்தித்து ஒரு ரவுண்ட் அழுது தீர்த்து விட்டாராம். விளைவு - மணிவண்ணன் இயக்கத்தில் சத்தியராஜ் நடிக்கும் படமொன்றில் ரஞ்சிதாவுக்குப் பேர் சொல்லக்கூடிய பாத்திரம்.

## கண்மணியில் மோகினி

கண்மணி படத்தில் நாயகனை மயக்கி மடக்கும் பாத்திரம் மோகினிக்கு. நாயகன் பிரசாந்திற்கு மாணவன் வேடம். கண்மணி மூலமாக தனக்கொரு புகழ் கிடைக்குமென்று நம்புகிறாராம் மோகினி. நம்பிக்கைக்கு ஒரு காரணம் இருக்கிறது. கதைப்படி நாயகனை மயக்கும் பாத்திரம் என்பதால் ரசிகர்களையும் அதிர வைக்கும் தாராள மோகினியாய்த் தோன்றுகிறாராம்.



## காதோடு சொல்லுகிறோம்

- ககன்ய நடிகை ஹீரோக்களுடன் மோதி வரலாறு படைத்து வருகிறார். விட்டுக் கொடுத்து நடந்து கொள்ள அவருக்கு தெரியவில்லை என்கிறார்கள் சில ஹீரோக்கள். சரிதான். அதென்ன விட்டுக்கொடுப்பது? இன்னொரு விசயம், அவரை அறிமுகம் செய்த பா. ராஜா படத்தில் நடிக்கவும் 'பிசி' என்று மறுத்து விட்டாராம்.
- தமிழ்த் திரையுலகில் எந்தளவுக்கு அனுமதிக்கிறார்களோ அந்தளவுக்கு உரித்துப் போடத் தயாராக இருக்கிறேன் என்கிறாராம் தல் நடிகை.
- ஐ லவ் இந்தியாவில் பம்பாய் அழகி பாம்பாய் வளைந்து நெளிந்து நடிப்பது தெரிந்த விஷயம். படப்பிடிப்புக்கு வந்து விட்டால் அவர் எல்லோரையும் தொட்டுத் தொட்டு தட்டித் தட்டிப் பேச வெக்கத்தில் நாணிக் கோணுகிறதாம் ஆண்குலம்.
- வெளிநாடு செல்வதற்காக நடிக நடிகையரை அழைத்துச் செல்லும் சில தயாரிப்பாளர்கள் திரும்பி வரும் போது கடத்தல் சமாச்சாரங்களுக்கும் அவர்களை பயன்படுத்து கிறார்களாம். நடிகைகளைக் கொஞ்சம் அதிகமாகவே பயன்படுத்துவதாகக் கேள்வி.

கஸ்தூர நடிகை ரசிகர்களைக் கதிகலங்க வைக்க தனக்குக் கட்டுடல் இல்லை என்று கவலைப்படுகிறாராம். அழகிப் போட்டியில் வென்றவர் தன்னிடம் அழகுகள் இல்லை என்று கவலைப்படுகிறாரே என்கிறீர்களா? சினிமாவுக்குத் தேவையான அழகுகளே தனிதான். காமெராவுக்கு கச்சிதமாக சிக்கக் கூடிய அழகுகளாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் பூ நடிகை எப்படிப் பிரபலமாகி இருக்க முடியும்?

- செல்வமான இயக்குநருக்கும் ரோஜ நடிகைக்கும் இடையே திருமணம் பூவுலகிலேயே நிச்சயிக்கப்பட்டுவிட்டதாம்.
- ரஞ்சித நடிகை வாய்ப்புக்கள் எதுவும் கிடைக்கவில்லை என்று வாடிப்போய் இருந்தார். இப்போது ரசிகர்களை வாட்டோ வாட்டோ என்று வாட்டக் கிளம்பிவிட்டார். ஒட்டிய உடையோடு உல்லாசக் குளியல் காட்சியில் ஒய்யாரமாய் நடிக்க ஆள் தேவையென்றால், தன்னைத் தாராளமாகக் கூப்பிடலாம் என்கிறாராம்.
- கவர்ச்சி காட்டிவிட்டு கதாநாயகியாக நடித்து ஜொலித்தவர்கள் குறைவு. கதாநாயகிகளாக நடித்து கவர்ச்சி நடிகைகளாக ஆடை குறைத்துக் கொஞ்சக் காலம் ஆடியவர்கள் அதிகம். அனுராதா, குயிலி, சமீபத்தில் சூரியனில் விஜி, இப்போது பல்லவி. ஓவர் ஆட்டம் என்றாலும் ஓ.கே என்கிறாராம். கப்பர் ஸ்டாரின் சொந்தப் படத்திலும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறதாம்.
- மணியான இயக்குநர் இயக்கும் புதியபடமும் ஆங்கிலப் படமொன்றின் தழுவல்தானாம். லவ் கிரேஸி லவ் என்ற படத்தின் கதையைத்தான் அங்கே இங்கே வெட்டி ஒரு செட்டப் செய்திருக்கிறாராம்.



## தொங்கா தொங்கா தமிழ்

தமிழிலும், தெலுங்கிலும் ஒரு கொண்டிருக்கிறது. தெலுங்கில் வைக்கப்பட்டுள்ள பெயர் தொங்கா, அதற்கு அர்த்தம் யாதெனில் இயக்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்




## இது அமெரிக்காவின் ஹொலிவூட்

# ஹொலிவூட்டைக் கலக்கும் 62 வயது நாயகன்!


1993- அமெரிக்காவின் ஹொலிவூட்டை பொறுத்தவரை கிளின்ட் ஈஸ்ட்வூட் ஆண்டாக மாறிவிட்டது.

அமெரிக்க ஹொலிவூட் வரலாற்றில் கிளின்ட் ஈஸ்ட்வூட் நடித்து, இயக்கி, கதை எழுதிய 'அன்போகிவின்' (மன்னிப்பே இல்லை) அபாரமான வசூலை வாரிக்குவித்துவிட்டது.

நான்கு ஒஸ்கார் விருதுகளையும் 'அன்போகிவின்' தன் வசப்படுத்திவிட்டது. சிறந்த படத்துக்கான விருதும், சிறந்த இயக்குநருக்கான விருதும் கிளின்ட் ஈஸ்ட்வூட்டிற்குக் கிடைத்தது. அவரது அலை தொடர்ந்து வீச வைத்துள்ளது.



ஒஸ்கார் விருதுகளோடு



இரண்டு ஒஸ்கார் விருதுகளையும் தன் கரங்களில் ஏந்தி அணைத்துக் கொண்டு "இது நன்றாகத்தான் இருக்கிறது. இது எனக்கொரு பெரு வெற்றி" என்றார்.

இதுகாலவரையான முயற்சிக்கு அவருக்கு கிடைத்தது தகுந்த பரிசு.

இன்று 62 வயது. தொடர்ந்து 40 வருடங்கள் துப்பாக்கி கொண்டு வேட்டையாடுகின்றவராக திரையில் தோன்றியவர்.

'அன்போகிவின்' படத்தில் ஒரு துளி இரத்தமும் சிந்தாமல் நடித்துள்ளார்.

(-கதை இதுதான்-)

கிளின்ட் ஈஸ்ட்வூட் ஒரு கொலைகாரனாக இருந்து அத்தொழிலை கைவிட்டு பன்றி வளர்க்கச் செல்லுகிறார். வன்முறையைக் கைவிட, வறுமை அவரை வாட்டுகிறது. பழைய தொழிலுக்கே திரும்ப வேண்டி ஏற்படுகிறது. மனதார தான் விரும்பாத தொழிலுக்கு குதிரையில் ஏறிச் செல்லுகிறார்.



அறுபதிலும் இரண்டிலும் ஒரு அசத்தல் ஹீரோவாக

'அன்போகிவின்' பட வெற்றியை அடுத்து கிளின்ட் ஈஸ்ட்வூட் நடிப்பது ஒரு மாறுபட்ட படத்தில். அதன் பெயர், ஏ பேர்பெக்ட் வேல்ட்' படப்பிடிப்பு ஆரம்பமாகிவிருக்கிறது.

'த லைன் ஒப் பயர்' என்ற அதிகப் பொருட் செலவிலான படத்தில் 'கௌபோய்' பாத்திரத்தில் தோன்றுகிறார். 'ஏ பேர்பெக்ட் வேல்ட்' அவரை நவநாகரீக தோற்றத்தில் காட்டுகிறது. கிளின்ட் ஈஸ்ட்வூட்டின் தனிப்பட்ட வாழ்க்கை தொல்லை நிறைந்தது.

அவரது முதல் மனைவி விவாகரத்து பெற்ற போது 4 கோடி அமெரிக்க டொலர்கள் கொடுத்தார். இப்போது இரண்டாவது மனைவியும் தொல்லை கொடுக்கிறார்.

62 வயதிலும் ஆண்மைமிகு அழகனாகத் தோன்றும் கிளின்ட் ஈஸ்ட்வூட் தற்போது காதலிப்பது கவர்ச்சிமிகு நடிகையான பிரான்செஸ் என்பவரை.

வயதான போதும் வாகான உடலோடு ஈஸ்ட்வூட் ஹொலிவூட்டைக் கலக்கிக் கொண்டிருக்கிறார்.

## கார்த்திக்கை வைத்தும் ஒரு படம்

இதுவரை சத்தியராஜ், பிரபுவை மட்டுமே வைத்துப் படங்களைத் தயாரித்து வந்த திருப்பூர் கே. பி.பாலு இப்போது மூன்று படங்களை ஒரே சமயத்தில் தயாரிக்க எண்ணியுள்ளார். அதில் ஒன்றில் முதன் முதலாக கார்த்திக் நடிக்கிறார்.

ஆர்.வி. உதயகுமார் இயக்கத்தில் சத்தியராஜ் நடிக்கும் ஒரு படம், ராஜ்கபூர் இயக்கத்தில் பிரபு நடிக்கும் ஒரு படம், மற்றொன்று மனோஜ்குமார் இயக்கத்தில் கார்த்திக் நடிக்கும் படம்.



விசித்ரா

## ரசியுங்கள் என்னை!

தற்போது திரையிடப்பட்டுள்ள (தமிழ்நாட்டில பெரிய திரையில், நம்நாட்டில் சின்னத்திரையில்) அமராவதியில் தனது நடனங்கள் சிறப்பாக வந்துள்ளதில் விசித்திராவுக்கு சந்தோசம். கவர்ச்சியாக நடிப்பதில் என்ன குறை இருக்கிறது? ரசியுங்கள் என்கிறார்.

துணிச்சல்தான்

### மலையாள நாயகனும் தமிழ்த்திரையுலக மன்னவனும்

நடிகர் திலகம் சிவாஜி கணேசனும், மலையாள சுப்பர் ஸ்டார் மம்முட்டியும் தமிழ்ப் படமொன்றில் இணைந்து நடிக்கப் போகிறார்கள். நடிகர் திலகத்தின் உடல் நிலை தேறியவுடன் படம் தயாராகும்.

★ ரஜினிக்கு 'உழைப்பாளி' படத்தில் நடிக்க அக்ரிமெண்ட் போடவில்லை. எல்லாம் வாய் பேச்சோடு சரி. அந்த அளவுக்கு அண்டர்ஸ்டேண்டிங்.



உள்ளே-ஒரு சொர்க்கம் ஒளிந்திருக்கிறதோ -ரசிகன்-

# உள்ளம் தெளிந்தது

## பாப்பா முரசு

-நாவலப்பிட்டி கிரகரி-



வசி எப்போதும் தனது தங்கை பிருந்தாவைப் பற்றி அம்மாவிடம் ஏதாவது சொல்லிக் கொண்டே இருப்பான். பிருந்தா நல்ல பிள்ளை. படிப்பில் கெட்டிக்காரி; ஏனையவர்கள் மீது அன்பு உள்ளவள். போட்டி, பொறாமை இல்லாதவள். பிருந்தாவை பாடசாலையில் எல்லோரும் பாராட்டினார்கள். தகப்பன் இல்லாத பிருந்தா, தனது தாய் மீதும் அண்ணன் மீதும் உண்மையான அன்பு வைத்திருந்தாள். ஆனால் வசி பிருந்தாவை பற்றி அம்மாவிடம் வேண்டுமென்றே பொய்க் கதைகளை கூறி அடி வாங்க வைப்பான். இவன் இப்படி செய்வதற்கு காரணம் அவன் கெட்ட பையன்களோடு சேர்ந்து கெட்ட பழக்கங்களில் ஈடுபடுவான். இதனால் வசியை பாடசாலையில் ஆசிரியர்கள் ஒவ்வொரு நாளும் ஏசுவார்கள். அது மட்டுமா அவனுக்கு அடியும் கிடைக்கும். இவற்றை எல்லாம் பிருந்தா அம்மாவிடம் சொல்லிவிடுவாள். பிறகு அம்மா என்னை வெறுப்பாள் என்று நினைத்து ஒரு குற்றமும் அறியாத பிருந்தாவை குற்றம் சாட்டி அடிவாங்க வைப்பான்.

இதனால் பிருந்தாவிற்கு மனவேதனையாக இருந்தது. தான் அண்ணா மீது இல்லாத அன்பு வைத்தும் அண்ணா தன்மீது அன்பு வைக்கவில்லையே என்று வேதனைப்பட்டாள்.

வசி சொல்லும் எந்தக் கதையாக இருந்தாலும் அவை உண்மைதானா என்பதைக் கூட அறியாமல் தாயாரும் பிருந்தாவை தனது பிள்ளை என்றுகூட பார்க்காமல் திட்டினாள். இவை எல்லாவற்றையும் தாங்கியபடி பிருந்தா வாழ்ந்து வந்தாள்.

காலங்கள் கடந்தன. உயர்தர பரீட்சையும் ஆரம்பமாகியது. பரீட்சைகள் முடிந்ததும் எல்லா மாணவர்களும் பெறுபேறுகளுக்காகக் காத்திருந்தார்கள். பெறுபேறுகளும் கிடைத்தது. என்ன ஆச்சரியம். அந்தப் பெரிய பாடசாலையில் நடந்து முடிந்த பரீட்சையில் பிருந்தா மட்டுமே அதி சிறந்த சித்தியடைந்தாள். ஆனால் வசியோ ஒரு பாடத்தில் கூட சித்தியெய்தவில்லை. பிருந்தாவை ஆசிரியர்கள், அதிபர் எல்லோரும் பாராட்டி பரிசில்களை வழங்கினார்கள். தொடர்ந்து படித்த பிருந்தா ஒரு சிறந்த டாக்டராக உருவாகினாள்.

படிப்பு இல்லாத வசிக்கு எங்கும் வேலை கிடைக்கவில்லை. அவன் கெட்டவர்களோடு சேர்ந்து கெட்ட வழிகளிலேயே போனான். இதனால் வீட்டு மானமும் போனது. ஒரு நாள் வசி ஊரில் நடந்த ஒரு கொள்ளைக்குக் காரணமாக இருந்தான். அவனை பொலிசார் கைது செய்து வீட்டிற்கு கொண்டு வந்த போது அவனது தாயாருக்கு வேதனையாக இருந்தது. இப்படியான மகனையா நான் பெற்றெடுத்தேன்? என்று கண்ணீர் வடித்தாள். அது மட்டுமா அவன் முன்னிருந்தே ஒரு கெட்டவன் தான் என்பதை அறிந்ததும் மனதே வெறுத்து விடுவது போல் இருந்தது. அந்த நேரத்தில் ஒரு தாய் ஓடி வந்து பிருந்தாவை பிடித்து "அம்மா..... தாயே... நீங்க தந்த மருந்த குடிச்சதும் இப்பதான் எம்மக எழும்பி நடக்கிறா. குணப்படுத்த முடியாத நோயின்னு சொன்னாங்க. ஆனால் நீங்க கொடுத்த மருந்தால இப்ப அவ பூரண குணமாகிவிட்டு வாற. உண்மையில நீ ஒரு தெய்வம் தான் தாயே" என்று கண்ணீர் வடித்தாள். அதைப் பார்த்து பிருந்தாவின் தாய் ஆனந்தக் கண்ணீர் விட்டாள். அதே நேரத்தில் வசியும் தனது தங்கையின் செயல்களை கண்டு பெருமைப்பட்டான். இப்படியான ஒரு பிள்ளையை தங்கையாக அடைய கொடுத்து வைத்ததை இட்டு சந்தோசமடைந்தான். தங்கை மீது தான் சொன்ன குற்றங்கள் எல்லாமே பொய்யானது தான் என்பதை அங்கு எல்லோரின் முன்னும் கூறினான். அப்படியெல்லாம் தான் பொய் சொன்னதால் தான் இன்று தன் வாழ்க்கை இப்படி ஆகியது என்பதை உணர்ந்தான். அந்த நிமிடமே தன் தாயின், தங்கையின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டான். பிருந்தாவின் தொழிலுக்காக வேண்டி பொலிசார் வசியை மன்னித்து விடுதலை செய்தார்கள். அன்றிலிருந்து அவன் நல்லவனாக வாழ்ந்து வந்தான்.

*"பிறருக்கு தீங்கு நினைப்பவன் தனக்கே தீங்கை வரவழைத்துக் கொள்கிறான்"*

முற்றும்.

## புதிர்கதை விடை

ஜூன் 13ஆம் திகதி இடம்பெற்ற பாப்பா முரசு பகுதி புதிர்க் கதைக்கான விடை இதுதான்:

குர்-ஆன் இல்லாவிட்டால் நூலகத்தைக் கொளுத்துமாறு கோபப்பட்ட அரசனுக்கு நூலகர் என்ன சொல்லியிருப்பார்?

நீங்களும் யோசித்துப் பார்த்திருப்பீர்கள். இப்போது ஒப்பிட்டுப் பாருங்கள்.

"அரசே! குர்-ஆனை விளக்கும் நூல்களிலும் குர்-ஆனே மேற்கோள்காட்டி விளக்கப்பட்டுள்ளது. குர்-ஆனை எதிர்க்கும் நூல்களிலும் குர்-ஆனே மேற்கோள் காட்டி மறுக்கப்பட்டுள்ளது. ஆகவே நீங்கள் எந்த நூலை எரித்தாலும் குர்-ஆனையே எரித்தது ஆகும்" என்றார் நூலகர்.

***என்ன, நீங்களும் இப்படித்தான் யோசித்தீர்களா?***

## விடுகதைகள் - விடைகள்

1. மூன்று பொண்ணும் ஒரே முகம். மூத்த பொண்ணு ஆற்றிலே, நடுப்பொண்ணு காட்டிலே, கடைசிப் பொண்ணு வீட்டிலே. அவர்கள் யார்?
2. ஒரு கால் மனிதனுக்கு அரை இறாத்தல் தாடி அது என்ன?
3. டாக்டர் வந்தார், ஊசியைப் போட்டார், காசுவாங்காமல் போய் விட்டார். அவர் யார்?
4. கடலுக்கு போகும் கட்டச்சிக்கு ஆயிரம் கண்கள் அவள் யார்?
5. யாழ்ப்பாணம் சிவப்பு, கொழும்பு கருப்பு, உடைச்சாப் பருப்பு, கடித்துப்பார்த்தால் கசப்பு. அது என்ன?
6. தலைக்கு மேல் மலரும் பூ. தண்டின் பக்கம் சாயும் பூ, சுகம் தரவிரியும் பூ. சூரியனை மறைக்கும் பூ. அது என்ன பூ?

விடைகள்

1. முதலை, உடும்பு, பல்லி.
2. தும்புத்தடி.
3. நுளம்பு.
4. வலை.
5. குண்டுமணி.
6. குடை

நிருபா கௌதமி சச்சிதானந்தன்
56/15, கிருலப்பனைத் திட்டம்,
கிருலப்பனை,
கொழும்பு-6.

## பள்ளிப் பருவம்

துள்ளித்திரியும் பருவம்
தூயவழி நடத்தும் பருவம்
நட்பு வளரும் பருவம்
நண்பர்கள் சேரும் பருவம்
நன்மைகள் கூடும் பருவம்
நல்வழி காட்டும் பருவம்
கல்வி கற்கும் பருவம்
கலைகள் வளரும் பருவம்
இதுவே பள்ளிப் பருவம்.

செல்வி: வீ. சைலஜா
தலவாக்கலை த.ம.வி.
தலவாக்கலை



அரும்புகளே!
பாப்பா முரசிற்கு உங்கள் ஆக்கங்கள் வந்து குவிவதால் சித்திரக் கதையை தரமுடியவில்லை. விரைவில் இட நெருக்கடி தாண்டித் தரவுள்ளோம்.

## அதிசயப் பிராணிகள்

1. திரவநிலை உணவை உண்ணாத பூச்சிகள்?
   வெட்டுக்கிளி, கறையான், கரப்பான் போன்ற வெட்டும் வாயுறுப்பு கொண்டவை.
2. கறையான் அரிக்காத மரம் - தேக்கு மரம்
3. நாயின் கண்களுக்குப் பொருட்கள் தெரியும் நிறங்கள்- கறுப்பு,வெள்ளை
4. நாக்கு இல்லாத பிராணி - முதலை
5. சத்தம் போடாத விலங்கு - ஒட்டகச் சிவிங்கி
6. சிறிய இதயம் கொண்ட மிருகம்- சிங்கம்
7. தூங்காத பறவை- புறா
8. நான்குகால் பிராணிகளில் நீந்தத்தெரியாத பிராணி- ஒட்டகம்
9. அதிக நீர் குடிக்கும் பறவை - புறா
10. நடு இரவில் பூக்கும் மலர்- இருவாட்சி.

என். பிரசன்னா
ஆண்டு-10
விவேகானந்தாக் கல்லூரி
கொழும்பு-13.

# கண்ணால் காண்பதும்.....

-லேகா-

மாலை மணி ஐந்து . மடமடவென எனது வேலைகளை முடித்துக் கொண்டு கடையின் முன் கவுண்டரில் வந்து அமர்ந்தேன். தனியார் மாடி வீட்டுக் கட்டடத் தொகுதி ஒன்றின் கீழ்ப் பகுதியில் தான் இந்தக் கடை அமைந்திருந்தது.

'பட பட' வென்ற இரைச்சல் கேட்டு நிமிர்ந்தேன். அதோ அவன் தான்! அந்த மோட்டார் சைக்கிளின் செந்தக்காரன். வாகனத்தை நிறுத்தியவனின் பார்வை, தொடர்மாடியின் மேல் பக்கம் செல்கின்றது.

கையை ஆட்டுகிறான்... ஏதேதோ சைகைகள்... பரிபாஷைகள்...! எனக்குப்பற்றிக் கொண்டு வந்தது.

இன்று .... நேற்றல்ல, கடந்த ஒரு வாரமாக இந்தக் கூத்து நடக்கின்றது.

மேல்மாடியில் 'யாரோ' இவனுக்காகவே இதே நேரத்தில் காத்திருக்க வேண்டும். யாராக இருக்கும்? மனதில் ஒரே குடைச்சல்......!

சரியாக ஐந்து மணிக்கு இவன் வருவதும், கைகளை அசைத்து சாடைமாடையாகக் கதைப்பதும்...
"சே... விவஸ்த்தை கெட்டவன்கள்..பொது இடத்தில் நின்று கொண்டு இப்படி முறைகேடாக நடந்து கொள்கின்றோமே...நாலு பேர் நம்மை பார்த்து என்ன நினைப்பார்கள்...என்ற எண்ணம் சிறிதாவது உண்டாகிறதா...? இவன்களையெல்லாம்...." நான் பல்லைக் கடித்துக் கொண்டேன்.

நிமிர்ந்த நான் திடுக்கிட்டேன். அவன் கைவிரல்களை ஒன்றாகச் சேர்த்து உதட்டில் வைத்து விட்டு ஊதிக் காட்டுகிறான்....!

"ஓகோ.....ப்ளையிங் கிஸ்' என்பார்களே அது தானோ...இருக்கட்டும்....இன்றே இதற்கு ஒரு முடிவு கட்டுகிறேன்..." மனதுக்குள் கருவியவாறு, கடைப்பையனிடம் சொல்லிவிட்டு, அவனை நோக்கிச் சென்றேன்.

என்னைக் கண்டதும் அவன் கையை நிறுத்திவிட்டு, என்னை நிமிர்ந்து பார்த்தான்.

"ஹி...ஹி..." முன்பின், அறிமுகமில்லாத என்னைப் பார்த்து ஒரு சிரிப்பு... தேவைதானா...?

"தம்பி... தெனம்..இப்படி..." என்று நான் பேச்சை ஆரம்பித்தேன்.

"ஒ.....ண்....ணு..மில்லேங்..க..வந்து.." மென்று விழுங்கினான் அவன். தன் குட்டு வெளிப்பட்டு விட்டதே என்ற அச்சத்தில் வார்த்தைகள் தடுமாறுகின்றனவோ....!

"என்ன தம்பி சொல்லுங்க..." விஷயத்தை அவன் வாயாலேயே கேட்டறியும் ஆவலுடன் அவனை உற்சாகப்படுத்தினேன் நான்.

"வந்து..மேலே எங்க மாமி வீடு இருக்கு...நானும் அவங்க கூடத்தான் இருந்தேன்....ஒரு சின்ன மன வருத்தத்தில வீட்டை விட்டு வெளியேறிட்டேன்...ஆனா, என் மாமி மக எம்மேல உயிரையே வைச்சிருக்கா...ஒரு நாளைக்கு என்னைப் பார்க்கலேன்னா ஏங்கிப் போயிடுவா....
அவளுக்காகத் தான் நா தெனமும் இப்படி....." என்று நிறுத்தி விட்டு மீண்டும் கையை உயர்த்திக் காட்டினான்.

"ஓகோ....முறைப் பெண்ணோட தான் இந்த சல்லாபமா..." என்று நினைத்தவாறே தலை நிமிர்ந்த நான் அதிர்ந்தேன்.....!

காரணம்...! பதினாறு வயது இளம் பெண் ஒருத்தியை உருவகப்படுத்திக் கொண்டு நான் தினம் சந்தேகக் கண்ணோடு அவனைப் பார்த்ததென்ன......?

அங்கே இருந்ததோ....!

ஒன்றரை வயது கூட நிரம்பாத பச்சை மண் ஒன்று... அதிர்ச்சியால் பேசவே நா எழவில்லை...

"ஐயா, அதோ பார்த்தீங்களா...அவ முகத்தில தெரியற பரவசத்த...இப்படித்தான் என்னைக் கண்டதும் அவ துள்ளிக் குதிப்பா...அவளப் பார்க்காம என்னாலேயும் இருக்க முடியாதுங்க..." அவன் பேசிக் கொண்டே போனான். நானோ வெட்கித் தலை குனிந்தேன்.

அநியாயமாக ஒரு பாசப்பிணைப்பை அவதூறாகக் கணித்து விட்டேனே! என்ன மனிதன் நான்...!

கண்ணால் காண்பதும் பொய், காதல் கேட்பதும் பொய், தீர விசாரித்தறிவதே மெய். எங்கோ கேட்ட அந்த வார்த்தைகள் என்னைச் சம்மட்டியால் அடிப்பதை உணர்ந்தேன். நான்.

# அசுரத்தனமான போர் விமானங்களிலும் உல்லாசப் பயணம்



போர் விமானங்கள் என்றதும், அவை மிகவும் நாசத்தை உண்டுபண்ணக் கூடிய அசுரத்தனமான இயந்திரப் பறவைகள் என்ற எண்ணமே மனதில் தோன்றும்.

ஏனெனில் போர் விமானங்களினால் மனித குலத்துக்கு நேர்ந்த அழிவுகள் எண்ணிலடங்காதவை. இரண்டாம் உலகப் போரில் ஐரோப்பாவின் பல பாகங்களையும் தவிடு பொடியாக்கியதுடன், லட்சக் கணக்கான அப்பாவி மக்களை அணுகுண்டு வீசி ஜப்பானில் சாம்பராக்கிவிட்டதும் ஒரு போர் விமானமே.

அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளே போர் விமானங்களைத் தயாரிக்கும் முன்னணி நாடுகளாகும்.

அண்மைக்காலம் வரை அமெரிக்காவும், ரஷ்யாவும் ஒன்றையொன்று போட்டியிட்ட வண்ணம் போர் விமானங்களைத் தயாரித்தன. அத்துடன் தமது நேசநாடுகளுக்கும் அவற்றை விற்றுவந்தன.

ஆனால் தற்போது நிலைமை வேறு. ரஷ்யாவில் ஏற்பட்டுள்ள அரசியல் சீர்திருத்தங்கள் காரணமாக அந்த நாடு பலத்த பொருளாதார நெருக்கடியை எதிர் நோக்குகின்றது.

தன்னிடமுள்ள அனைத்து வளங்களையும் எப்படி அந்நியச் செலாவணியைப் பெற உபயோகிக்கலாம் என்பதில் ரஷ்யா அக்கறை கொண்டுள்ளது.

இந்த அக்கறையின் பிரதிபலிப்பாகவே தனது அதிசிறந்த போர் விமானங்களையும் உல்லாசப் பயணங்களுக்கு வாடகைக்கு விட ரஷ்யா முன்வந்துள்ளது.

அண்மையில் ரஷ்யாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த பிரிட்டிஷ் உல்லாசப் பயணியான டேவிட் கார்ட்டர் என்பவர் ரஷ்யாவின் மூன்று வகையான முன்னணிப் போர் விமானங்களில் ஜாலியாகப் பயணஞ் செய்யும் வாய்ப்பைப் பெற்றிருந்தார். அதற்காக அவர் செலுத்திய கட்டணம் 15 ஆயிரம் ஸ்டேர்லிங் பவுண்கள். அதாவது 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்கள்.


பிரிட்டனில் இவரது ஆசையை நிறைவேற்ற முடியவில்லை. அங்கு போர் விமானமென்றால் போர் விமானிகளுக்கே அவை உரித்து என்ற நிலை.

இராணுவச் சட்டதிட்டங்களின்படி ரஷ்யாவிலும் இதே நிலையே காணப்பட்டது. ஆனால் அந்நியச் செலாவணியைச் சம்பாதித்து பணக்கார உல்லாசப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் பொருட்டு, போர் விமானங்களிலும் உல்லாசப் பயணத்தை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தை ரஷ்யா தற்போது அறிமுகப்படுத்தியுள்ளது.

அதிநவீன மிக்-23, மிக்-29 மற்றும் சுக்கோய் சூ-27 என்ற ரஷ்யாவின் மூன்று விதமான போர் விமானங்களில் திரு டேவிட் கார்ட்டர் பறந்திருந்தார்.


இருவர் மட்டுமே பயணஞ் செய்யக்கூடிய இந்த விமானங்களில் ரஷ்ய யுத்த விமானிகள், திரு.காட்டரை பர்துகாப்பாக வான்பரப்பில் அசுரவேகத்தில் கொண்டு சென்று காண்பித்தனர்.

சாய்வாகவும், குத்துக்கரணம் போட்டும், நெடுங்குத்தாகவும் அந்த விமானங்களில் சென்று தமது ஆசையை திரு. கார்ட்டர் நிறைவேற்றினார்.



இவரைப் போலவே ஏனையவர்களையும் கொண்டு செல்ல ரஷ்யா முன்வந்துள்ளது. ஆனால் பயணிகள் விமானங்களுக்கு ஒரு தடவை செலவிடுவதைவிட பத்து மடங்கு பணத்தை, போர் விமானத்தில் ஒரு மணி நேரத்துக்கு செலவிட வேண்டும். ஏனெனில் போர் விமானத்தில் விரயமாகும் எரிபொருளின் அளவு கணிசமாக இருப்பதே இதற்குக் காரணமாகும்.

# மினி பொக்ஸ்



* ஆமைகள் ஒவ்வொரு வருடத்திலும் அக்டோபர் மாதத்திலிருந்து மார்ச் மாதம் வரை தூங்கும்.
* தமிழ் நாட்டிலுள்ள சந்தனக்கடத்தல் வீரப்பன் பற்றி இப்போது நமநாட்டில் உள்ளவர்களுக்கும் தெரியும். சந்தன மரங்கள் எத்தனை நாடுகளில் இருக்கின்றன தெரியுமோ? இந்தியா, மற்றும் பிலிப்பைன்ஸ்.
* சிம்பன்ஸி குரங்கிற்கு அடுத்ததாக நாய், பூனை, பன்றி, யானை, குதிரை ஆகியவை அறிவுள்ள மிருகங்களாகக் கருதப்படுகின்றன.
* நம்நாட்டில் கால்நடைகளைப் பாவித்து நிலத்தை உழுவதுண்டு. குதிரையைப் பாவிப்பது கிடையாது. ஆனால் ஜெர்மனியர்கள் குதிரைகளை பூட்டித்தான் நிலத்தை உழுகின்றனர். சாகுபடி அதிகமாக இருக்குமென்ற நம்பிக்கையில் அங்கு இப்போதும் கூட பழைய கால முறையைச் சில விவசாயிகள் பயன்படுத்துகின்றனர்.
* மெழுகுவர்த்தியை உபயோகிப்பதற்கு முன்னர் அதைச் சில மணி நேரம் குளிர் சாதனப் பெட்டிக்குள் வைத்திருந்தால் வெகுநேரம் எரியும்.
* உலகிலேயே முதன் முதலாகச் செயற்கை இதயம் பெற்றவர் 61 வயது நிரம்பிய பி.கிளாக். 1982ம் ஆண்டு அந்த அறுவைச்சிகிச்சை 7.5 மணிநேரம் நடைபெற்றது.
* இந்த நூற்றாண்டில் நடைபெற்ற மிகப் பெரிய கப்பல் விபத்து 1912ல் நடந்தது. உயிரிழந்தவர்கள் 1490 பேர். கப்பலின் நீளம் 883 அடி. அகலம் 92அடி. கப்பலின் பெயர்? டைடானிக்.
* கொசுக்களில் 2700 இனங்கள் உள்ளதாம்.
* காகத்தினால் நேராக மட்டுமே பறக்க முடியும்.
* நம் சிறுகுடலின் நீளம் எவ்வளவு தெரியுமா? 24அடி.
* நமது கடிகாரத்தில் இருக்கிறதே நிமிடமுள், அது 18ம் நூற்றாண்டிலேயே கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது.
* 1817ம் ஆண்டு ஜமெய்க்காவைச் சேர்ந்த டெக் வில்லேயும், ஸ்ருவட்டும் நேருக்கு நேர் கைத்துப்பாக்கிகளோடு சண்டையிட்டுக் கொண்டார்கள். எங்கே? ஒரு சவக்குழியில்.




## கட்-அவுட்

இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் கட்-அவுட் கலாசாரம் பரவிக் கொண்டிருக்கிறது. தனிமனித வழிபாட்டிற்கு அது மிக முக்கியமும் கூட. யாழப்பாணத்தில் புலிகளும் கட்-அவுட் கலாசாரத்தில் ஒரு கலக்கு கலக்கி வருகிறார்கள். அருகில் இருப்பது யாழ்ப்பாணத்தில் புலிகள் கிட்டருக்கு வைத்த கட்-அவுட்.



இன்னொரு தகவல் - ஆயுதங்களோடு தாக்குதலுக்குத் தயாராகப் பதுங்கி இருப்பதையும் கட்-அவுட் என்று புலிகள் பேசிக் கொள்வதுண்டு. கட்-ஒவ் என்பது தான் மருவி, உருவி கட்-அவுட் ஆகிவிட்டது.

# தகவல் பெட்டி



## நிர்வாண மேனியில் ஓவிய அலங்காரம்

முகத்தைக் கண்மை தீட்டியும், உதட்டைச் சாயம் பூசியும், வேறு வர்ணங்களைக் கொண்டும் அலங்கரிப்பது பெண்களின் வழக்கம்.

மேனி அலங்காரத்தில் முகத்துக்கே முதன்மையைக் கொடுக்கும் பெண்களிலிருந்து வேறுபட்டவர்களாக, ஒரு புதிய தலைமுறைப் பெண்கள் தற்போது தென் அமெரிக்காவின் பிரேஸில் நாட்டில் தோன்றியுள்ளார்கள்.


இந்த பிரேஸில் பெண்கள் பிறந்த மேனியராக இடைக்குக் கீழே தமது உடம்பின் பின்புறப்பகுதியில் ஆழகிய வர்ணங்களைத் தீட்டி வலம்வர ஆரம்பித்துள்ளார்கள்.

பெண்களின் இடையழகு பாடலாகவும் வர்ணிக்கப் படுவதுண்டு. ஆனால் இந்த பெண்கள் ஆடை எதுவுமின்றி முதுகுப் புறத்துக்குக் கீழே தசைப் பகுதியை வெறுமனே விதவிதமான வண்ணப் பூச்சுக்கள் மூலம் அலங்கரித்துள்ளார்கள்.

பழவகைகள், மலர்கள், பறவைகள், விலங்குகள் என்பவற்றை அழகுற வரைந்து தமது பின்புற இடைப்பகுதியை இந்த பிரேஸில் நங்கையர்கள் அலங்கரித்துள்ளார்கள்.

அத்துடன் ஆயிரக்கணக்கில் சனக்கூட்டம் திரண்டிருக்கும் பிரேஸிலின் உல்லாசக் கடற்கரைப் பகுதியிலும் இவர்கள் இந்த நிர்வாண அலங்காரத்துடன் வலம் வருகிறார்கள். இவர்களின் இந்த நடவடிக்கையில் ஆபாசம் எதுவும் புலப்படவில்லை. அவர்களின் கலையுணர்வே தென்படுகிறது என அவர்களை உற்று நோக்குவோர் கூறிக் கொள்கின்றனர்.

## இறக்குமதிச் சிரிப்பு







மனிதன் இயற்கை நிலையிலிருந்து இயந்திரமாக மாறிக் கொண்டிருக்கின்றான். குரங்கிலிருந்து தோன்றிய மனிதன் இரும்பு இயந்திரமாக மாற்றமடைகிறான். அதனைத்தான் இந்தச் சிலை சித்தரிக்கிறது. ரசிக்கலாம், கொஞ்சம் சிந்திக்கலாம்.

# எனக்கு வேண்டாம் இந்தப் பாவம்!

-முகில் வண்ணன்-

மனோகரி கணவனை இழந்துவிட்டாள். கைக் குழந்தை சுகந்தியையும் அவளையும் விட்டு அவளது கணவன் சிதம்பரம் நஞ்சைக் குடித்து இவ்வுலகை விட்டு அகன்று விட்டான்.

சிதம்பரம் இறந்ததும் அதற்கான காரணம் பலவாறு விமர்சிக்கப்பட்டது. கந்தோரில் கையாடிப் பிடிபட்டான் அதனால் தான் இறந்தான் என்றும், கடன் தொல்லைகளால் இறந்தான் என்றும், தீராத ரகசிய நோய் ஏதும் இருக்கவேண்டும் என்றும், அவனது அழகிய மனைவியால் குடும்பத்தில் ஏதும் பிரச்சினை இருக்க வேண்டும் என்றும், அல்லது அவளது நடத்தையில் சந்தேகப்பட்டு இறந்திருக்க வேண்டும் என்றும் ஒவ்வொருவரும் தத்தமது கற்பனைத் திறனுக்கேற்றவாறு கதைத்துக் கொண்டனர்.

மரண விசாரணையில் உண்மை வெளிவரவே இல்லை. அவன் எழுதி வைத்திருந்தபடி 'தான் நஞ்சருந்தி தற்கொலை செய்வதாகவும் இக்கொலைக்கு யாரும் காரணம் இல்லை' என்றும் எழுதிய கடிதம் விசாரணையை முடிவுக்குக் கொண்டு வந்தது. பிணம் புதைக்கப்பட்டது. கனடாவில் இருக்கும் அண்ணன்மார் காசு அனுப்பி எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டனர்.

அண்ணன்மார் அனுப்பிய கடிதத்தில் "உனது முடிவை அறிவித்தால் உன்னையும் குழந்தையையும் கனடாவுக்கு எடுக்க நடவடிக்கை எடுக்கிறோம்" என்று கண்டிருந்தது.

விசாரணை திடீர் மரண விசாரணை அதிகாரியினால் முடிக்கப்பட்டு சவ அடக்கம் நடந்து முடிந்த பின்னரும் சி.ஐ.டி மூளையுள்ள சிலர் புலன் விசாரணையில் இறங்கினர். அவன் இறந்த காரணத்தைக் கண்டு பிடிக்காவிட்டால் அவர்களுக்கு நித்திரையும் வராது என்பது போல் இருந்தது. என்றாலும் துப்புத் துலங்காமலே நாட்கள் நகர்ந்தன.



ஒரு வருடம் நிறைந்த குழந்தை சுகந்திக்கு அண்ணன்மார் அனுப்பிய பணத்தில் விமர்சையாக பிறந்த நாள் கொண்டாடினாள் மனோகரி. அதற்குப் பலரும் வந்திருந்தனர்.

வந்திருந்தவர்களில் பலரும் அடங்குவர். சொந்தக்காரர், வரவேண்டும் என்பதற்காக வந்திருந்தனர். நோட்டம் அறிய, விடுப்புப் பார்க்க வந்தவர்கள் சிலர். தங்கள் விசாரணைக்கு ஏதும் தகவல் கிடைக்கலாம் என்று வந்தவர்கள் சிலர். இவர்களில் தூரத்துச் சொந்தக்காரனான சரவணனும் வந்திருந்தான். இவன் அவளது கண்வீச்சுக்கு இலக்கானவன். ஆகவே சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வந்திருந்தான்.

வெளிநாட்டுக் காசில் விழா களைகட்டி இருந்தது. எல்லோரையும் நன்கு கவனித்து உபசரித்தாள் மனோகரி. அதிலும் சரவணனுக்கு விசேச கவனம் காட்டப்பட்டது. கூட்டம் மெல்ல மெல்ல கலையத் தொடங்கியது. நெருங்கிய சொந்தக்காரர்களுக்கு மட்டும் இரவுச் சாப்பாட்டுக்கு ஏற்பாடாகி இருந்தது. அதிலும் சிலர் இன்று செவ்வாய்க் கிழமை விரதம் என்று நழுவி விட்டனர்.

சரவணனும் குழந்தைக்குப் பரிசைக் கொடுத்து விட்டு எழுந்தான்.

"ஏன் உங்களுக்கு என்ன அவசரம்? நின்று சாப்பிட்டுப் போங்க ...." என்றாள் மனோகரி.

"இல்ல நான்...."

அவளும் "அதெல்லாம் இல்ல நின்று சாப்பிட்டுப் போறீங்க" என்றவள் "குழந்தைக்கு நித்திரை வந்து விட்டது கிடத்தி விட்டு வாறேன்" என்று உள்ளே சென்றாள்.

திரும்பி வந்தவளைப் பார்க்கக் கண் கூசியது சரவணனுக்கு. ஏற்கனவே எடுப்பாக விலையுயர்ந்த சாரியில் தோற்றம் அளித்த அவள் இப்பொழுது முகம் கழுவி உடுப்பை மாற்றி தலை 'ஸ்ரைலை' மாற்றி கவுனில் கன்னிப் பெண்போல் வந்து நின்றாள்.

"மாலையில் இருந்து ஒரே வியர்வை அதுதான் மேலைக் கழுவி உடுப்பை மாற்றினேன்" என்று கூறினாள் அவனது பார்வைக்கு விடையாக.

"சும்மா சொல்லக் கூடாது அப்சரஸ் மாதிரி இருக்கிறீங்க." என்றான்.

"தாங்ஸ் போர் யுவர் கொமன்ற்" என்றவள், நீங்களும் முகம் கழுவுங்கள் என்று டவலை எடுத்துக் கொடுத்து வோஷ் பேசனுக்கு அழைத்துச் சென்றாள். மின்சாரம் இல்லை என்றால் என்ன 250 ரூபாய்க்கு மண்ணெண்ணை வாங்கி வீடெங்கும் நிறைய லாம்புகள் எரிந்தன.

முன்னால் இவர்கள் இருவருமே இருந்தனர். மற்றவர்கள் சாப்பாடு தயார் பண்ணுவதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். எங்கோ இருந்து இரண்டு கண்கள் பார்க்கலாம். காதுகள் கேட்கலாம்.

"இந்த அழகை நீங்கள் வீணாக்கலாமா? ஏன் மறு மணம் செய்வதுபற்றி யோசிக்கக் கூடாது?" என்று கேட்டான் சரவணன்.

"இப்படித்தான் கனடாவில் இருக்கும் அண்ணன்மாரும் எழுதி இருக்கினம். எனக்குப் பெரியவர்கள் யார் இருக்கினம்? எப்படி நான் இதை மற்றவர்களிடம் சொல்வது? அதுதான் பிரச்சினை. 'மறுமணம் முடிப்பதென்றால் அங்கே இரு. இல்லாவிட்டால் இங்கே வந்து சேர்' என்று எழுதி இருக்கிறார்கள்.' என்றாள் அவள்.

சரவணனுக்கு நெஞ்சு படபடத்தது. என்னவென்று சொல்வது தன் ஆசையை? ஆனாலும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டும் என்ற அவசரம் தெரிந்தது.

"யாரும் விரும்பினால் ஏற்றுக் கொள்வீர்களா?"

"ஒப்கோர்ஸ். ஏன் நீங்கள் தயாரா? அப்படி என்றால் சொல்லுங்கள்" வெட்கத்தால் தலைகுனிந்தான் சரவணன்.

"எனக்குத் தான் வேலை ஒன்றும் இல்லையே . வெளிநாடு செல்லவும் வசதி இல்லாமல் இருக்கிறேன் ...." என்று இழுத்தான்.

"அதெல்லாம் பிரச்சினை இல்லை. உங்களுக்குச் சம்மதம் என்றால் சொல்லுங்கள். மற்றதை நான் கவனித்துக் கொள்கிறேன். வேலையா வெளிநாடா என்பதை பின்னர் அண்ணனுக்கு எழுதி யோசிப்போம்."

"உங்களுக்கு விருப்பம் என்றால் ஓ.கே..."

"ப்ரொமிஸ் ..." என்று நெருங்கிவந்து அமர்ந்து கையை நீட்டினாள். அவன் கையில் அடித்தான் - அவன் கையைப் பற்றினாள்.

கடிதங்கள் பறந்தன. உறவு வலுத்தது. போக்குவரத்து தொடர்ந்தது. இரண்டு மாதத்தில் திருமணப் பதிவு முடிந்து இருவரும் குழந்தையுடன் கொழும்பு நோக்கி வந்தனர்.

இப்போது தான் தங்கள் விசாரணைக்கு ஒரு முடிவைக் கண்டனர். ஆமாம். மனோகரி இவனுடன் தொடர்பாக இருந்ததை அறிந்து தான் அவன் நஞ்சு குடித்து இருக்கிறான் என்பதுதான்.

மனோகரி கொழும்புக்கு வந்து 'லொட்ஜில்' நின்று கொண்டு தொலைபேசியில் தொடர்பு கொண்டாள். மகிழ்ச்சியடைந்த அண்ணன்மார் "இங்கேயே ஒரு வீடு எடுத்துத் தங்குங்கள். காசு அனுப்புகின்றோம். சரவணனை விரைவில் கனடாவுக்கு எடுக்கின்றோம். அதன் பின்னர் அவர் உன்னை எடுக்கலாம். அல்லது நாங்கள் எடுப்போம்" என்றனர். சரவணனுடனும் பேசினர்.

"கணவனை இழந்த தங்கையை மணந்ததற்காக நன்றி என்றும் உங்களுக்கு வேண்டியளவு பணம் அனுப்புகின்றோம். சந்தோசமாக இருங்கள். விரைவில் உங்களை இங்கு எடுக்க நடவடிக்கை எடுக்கிறோம்" என்றனர். தனக்குக் கிடைத்த அதிர்ஷ்டத்தை எண்ணி மகிழ்ந்து போனான் சரவணன்.

கொழும்பில் ஒரு மாதம் வரை இருந்தனர். கொழும்பில் வீடெடுப்பது கஷ்டமாக இருந்தது. கொழும்பில் பல நண்பர்களைச் சந்திக்கக் கூடியதாக இருந்தது. அதில் சரவணனின் நண்பன் ஒருவன் நீர் கொழும்பில் வேலை செய்பவன். நீர் கொழும்பில் வசதியான வீடு எடுக்கலாம் என்று கூறினான்.

அதன்படி இருவரும் அண்ணன்மாரிடம் ஆலோசனை பெற்ற பின்னர் நீர் கொழும்பில் 'ரெலிபோன்' வசதியுள்ள வீட்டில் குடியேறினர். திருமணப் பதிவை, பிறப்பு சாட்சிப் பத்திரங்களைப் பெற்று 'ஸ்பொன்ஸர்' விசாவுக்கு முயற்சி பண்ணினர். அந்த முயற்சியில் மாதங்கள் உருண்டோடிக் கொண்டிருந்தன.

அப்போதுதான்- தான் 'உண்டாகியிருப்பதாக' அண்ணன்மாருக்கு அறிவித்தாள். 'ஏன் இத்தனை அவசரம். இங்கு வந்தபின் பிள்ளைகளைப் பெற்று எடுக்கலாமே. பிள்ளைகளுடன் இங்கு வருவது கஷ்டம் என்று தெரியாதா?" என்று பேசினார்கள்.

நாட்கள் சென்றதில் நாளொருவண்ணமாக உருப்பெற்ற குழந்தை உலகை வந்தடைந்தது. மகிழ்ச்சிதான். ஆனால் அண்ணாமார் அவதானமடைந்தனர். ஸ்பொன்சர் விசா தாமதமடைவதால் அவனை வேறு வழியில் 4 1/2 லட்சம் கட்டி எடுக்க ஏற்பாடு செய்தார்கள். இல்லையேல் இன்னுமொன்று உருவாகலாம் என்ற பயமோ? என்னவோ?

பிள்ளைக்கு 31ம் நாள் தொடக்குக் கழிவு நடந்து சில தினங்களில் சரவணன் ஏஜன்சியால் அழைத்துச் செல்லப்பட்டான். உடனே சிங்கப்பூர் பயணம் நிறைவேறிற்று.

சிங்கப்பூரில் ஒருமாதம் நிற்க வேண்டி ஏற்பட்டது. ரெலிபோனில் தொடர்பு கொண்டான். பின்னர் வேறு இடம் மாற்றப்பட்டவுடன் ரெலிபோன் தொடர்பும் இல்லை. சென்று சேர்ந்ததும் எடுக்கிறேன் என்றான் இறுதியாக.

மூன்று மாதத்தில் சரவணன் கனடா போய்சேர்ந்து விட்டான். "கவலைப்படாதே உன்னையும் விரைவில் எப்படி என்றாலும் எடுக்கிறேன். இந்த நாட் பெண்களுக்குக் கஷ்டம்தான். என்றாலும் நீ இல்லாமல் நான் இருந்து என்ன செய்ய? ஏற்பாடு செய்கிறேன்" என்றான். அவளுடைய அண்ணாமாரிடம் இல்லாத பணமா? ஆரம்ப காலத்தில் போய் நன்றாக உழைத்து இருந்தார்கள். 'சிற்றிசனு'ம் பெற்றுவிட்டார்கள். ஆனால் இலங்கைக்கு வரத்தான் விருப்பம் இல்லை.

சரவணன் சென்று ஆறு மாதம் இருக்கும். அவனது நீர் கொழும்பு நண்பன் அவனது நிலையை அறியும் பொருட்டு அங்கு சென்றான்.

"ஏன் இப்பதான் கண் தெரிஞ்சுதோ? பிள்ளையின் தொடக்கு கழிவுக்கு வந்து போன நீங்கள் இந்தப் பக்கம் எட்டிப்பார்க்கவும் இல்லை. நான் இங்கு தனியே இருக்கிறன் என்று தெரியும் தானே! அடிக்கடி வந்து போகலாம் தானே! நான் பிடிச்சு விழுங்க மாட்டன். தனிய இருக்கிறது எவ்வளவு கஷ்டம் என்று எனக்கு இப்பதான் புரிகிறது. இங்[illegible] வேறு எவரும் இல்லை. நான் மட்டும் தான் இருக்கிறேன். என்ன யோசிக்கிறீர்கள்? பயமா? நீங்கள் அடிக்கடி வந்து போனால் எனக்கும் துணையாக இருக்கும். அவர் இல்லாத குறையும் விளங்காது. உங்களுக்கும் பொழுது போகும் தானே. பொண்டாட்டியை ஊரிலை விட்டுத்து தனியே இருக்கிறீங்க தானே! அடிக்கடி வரலாம் தானே!" என்றாள்.

தேனீரைக் குடித்துக் கொண்டே வரண்ட நாக்கை நனைத்துக் கொண்டு 'வாறன்' என்றபடி எழுந்து விட்டான். அவளது பேச்சும் நளினமும் அவனை என்னவோ செய்தன. அவள் தன்னிடம் எதை எதிர்பார்க்கிறாள் என்று அவனுக்குப் புரிந்தது.

"இருங்களன் போகலாம்" என்றாள்.

"இல்ல நான் போட்டு வாறன்" என்று நடந்தான் அவன். 'எனக்கு வேண்டாம் இந்தப்பாவம்' என்று அவன் மனம் எண்ணிக் கொண்டது. இனி இந்தப்பக்கம் எட்டியும் பார்க்க மாட்டான். இவளைப் பற்றிக் கூறியபோது ஊரவர் ஒருவர் கூறியது அவனுக்கு ஞாபகம் வந்தது.

"முதலாமவனை ஒரு வருடத்தில் பலி எடுத்து விட்டாள். இவனுக்கும் எத்தனை நாளோ? ஒன்று மாறி ஒன்று தொடர்ந்து கொண்டே இருக்கும். இதுகளைத் திருத்த முடியாது கண்டியோ?" என்றார்.

'திருந்தினாலும் விட்டாலும் பரவாயில்லை - என்னை விட்டால் போதும்' என்று திரும்பியும் பாராமல் நடந்தான் அவன்.

(யாவும் கற்பனை அல்ல)

இலக்கிய நயம்

## கண்ணதாசனைக் கவர்ந்தது

15ம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் வாழ்ந்த பெரும் கவிஞன் காளமேகம். சிலேடை வைத்துப் பாடுவதில் கில்லாடி. கவியரசு கண்ணதாசனை மெய்மறந்து ரசிக்க வைத்தவன். காளமேகத்தின் பாடல் ஒன்று பற்றி கண்ணதாசன் சொல்லுவதைப் பார்ப்போம். பாடலை ரசிப்போம்.

ஒரு தடவை காளமேகத்தைப் பார்த்து தாசிக்கும் பனைமரத்துக்கும் 'சிலேடை' வைத்துப் பாடும்படி யாரோ கேட்டார்கள்.

விட்டானா, காளமேகம்? பாடினான்.

தாசியையும் தழுவுகிறோம்; பனைமரத்தையும் கட்டித் தழுவுகிறோம்.

இங்கேயும் கால் சேர ஏறுகிறோம்; அங்கேயும் கால் சேர ஏறுகிறோம்.

தாசியின் மேலாடையைப் பறிக்கிறோம்; பனை மரத்தில் 'பன்னாடை' யைப் பறிக்கிறோம்.

தாசியின் வாய்க்கள்ளையும் அருந்துகிறோம்;

பனை மரத்தின் கள்ளையும் அருந்துகிறோம்.

அதனால்,. அந்தப் 'பனை மரத்தையும் வேசி' என்று சொல்லலாம்.

பாடல் இது:

கட்டித் தழுவுதலால், கால்
சேர ஏறுதலால்,
எட்டிப் பன்னாடை
இழுத்தலால்- முட்டப்போய்
ஆசைவாய்க் கள்ளை
அருந்துதலால் அப்பனையும்
வேசை என லாமே விரைந்து.



சின்னச்சின்ன ஆசை சொல்ல ஆசையா?

பிரபலங்களிடம் எல்லாம் உங்கள் சின்னச் சின்ன ஆசைகள் என்ன? என்று கேட்டு தமிழக சஞ்சிகைகள் பிரசுரித்தன. எமக்கொரு ஆசை. எமது எஜமானர்கள் வாசகர்கள்தானே. அதனால் உங்கள் சின்ன-சின்ன ஆசைகளை ஒரு தபால் அட்டையில் எழுதி (ஃபிளீஸ் சுருக்கமாக) அனுப்புங்கள். உங்களின் 24 பேரின் ஆசைகள் பிரசுரமாகும். சம உரிமைப்படி ஆண்கள் 12, பெண்கள் 12.

சின்னச்சின்ன ஆசை
தினமுரசு வாரமலர்
சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு-5

# வாசகசாலை

ஐ லவ் தின(ா) முரசு

டியர் தின(ா) உன்நலம் எப்படி? தினமும் உன்னைக்காண தவிக்கிறேன். அன்று வெள்ளிக் கிழமை முதன் முதல் உன்னைக் கடையில் கண்டதும் என்னைப் பறிகொடுத்து விட்டேன். உனது அடுத்த வருகைக்காக கடை அருகே காத்திருக்கும் உன் உயிர்க் காதலன்.

ரஜனி (முரசுப்பித்தன்)
கொழும்பு-13

வெள்ளிதோறும் பத்திரிகை தோறும் முத்திரை பதிக்க வந்திருக்கும் தினமுரசு வாரமலரே நீ மேலும் சிறப்படைய வாழ்த்துக்கள்.

எஸ். சாந்தகுமாரன்
சிலாபம்.

படித்து முடித்த போது...

தினமுரசில் அனைத்து அம்சங்களும் வெகுஜோர். அரசியல் கட்டுரை முதல் உலகக் கண்ணோட்டம் வரை படித்து முடித்ததும் ஒரு வாசகசாலைக்குச் சென்று வந்தது போன்ற உணர்வு ஏற்படுகிறது.

குமார் தங்கத்துரை
அவிசாவளை.

மாதர் பகுதியில் இன்னும் ஆக்கங்கள் சேர்த்துக் கொள்ளவும்.

ஆர். ஜமுனா
தெமட்டகொட.

- விரைவில் வியக்கப் போகிறீர்கள். (ஆர்)

அன்புமிக்க தினமுரசே, உன்னைக் கண்ட பின்தான் என் மனசே துள்ளும்.

முரசுப்பிரியன் நசூர்தின்
தெல்தோட்ட.

முரசே, நீ இருண்ட வானில் ஒரு நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ வேண்டும். பத்திரிகை உலகில் ஒரு முடிசூடா முரசாக விளங்க வேண்டும்.

செல்வன். எஸ். அலெக்சாண்டர்
கொட்டகல.

கண்ணை நம்பவில்லை

வாரம்தோறும் பவனி வரும் தினமுரசு வாரமலரே, இவ்வளவு நேர்த்தியாக வெளிவரும் உன்னைக் கண்டவுடன் என் கண்களையே நம்ப முடியவில்லை. உன்னைக் கையில் எடுத்ததும் எந்தப் பக்கத்தை முதலில் வாசிப்பதென்ற மனப்போராட்டம். அனைத்துப் பக்கங்களும் அத்தனை சிறப்பு.

மகேஸ்வரி ராமதாஸ்
வத்தேகம.

இளம் நெஞ்சங்களில் நீ.

எமது உயிர்த் தினமுரசே முதலாவது அடியிலேயே உனது திறமையைக் காட்டி பல நூற்றுக் கணக்கான நெஞ்சங்களில் இடம் பிடித்து விட்டாய். உனக்கு எமது பாராட்டுக்கள் பற்பல.

எஸ். பாலா
ஏ.பி. சுபா
காலி-எல.

மாற்றங்களைப் பெரிதும் விரும்பும் வாசகர்களுக்கு மாறுதலான பத்திரிகை.

தங்கதாசன்
பதுளை.

கொட்டிய முதல் முரசில்....

கொட்டிய முதல் முரசிலேயே வேகம் தெரிகிறது. ஆய்வு விளங்குகிறது. உறுதி வெளிப்படுகிறது. நோக்கம் புரிகிறது. அஸ்திவாரம் பலமானால் அசைக்க முடியாது தானே.

சிவா-துஷி, ஜீவா, தாஸ்
வத்தளை.

இளமை கொஞ்சும்...

பக்கங்கள் தோறும் இளமை கொஞ்சுகிறது. இனிமை துள்ளுகிறது.

ஆர். சகார்தீன்
புத்தளம்.

நவரசம்

நம்நாட்டின் வளர்ந்து வரும் எழுத்தாளர்களுக்கும், கலைஞர்களுக்கும் அதிக பக்கங்கள் கொடுக்க வேண்டும். வந்த முரசங்கள் நவரசமாக வெளி வந்தன.

என். கஜேந்திரன்
கொழும்பு-13

மருத்துவப் பக்கம் பயனுள்ளதாக அமைந்திருந்தது. இனி வரும் இதழ்கள் சிறப்பாக இருக்க வாழ்த்துகிறேன்.


பாத்திமா றபாய்தீன்
பண்டாரவளை.

எம். நேசன்-கொழும்பு 14, பற்குணம் தர்மேந்திரா-கொழும்பு, எம். எம். சாஹிரா சானாஸ், முஹம்மட் சஹீம், பாத்திமா சஹினா, முஹமட் இல்யாஸ் கொழும்பு 13, மு. கண்ணா-வட்டவல, கே. ஜெகதீஸ்வரன்-கொட்டகல, புஸ்பா-அவிசாவளை, சி. சத்தியகுமாரன்-கொழும்பு 12, கே. கனகராஜா-நுவரெலியா, எம். மகேஸ்வரன்-கொழும்பு 6, ரஹீம் ராஜி-தர்கா நகர், ஜெ. நிமல்ராஜ்-கொழும்பு13, செல்வன் எம். ஹயாத்-கொழும்பு 15, கார்த்திக் - ரக்வான, எம். ஸீ. அக்மல் மொஹமட்-குருநாகல, க. ராஜசேகரன், ஸீப்ராம்- மகரகம, ஆர். நித்தியானந்தன்- கொழும்பு 11, ரி. என். ரி. ரிஸ்வான்- கொழும்பு 11, நஜிமுன்நிஸா-கொழும்பு 15, பெ. ராமதாஸ் - ஆள் கிரனோயா, ம. ஸ்ரீகாந்தன் இங்கிரிய, எம். சவரிமுத்து-அக்கரப்பத்தன, செல்வி கே. பரமேஸ்-தலவாக்கல, ஜனனி மதுரலிங்கம் -கொட்டாஞ்சேனை, வடிவேல் உதயகுமார்-உன்னாஸ்கிரிய, எம்..ஏ.சி. முகமட் பாசி -புத்தளம், செல்வன் ஷஹிர்ஷா தாஸிம் -தர்கா நகர், கணேஸ்-கொழும்பு, யூ.பீ.எம். சாகீர் - புத்தளம்,

வாசகசாலைக்கு வரும் உங்கள் கடிதங்கள் இடவசதி பொறுத்து இடம்பிடிக்கும். உங்கள் உணர்வுகளுக்கு இடம்தர கூடுதல் கவனம் எடுப்போம்.

(ஆ-ர்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல.03



### இடமிருந்து வலம்

1. வியாபாரத்திற்கு ரொம்ப அவசியம்.
3. விருந்தினர்களுக்கும் கொடுக்கலாம் நாமும் உண்ணலாம்.
5. மக்கள் பிழை விட்டால் மாதா இதைச் செய்வதுண்டு.
6. தினமுரசில் உண்டு.
7. தினமுரசின் பக்கங்களில் இதில் ஒரு பாதி தனிப் பிரிவாக உண்டு.
11. வானம் இருளும் போது இதை நீங்கள் தேடுவீர்கள். (வலமிருந்து இடமாக உள்ளது)
12. பெற்றோல் செலவில்லாத வாகனங்களில் ஒன்று.

### மேலிருந்து கீழ்

1. உள்ளே புதிர் இருக்கும்.
2. சகோதரங்களுக்குள் இது நடந்தால் பிணக்குதான்.
4. கண்ணாடியைக் கச்சிதமாய் வெட்டும்(குழம்பி இருக்கிறது)
7. எண்களில் ஒன்று
8. இது இருக்கக் காய் கவர்ந்தால்?
9. இது சரியாக இருக்குமானால் பரிசு நிச்சயம்,
10. இதிலே சேலை விழுந்தால் பத்திரமாகத்தான் எடுக்க வேண்டும்.

நீங்கள் இப்போது என்ன செய்கிறீர்கள் என்றால் - ஒரு தபால் அட்டையை எடுத்து சரியான விடை எழுதிக் கூப்பனை வெட்டி ஒட்டி 26.06.93க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பி வையுங்கள்.

சரியான விடையை எழுதி அனுப்பும் 25 அதிஷ்டசாலிகளுக்கு பரிசுப்பணம் ரூபா 500/- பகிர்ந்தளிக்கப்படும்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல.1
### வெற்றிபெற்ற அதிஷ்டசாலிகள் இவர்கள்தான்:

1. எம்.சாந்தி, பம்பலப்பிட்டி, கொழும்பு-4
2. வி. பத்மா, தெஹியோவிட்ட.
3. ச. கண்ணன், பேராதனை.
4. எஸ்.சிறீதரன், கண்டி.
5. வி.தயானி, கொழும்பு-11
6. எஸ்.சாந்தகுமாரன், சிலாபம்.
7. எம்.கணேசன், கொழும்பு-5
8. நாகமணி மகேந்திரலிங்கம், தெஹிவளை.
9. ஏ.ஷாஹ்மி, திஹாரிய.
10. பவானி பெருமாள் தாசன், கண்டி.
11. பி. துமிலன், கொழும்பு-13
12. அருட்செல்வன் அஜீசன், கொழும்பு-14
13. க.கதிர்காமத்தம்பி, வந்தாறுமூலை.
14. எம்.ஜெயந்தி, கொழும்பு-12
15. திருமதி. விஜி வேலுசாமி, கொழும்பு-5
16. சுஜந்தி ஜேம்ஸ், வத்தளை
17. ச. கலைமொழி, கொழும்பு 6
18. ஜி.நந்தினி, கல்கிசை.
19. எஸ். பாஸ்கரன், வெல்லம்பிட்டிய.
20. செ. செந்தமிழ்ச் செல்வன், சிலாபம்.
21. த. பாஸ்கரன், தெஹிவளை
22. ப.சகுந்தலா, இரத்மலானை
23. ரியூட், கொழும்பு 11
24. கே.ரி. தவராஜா, நீர்கொழும்பு
25. திருமதி.ஏ.வி.சர்மா, புத்தளம்.

இந்த அதிஷ்டசாலிகளுக்கு பரிசுப்பணம் ரூபா 500/- பகிர்ந்தளிக்கப்படும்.

## அறிவித்தல்

இனியவர்களே!

கடிதங்களுக்குள் சிலர் பணம்வைத்து அனுப்பியுள்ளீர்கள். முரசை அனுப்பிவைக்குமாறு கூறியுள்ளீர்கள். முரசு மீது உங்கள் பிரியம் புரிகிறது. எனினும் அவ்வாறு செய்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு அன்புசார்ந்த உரிமையோடு கேட்டுக்கொள்கிறோம். உங்கள் பகுதியில் முரசு விற்பனையாகிவிட்டால் மறுமுறை முன்கூட்டியே பதிவு செய்துவிடுங்கள். மேலும்- எமது கையிலும் முரசின் பிரதிகள் இல்லாமையால் எம்மாலும் அனுப்பமுடியாத நிலை. எனவே நிலைபுரிந்து செயற்பட வேண்டுகிறோம்.

-நிர்வாகி-

# சிந்தியா பதில்கள்

நான் இந்தியாவில் கொடிய பெண் ஒருவரிடம் சிக்கி அனைத்தையும் பறிகொடுத்துவிட்டேன். இப்போது பெண்களை கண்டால் மனம் வெறுக்கிறது, உங்கள் ஆலோசனை என்ன?

கே.எம். மோகன்
குருநாகல

*ஐந்து விரலும் ஒன்றல்ல. அணைத்துப் பிடித்தபடி முதுகில் குத்தும் குணம் ஆண்களிடமும் உண்டு. எனவே குணமறிந்து உறவுவைத்தால் மனம் உடைய நேராது.*

நாகரீகம் நம் நாட்டில் முன்னேறியிருக்கிறதா?

கோமகன்
கொழும்பு-11

*ஏன் இல்லை!*

எதிலும் சரிசமமாக நிற்கும் பெண்கள் எந்த நேரத்தில் ஆண்களிடம் அடங்கிப் போகிறார்கள்?

எஸ்.ஏ.நஸார்
கொழும்பு 12

*நீர் எங்கே வருகிறீர் என்று தெரிகிறது. அந்த நேரத்தில் கூட ஆண்கள் தானே குழைந்தும், வளைந்தும் போவதாக சொல்கிறார்கள். உமது அனுபவம் எப்படி நஸார்? பரஸ்பர மரியாதை போதும். அடங்கிப் போக யாரும் இங்கே அடிமை இல்லை.*

நல்லதொரு கணவன் வாய்க்க நங்கையர் 'ஸ்ரீராமஜெயம்' எழுதின், மனைவி வாய்க்க நான் என்ன எழுதல் வேண்டும்?

ஆதவன்
கொழும்பு

*காதலித்து கைப்பிடிக்க நினைத்தால் 'பொன் நிலவே, பொன் எழில் மேனிப் பாவையே' என்றெல்லாம் காதல் கடிதம் எழுதலாம். இல்லை என்றால் ஒன்று செய்யும், "சீதா ஜெயம்" எழுதும்.*

ராஜீவ் கொலை வழக்கின் நிலை என்ன?

எஸ். சாந்தரூபன்
கந்தப்பொல

*விசாரணைக்கைதிகளை பாதுகாப்பதே பெரும் பாடாகி இருக்கிறது. தவிர ஆவணங்களை பார்க்கும் போது வழக்கு உடன் முடியும் சமாச்சாரமாய்த் தெரியவில்லை.*

புலிகளின் தலைவர் எங்கே இருக்கிறார்?

பா.சத்தீஸ்
நீர்கொழும்பு

*இருக்கமுடிந்த இடத்தில்.*

திரு. எஸ் தொண்டமானின் வெற்றி எதைக் குறிக்கிறது?

வீ. மயில் சாபி
கண்டி

*அதிகமான வாக்குகளை கவரும் சக்தி அதிகமாகியிருப்பதை; மலையகத் தமிழ் மக்களை யாரும் அலட்சியம் செய்ய முடியாது என்பதை.*

சிந்தியா, உமது அனுபவம் எப்படி?

கு. சசிக்குமார்
காலி

*சசி, உமக்கென்ன அறிந்துகொள்ளும் பசியோ? சொறி நான் பிசி.*

புதிய பிரதமர் எப்படி?

எஸ்.எம். பாயிஸ்
பாணந்துறை

*தொடங்கும் போதே முடிவு சொல்லக்கூடாது. போகப்போகத்தான் தெரியும். என்றாலும் நம்பிக்கையூட்டும் ஆரம்பம்.*


கிட்டுவை கொன்றது யார்?


எம்.ரவிச்சந்திரன்
வவுனியா

*கப்பலில் வெடித்த அல்லது வெடிக்க வைக்கப்பட்ட குண்டு.*

இந்தியப் படை மீண்டும் வருமா?

கிரிதரன்
மோதர







ரனில் விக்ரமசிங்கே

*வருகிறது-கிரிக்கெட் படை! இதுவும் ஒரு அமைதிப்படைதானே! நாடுகளுக்குள் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளும் நட்புறவுக்கு ஒரு பாலம் அல்லவா?*

இலங்கையின் கிரிக்கெட் அணி எப்படி சிந்தியா?

எஸ்.என்.சாஜகான்
கிண்ணியா

*தன்னம்பிக்கை, தளராத உற்சாகம் என்பன நிறைய உண்டு. முத்தையா முரளிதரன் சேர்க்கப்பட்டு பிரகாசிப்பது போல, முஸ்லிம் ஒருவரையும் இணைத்துக் கொண்டால் நன்றாக இருக்கும்.*

நடிகர் பிரசாந்தின் மார்க்கட் எப்படி இருக்கிறது?

சீ. நிர்மலா
பேருவளை

*விளம்பரம் அதிகம். வெற்றிப்படங்கள் குறைவு.*

சிந்தியா-உன்னை முத்தமிட ஆசை! பலிக்குமா?

ஆர். மகேந்திரன்
பதுளை

*நீ ...நீர் ரொம்ப மோசம். (இந்த இடத்தில் வெட்கப்படும் முகத்தை கமரா குளோசப்பில் காட்ட வேண்டுமாக்கும்)*

அன்புடன் சிந்தியாவுக்கு, தினமுரசு வித்தியாசமான பாதையில் செல்லும் என்று நம்பலாமா?

சிவா-துஷி,ஜீவா,தாஸ்.

*நம்பலாம். வித்தியாசமான பாதையில் செல்லும் எல்லோரையும் தன் பாதையில் திரட்டும்.*

சிந்தியா என் கனவில் சிவரஞ்சனி வருகிறார். நான் அவரிடம் போகலாமா?

செ.கண்ணன
சிலாபம்.

*போகலாமே. கனவில்....?*

அக்கா சிந்தியா, கேள்வி பதிலில் என்னையும் சேர்த்துக் கொள்வீர்களா?

க. சுந்தர்ராஜ்
வெல்லம்பிட்டிய.

*நீர் என்ன கேள்விக்குறிபோல வளைந்தோ இருக்கிறீர்? அதென்ன அக்காவா! உமக்கென்ன வயது ராஜ்?*

எவ்வளவு தூரம் பழகினாலும் சிலரைப் புரிந்து கொள்ள முடிவதில்லையே ஏன்? அறிவீனமா?

செல்வி.பி. மகாலிங்கம்
அவிசாவளை.

*இல்லை. உங்கள் பலவீனம். எனினும் வாழ்க்கையில் இருந்து கற்றுக் கொள்ளுங்கள். அதன் மூலம் ஆட்களை எடைபோடப் பழகிக் கொள்வீர்கள்.*

டியர் சிந்தியா- தான் விரும்புபவர், தன்னை விரும்பாவிட்டால்.....?

'டையிங் இன்சைட்'

*நல்ல புனைபெயர் உமக்கு. "கிட்டாதாயின் வெட்டென மற" என்ன, ஒகேயா?*

பாக்கியம் ராமசாமி

# மனித வெடிகுண்டு

தமிழ் நாட்டில் அப்புசாமி கதைகள் மூலம் பிரபலமானவர் பாக்கியம் இராமசாமி.
மனித வெடிகுண்டுகள் கிலியூட்டும் காலமன்றோ இது.
காலத்திற்கு ஏற்ப அவர் வழங்கியுள்ள படைப்பு இது.
தமிழக கதைக் கதிரில் பிரசுரமானது.

அப்புசாமியைப் பெருமூச்சுக்களே பெட்ரோலாக இயக்க, அவர் வாக்கிங் போய்க் கொண்டிருந்தார். தினமும் குறைந்த பட்சம் காலையில் நாற்பது நிமிஷமாவது என்பது மேலிடத்து உத்திரவு.

அப்புசாமி ஒரு ஐந்து நிமிஷம் தெருமுனை வரை நடந்து திரும்பிப் பக்கத்திலுள்ள பார்க் பெஞ்சில் ரிலாக்ஸாக உட்கார்ந்து, அங்கே காலையில் சின்னப் பயல்கள் விளையாடும் ஃபுட்பால் மாட்ச்சையோ, கிரிக்கெட்டையோ, அபூர்வமாக ஜாக்கிங் ரவுண்டு சுற்றும் சில யுவதி, யுவர்களையோ வேடிக்கை பார்த்து விட்டு வீடு திரும்புவது வழக்கம்.

வாலிப வயதில்அவர் ஓடாத ஓட்டமா? ஆனால் அழகான ஒரு பெண் அவருடன் ஓடிவந்து நெஞ்சத்தைக் கிள்ளியதில்லை.

காலங்காத்தாலே எழுந்ததும், அல்வா சாப்பிடுகிற பெங்களூர்க் காரர்கள் மாதிரி, ஓர் இளம் காதல் கொண்டிருந்தனர். இந்த வரட்டுப் பார்க்கில், அதுவும் தண்ணீர் பஞ்சத்தால் வழுக்கை விழுந்து கிடக்கும், ஏதோ ஒரு முன்னால் வழுக்கை விழுந்த முன்னாள் பிரமுகர் பெயரைக் கொண்ட பார்க்கில், கான்க்ரீட் சதை பிய்ந்து, கம்பி எலும்பு தெரியும் பரிதாபமான பெஞ்சில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

அவன் ஏதோ சொல்ல, அவள் நாணத்துடன் குனிந்து கொண்டு பல் தெரியாத ஒரு புன்னகை. அவள் ஏதோ சொல்ல, அவன் அழகான பல் தெரியும்படி ஒரு சிரிப்பு.

இருவருக்குமிடையே பதினைந்து சென்டிமீட்டர் தூரம் (பழங்கால கணக்குப்படி அரை அடி தூரம்) இடைவெளி இருந்தது.

தொட்டுக் கொள்ளாமல் இடித்துக் கொள்ளாமல் மிக நாசூக்காக அவர்கள் காதலித்துக் கொண்டிருந்ததை, இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம் போலிருந்தது அப்புசாமிக்கு.

"சார்! பெரியவர் சார்!" என்று அவர் முதுகுக்குப் பின்னாலிருந்து குரல் கேட்காதிருந்தால், தூய காதலர்களை மேலும் ரசித்திருப்பார்.

திரும்பினார்.

பொன் விலங்கு அண்ணன் காரன் மாதிரி மகா மோட்டவாக ஆறடிக்கு மூணடி தேகப் பரப்பிலிருந்த அந்த ஆசாமியின் முகத்தில் கொஞ்சம் தாடி, அதிக சோகம்.

"சார்... அந்தக் காதல் சிட்டுக்களைப் பார்த்தீங்களா?"

அப்புசாமிக்குக் 'கபீர்' என்றது. பயம் கவ்வியது. "எந்தச் சிட்டுக்கள்?"

"பெரியவரே.....என்னை உங்கள் பேரன் மாதிரி நினைத்துக் கொள்ளுங்கள். அதோ அந்தக் காதலர்களைப் பற்றி என்ன நினைக்கிறீங்க?"

"நல்லா இருக்கட்டும்னு நினைக்கிறேன்."

"இருக்க முடியாது பெரியவரே. இந்தக் காதலர்களை வரதட்சணை என்ற பேய் பிரிக்கப் பார்க்கிறது. எவ்வளவு டீசன்டாக காதலிக்கிறார்கள் பார்த்தீர்களா? இதே மாதிரி இரண்டு வருஷமாக, இதே பார்க்கில், இதே பெஞ்சில் உட்கார்ந்து காதலிக்கிறார்கள். இன்னும் கல்யாணத்துக்கு வழியில்லை. வரதட்சணை விவகாரம். வரதட்சணை கேட்கிற ஆணிடம் கேட்கிறேன் நான் சிரதட்சணை" பொன் விலங்கு அண்ணனுக்குச் சூடேறிக் கொண்டிருந்தது.

அப்புசாமி, "பேஷ்!பேஷ்!" என்றார். "கவிதை மாதிரி சொல்லிட்டியே. 'வரதட்சணை கேட்கிற ஆணிடம் கேட்கிறேன் நான் சிரதட்சணை. பேஷ்! பேஷ்!"

திடீரென்று அந்தப் பொன் விலங்கு அண்ணன் அப்புசாமியின் கைகளைப் பற்றிக் கொண்டு, "சார், பெரியவர் சார்! அந்தப் பொண்ணு என் சொந்தக் தங்கச்சி சார்! நீங்க மனசு வைத்தால், என் தங்கையின் கல்யாணம் நிறைவேறும்."

"உன் தங்கச்சியா? வரதட்சணைக் கொடுமையால் நிற்குதா கல்யாணம்? நான் ஏதாவது தூது மாதிரி போக வேண்டுமா? போகிறேன். காதலர்கள் ஒன்று சேர்வதற்காக, என் கால்கள் தேய்வதில் பெருமை அடைகிறேன். வாழ்க காதல்! வீழ்க வரதட்சணை!"

"பெரியவரே! என் குடிசைக்கு வந்து 'ஜில்'லென்று ஒரு ஐஸ் மோர் சர்பிட்டீர்களானால் என் மனசு குளிரும்."

'குடிசையென்றால் நிஜமாகவே குடிசை. ஓ! இவன் சத்தியம் பேசுகிறவன். இவனை நம்பலாம் என்று இவனை மனசுக்குள் பாராட்டிய அடுத்த நிமிஷம், குடிசைக்குள்ளிருந்து இன்னும் இரண்டு பேர் தோன்றினர்.

"சபாஷ்! உருப்படியை வளைச்சிக்கிட்டு வந்திட்டியா? யோவ் கெயவா...ஜிப்பாவைக் கழட்டுய்யா சீக்கிரம். பாங்க் திறந்திடும். நிறைய வேலை இருக்கு. சீக்கிரம் கழற்றுடா.... உன்னோட பேஜாரு."

அப்புசாமிக்கு வயிற்றைக் கலக்கியது. மரியாதையில் திடுமென்று நிறையக் கலப்படம். பெட்ரோலில் கெரோஸின், மிளகாய்ப் பொடியில் செங்கல் பொடி மாதிரி, இவ்வளவு நேரமிருந்த மரியாதையில், இந்த அவமரியாதைக் கலப்படம் ஏன்?

"நான் ஜிப்பாவைக் கழற்றுவதற்கும், பாங்க் திறப்பதற்கும் என்ன சம்பந்தமுங்கோ?" என்று தயக்கத்துடன், பயத்துடன் கேட்டவாறே ஜிப்பாவைக் கழற்றினார்.

அப்புசாமியின் வயிறு மகாபலிபுரம் குகைக் கோயில் மாதிரி உள்ளே குழி விழுந்து கிடந்தது.

"வெச்சுக் கட்டறதுக்குத் தோதான இடமா வயிறு இருக்குதே! சபாஷ்" என்றார் ஒரு கிருதாப் பேர்வழி.

"எதை வெச்சு எங்கே கட்டறது?" என்றார் அப்புசாமி.

"ஏண்டா மாயாண்டி, கெழவன் கிட்ட சமாச்சாரத்தை இன்னும் சொல்லலியா? சொல்லுடா சீக்கிரம். பாங்க் திறந்திருக்கும் இந்நேரம்."

அப்புசாமியை அன்போடு பேசி அழைத்து வந்த ஆசாமி, அவரது தோளைத் தட்டித் தந்தான். "பயப்படாத பெரீவரு! அந்தப் பார்க்குக் கசுமாலம் என் தங்கச்சியும் இல்லே, கொட்டாங்கச்சியுமில்லே. உன் ஜிப்பாவைத் தூக்கிக் காஷியர் கிட்டே காட்டறே. பாங்கிலேயிருக்கிற பணம் பூராப் பெட்டியிலே போட்டு, பாங்கி பின்னாலே நிக்கிற ஆட்டோவுக்கு வந்தாகணும். 'எதுனா வேலை காட்டினீங்கன்னா 'டமால்னு சுச்சியை அழுத்திடுவேன். பாங்கிக் கட்டிடம், நீ, நானு, வேலை செய்யறவங்க, இருக்கிற பணம் எல்லாம் சிதறிக் கருகிச் சாம்பலாய் போயிடும்'னு சொல்லு. மிரட்டு. இருபது லட்சம் வந்தால் உனக்கும் எதுனாத் தருவோம்."

"அடே பாவி!" என்றார் அப்புசாமி. "பயங்கரவாத கும்பலைச் சேர்ந்தவனா நீ?" அவருக்குப் பதில் சொல்லாமல் காரியம் வேகமாக நடந்தது.

அப்புசாமியின் வயிற்றில் டால்டா டப்பா சைஸில் கருப்பான ஒரு வஸ்துவை இறுகக் கட்டினார்கள். அதில் ஒரு பச்சைவிளக்கு எரிந்து கொண்டிருந்தது. அப்புசாமிக்கோ தன் வாழ்க்கை விளக்கே அணைந்துவிட்ட மாதிரி இருந்தது.

"சார்! சார்! தம்பி! தம்பி! கண்ணே!கண்ணே! யப்போவ்! யப்போவ்! நைனா! நைனா! நான் பிள்ளை குட்டிக்காரன். ரெண்டு மூணு பொண்டாட்டி. நான் புட்டி விற்றுத்தான் குடும்பம் பிழைக்கணும்" என்று பல பொய்களைச் சொல்லி கையெடுத்துக் கும்பிட்டார்.

"யோவ்! அளக்காதீருய்யா. மொகரைகிகரையெல்லாம் பேத்துடுவோம். உனக்கு அந்தப் பச்சை கேட் ஊடுதான்யா? உன் சம்சாரம் கூட ஒரு கிழவியம்மா. தோளிலே பையும், கையிலே ஒரு பைலும் தூக்கிக்கிட்டு, காரிலே 'சர்புர்'னு வெளியே போயிட்டு போயிட்டு வந்துக்கினு இருக்குமே. நாங்க ஸ்டடி பண்ணித்தான்யா வேலைலே இறங்குவோம். இங்கே பாரு! பதினொண்ணு இருபத்தஞ்சுக்குள்ளாற பணப் பெட்டிகளை பாங்கிக்காரங்க ஆட்டோவில் கொண்டு வெச்சுடணும். இல்லாட்டி இங்கிருந்து ரிமோட் கன்ட்ரோலை ஒரு அழுத்து அழுத்தினால் எல்லாரும் காலி. போலீஸ் கீலிஸ் வந்து உன்னைப் புடிக்கப் பார்த்தா, சுவிச்சியை நீயே அழுத்தி எல்லாரையும் தூள் பண்ணி, நீயும் செத்துடு."

"ஐயோ! இந்த அநியாயம் அடுக்குமா?" கதறினார் அப்புசாமி. "நான் சாகறதா?"

"யோவ்! நீ எப்படி மிரட்டுவியோ, நடிப்பியோ, காரியத்தை வெற்றியா முடிச்சிட்டு வரலைன்னா சாக வேண்டியதுதான்."

அப்புசாமியின் வயிற்றில் பலவந்தமாகக் கறுப்பான வஸ்து கட்டப்பட்டது. உள்ளிருந்து வந்த 'டிக் டிக்' ஓசை, குண்டிலிருந்து வந்ததா? அவர் இதயத்திலிருந்து வந்ததா?

**பா**ங்கில் - திங்கட்கிழமையாதலால் - காஷ் கவுண்டர் முன்னால் சினிமாத் தியேட்டர் கும்பல்.

"யோவ்! நகருங்கய்யா!" என்றார் கரகரத்த குரலில் அப்புசாமி.

காஷ் கவுண்டரில் காஷியரின் முன்னால்போய் நின்றார்.

"போய் உட்காருங்க சார்! டோக்கன் நம்பர் வந்தால் கூப்பிடறேன்."

"நீ என்னய்யா கூப்பிடறது?" என்றார் அப்புசாமி அலட்சியமாக.

காஷியர் இளவட்டம்- அதுவும் திருநெல்வேலி. "பின்னே உங்க பாட்டனாய்யா கூப்பிடுவேன்? போய் உட்காருய்யா பெஞ்சிலே."

அப்புசாமி மனசுக்குள் அழுது கொண்டே சிரித்தார். "டேய் பொடிக் காராபூந்தி! நான் யார் தெரியுமா? இங்கே பாத்தியா, குண்டு மனுஷன்!"

காஷியர் வாலிபன் குனிந்தவாறு நோட்டுக்களை எண்ணியவாறு, "பார்த்தா ஒல்லியாத் தானே இருக்கிறே?" என்றான்.

"கண்ணை நல்லா தொறந்து பாருய்யா. வெடிகுண்டு மனுஷன்." அப்புசாமி கவுண்டரில் அலட்சியமாகத் தாளம் போட்டார். "இருக்கிற பணமெல்லாம் பதினொண்ணு இருபத்தஞ்சுக்குள்ளே பாங்கின் பின்னாலிருக்கிற ஆட்டோவுக்குப் போயாகணும்."

காஷியர் வாலிபன் நிமிர்ந்து பார்த்தான். "ஹை! ஆசை! ஆசை! அம்மா வூட்டுத் தோசை! இதோ பார் மீசை! உம்ம குண்டு மிரட்டலுக்கெல்லாம் அசையறவன் நானில்லே. மானேஜர் கிட்டே கேட்காமல் எதுவும் செய்ய முடியாது."

அப்புசாமி தலையில் அடித்துக் கொண்டார்? "அடே முட்டாளே! குண்டை பதினொண்ணு இருபத்தஞ்சுக்கெல்லாம் அமுக்கிடுவாங்க. எல்லாரும் செத்துப்போயிடுவோம்டா. உனக்கு பொண்டாட்டி புள்ளை கிடையாதா?"

"ரெண்டு பொண்டாட்டி இருக்காங்க. ஒருத்தி வெண்ணெய் வாங்கிட்டு வரச்சொல்லியிருக்கிறாள். முறுக்கிலே போட்டுப் பிசைந்தால் வாயிலே போட்டால் கரையுமாம்."


**அப்புசாமி:** வாயே கரைஞ்சுட நிலைடா தம்பி. சட்டுபுட்டுனு ஓடு. ரூபாயை கொடு. மணி பதினொண்ணு.


**காஷியர்:** கொஞ்சம் ஃபாஸ்ட்டா அப்பப்ப வெச்சுக்குவோம். (சிரிப்பு)

**அப்புசாமி:** இளங்கன்னு பயமறியாதுன்னு சொல்லுவாங்க. வயிற்றிலே குண்டைக் கட்டிக்கிட்டிருக்கேன். இந்தா கோணிப்பை. ரூபாயைப் போடு.

**காஷியர்:** ஏய்யா, மிளகாய் வெச்ச கோணியா? இந்த நெடி அடிக்குது.

**அப்புசாமி:** இளங்கண்ணா, முட்டாள்தனமாய் நேரத்தைக் கடத்தாதே. என் மார்பைப் பார். குண்டில் சிவப்புவிளக்கு எரிகிறதல்லவா? நான் சுவிட்சை அழுத்தினால் அது அடுத்த வினாடி பச்சையா மாறும். அடுத்த வினாடி நீ வெண்ணையாப் போயிடுவே.





# தேன் கிண்ணம்

### ஆறுதல் தேடுகிறேன்

ஏன் இந்த மௌனம்
என்னைப் புரிந்திருந்தும்
விடியலை நோக்கும் வானமாய்
உன்னை எண்ணி நானிருப்பது
தெரிந்தும் வாழ்வின் - வசந்தமே
வண்ணமுகம் திருப்புவதேன்?

சூரியோதம் காணத்துடிக்கும்
ஜீவனாய் நான்.
கிழக்கில் மேகம் மூட
சூரியனே தெரியவில்லை.
இது காலத்தின் கோலமா
கலையும் கனவுகளா?
சந்ரோதயம் கிடைக்கும் என்றால்
நான் பார்த்த வேளை
என்ன அமாவாசையா?

ஆற்றில் நீராய் பிறந்திருந்தால்
கடலில் சங்கமிக்கலாம்
கடல் அதை மறுப்பதில்லை.
அங்கே ஆயிரம் நதிகள்
அனுமதி இன்றி நுழைகின்றன
உன்னைச் சேர நான் மட்டுமே
ஒரே ஜீவனாய்....
எனக்குத் தெரியும்-
உன் வாய் மொழிகூறாவிட்டாலும்-
உன் மனம் என்னை எண்ணும் என்று

*-துளசிதாசன்-*

### அன்பு

என் மரணத்திற்கு
முன்னர் எழுதப்பட்டு
நெஞ்சில் வைத்து
கட்டம் கட்டி
வெளியாகியிருக்கிறது.

*செல்வி கிருஷ்ணி*
*கொழும்பு-12.*

### பறக்கத்துடிக்கும் புறா ஒன்று!

நீண்ட வான வெளியில்
சமாதானத்தின் எல்லை-காண
அது சிறகை விரிக்கிறது.

சாக்கடைகளில் சங்கமமாகிப்
போன-நமது
"இன ஒற்றுமையை"க்
கண்டால், அது,
சிறகை ஒடித்துக் கொள்ளும்.

ஆகாயப் பரப்பில் இருந்து
சில செய்திகளை,
அது நமக்குத் தருகிறது.

உலகத்தின்
நிகழ்வுகள்-எல்லாம்
ஆயுதத்தினால்,
நிருணயிக்கப்படுகின்றனவாம்.

*-கெகுண கொல்லை ஸலாம்-*

### நிலவே! நீ சொல்

இணைந்த ஒரு மாதத்தில்
இன்பம் கண்டோம் நாமிருவர்
இது கனவோ நினைவோ
நிலவே நீ சொல் சொல்
ஏன் இன்று-தொலைவோ மலரே.

*எஸ். சிவகுமார் ராஜேஸ்வரி.*
*நுவரேலியா.*

### ஒன்றாவோம்

கண்ணீர்
உகுத்து
கண்ணீர்
உகுத்து
களைத்துப் போன
கண்கள்
இன்னும்
அழ வேண்டாம்.

எங்கள்
ஒற்றுமையின்
ஏக்கங்கள்
தொலையட்டும்.

பிரிந்து போன
கைகள்
சேர்ந்தே
ஒலிக்கட்டும்.

மானிடக்
கொலைகள்
வேண்டாம்.

மானிட நேயத்தைப்
புடம் போட்டு
கண்களில்
ஒற்றிக் கொள்வோம்.

இனியும்
ஒரு
பிரிவின்றி
எங்கள் தாய்
மண்ணில்
ஒற்றுமையாய்
ஒன்றாவோம்.

*அக்குறணை*
*ஹரீரா அனஸ்.*

### தூண்கள்

யாரோ சொன்னார்கள்
இளைஞர்கள்
இந்நாட்டின்
தூண்களாம்-
பட்டப் படிப்பைக்
கையிலும்-
கட்டான ஆசைகளை
மெய்யிலும்
சுமந்து-
கொட்டும் மழையிலும்
சுட்டெரிக்கும் வெய்யிலிலும்
நாள் முழுதும்-
அலைகிறோம் வேலைதேடி
காலை புலர்கையிலே
தோன்றும்-
கலர்கலரான நம்பிக்கைகள்
மாலை மயங்குமுன்னே
கலைந்து விடுகின்றன.
வீட்டுச் சுமைகளை
தோள்களில் தாங்கியே
துவண்டுவிட்ட
தந்தை,
தோட்டுச் சுரையில் கூட
தங்கத்தை அறியாத
தாய்,
வாலைக் குமரிகளாய்- திருமண
நாளை எதிர்நோக்கும்
தங்கைகள்,
ஆர்ப்பரிக்கும் ஆண்மைக்கெதிராக
கட்டாய-
போர்க்கொடி பிடிக்கும்
நாங்கள்.
இத்தனைக்கும் மத்தியிலே
தூண்களாகத்தான்
வாழ்கிறோம்- அவைகளைப்
போலவே
உணர்ச்சியற்ற ஜடங்களாக.

எஸ். உதயகுமார்
கொழும்பு-13.

### கண்ணீர் பூக்கள்

ஓ!
மலரே உன்
மன்றத்தில் என்
மனதை வைத்த போது
ஏற்றுக் கொண்டாய்

என் இதயம்
உன் நினைவுகளோடு
சங்கமித்துக்
கொண்டது.

இதய வீணையில்
தோடிராகம் மீட்ட
என் விரல்கள்
துடித்த போது

முகாரி ராகம்
உன்னை முத்தமிட்டுக்
கொண்டது.

என் கண்களுக்கு
நீ காதல் பூக்களை
தூவிய போது

கால தேவன்
உனக்கு கல்லறைகளை
கட்டி முடித்து
விட்டான்.

காதல் கன்னியே.
என் காதல் யாத்திரையில்
உன் கல்லறைக்கு
என் கண்ணீர் பூக்களை
சமர்ப்பணம் ஆக்கிக்
கொண்டு இருப்பேன்.

*-காவியதாசன்-*
*சிலாபம்.*

## கத்தரித்த கடி ஜோக்ஸ்



- *நீலா: பசுக்களுக்கு பிடித்த நடிகை யார்?*
  *மாலா: ........*
  *நீலா: 'Cow' தமிதான்*

- *ரஹீம்: பஸ்சை பின்னால் தள்ளினால் என்னாகும்.*
  *பாத்திமா: பின் உடையும்.*

- *(தியேட்டரில்) எதுக்குடா அந்தப் பெண் இடையிலே கை வைச்சாய்?*
  *இடைவேளை நேரம் என்று திரையிலே போட்டார்கள். அதுதான் இடையிலே கை வைத்தேன்.*

- *நீலா: சுகன்யாவின் மூக்கு ஏன் வீங்கியிருக்கிறது?*
  *மாலா: சித்தெறும்பு கடித்திருக்கும்.*

- *ரகீம்: ஒரு சின்னப் பாலம். அதில் கார், ஸ்கூட்டர், ஓட்டோ போன்ற சின்ன வாகனங்கள்தான் போக முடியும். ஆனால் ஒரு லொறிக்காரன் போய் விட்டான். எப்படி?*
  *நஜீம்: அதெப்படி?*

- *ரகீம்: லொறிக்காரன் தான் போனான். ஆனா லொறி யில போகேல்ல.*

- *நீலா: அவர் டாக்டர் தான். ஆனால் குழந்தை டாக்டர் என்று எப்படித் தெரியும்?*
  *மாலா: அவர் பெயர்தான் சின்னக் குழந்தையாச்சே.*

- *ரகீம்: ஆசிரியர் சுத்த சைவம் போல் இருக்கிறது.*
  *நஜீம்: எப்படியடா கண்டுபிடிச்சா*
  *ரகீம்: அவர்தான் மட்டையை எல்லாம் எங்களுக்கு போட்டு விடுகிறாரே.*

*உன்பெண்சாதி உன்னைத்தான் வழித்து முறுக்கிலே போட்டுப் பிசைவாள். ஒரு குண்டு மனுஷன் வந்து நிற்கிறேன். பயமே இல்லியே.*

***காஷியர்:*** *பெரியவரே, பயந்து என்ன ஆகப் போவுது சொல்லு. நான் காந்தி கட்சி. இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி, என் பேருகூட காந்திதான். காந்திமதி நாதன். திருநெல்வேலிக்காரன்?*

***அப்புசாமி:*** *ஊரும் சதமல்ல, உற்றார் சதமல்ல. பணமே சதம். சீக்கிரம்முட்டை கட்டு. நீ சின்னப் பையன். ரெண்டு பொண்டாட்டிக் காரன். உலகத்திலே வாழ ஆசைப் படலை. நான் வயசானவன். நிறைய நாள் வாழ ஆசை. சின்னச்சின்ன ஆசை. சிறகடிக்கும் ஆசை! அல்பாயுசிலே சாக விரும்பலே.*

***காஷியர்:*** *அவசரப்படுத்திறியே பெரியவரே! குண்டைக் கட்டிக் கிட்டு வந்து நின்னா, உடனே பணத்தைக் கொடுத்திடணுமா? இதெல்லாம் பப்ளிக் மணி.*

***அப்புசாமி:*** *ப்பளிக் மணியோ, பள்ளிக்கூட மணியோ. சரியாப் பதினொண்ணு இருபத்தஞ்சுக்கு பட்டனை அழுத்திடுவாங்க ரிமோட்கன்ட்ரோல்காரங்க.*

***காஷியர்:*** *என்னய்யா தொந்தரவு பண்றே. மானேஜரைக் கேட்காமல் ஒண்ணும் பண்ணுறதுக்கில்லே. (அப்புசாமியின் பின்னாலிருந்து அவர் தோளை தட்டுகிறர் ஒரு டோக்கன்காரர்)*

***டோக்கன் ஆசாமி:*** *எக்ஸ்கியூஸ் மி சார் நாங்களும் பணம் வாங்கணும்.*

***அப்புசாமி:*** *யோவ்! யோவ்! என்னை அலக் பண்ணா தேய்யா! குண்டு கட்டி அனுப்பிச்சிருக்காங்க. (அப்பு சாமி திரும்பி நின்று சேவை சாதிக்கிற பெருமாள் மாதிரி குண்டுத் திருக்கோலம் காட்டி அருளுகிறார். டோக்கன் ஆசாமி அரண்டு மிரண்டு வெளியே ஓடுகிறார்.)*

***அப்புசாமி:*** *ஓய் காஷியர் பையா! அந்த டோக்கன் ஆசாமி எப்படி ஓடறான் பார்த்தியா? குண்டுன்னா இப்படித்தான் பயப்படணும்.*

***காஷியர்:*** *என்னைய்யா பிரமாத பயம். உயிருக்குப் பயந்தால் காஷியரா இருக்க முடியுமா?*

***அப்புசாமி:*** *நீ போய் மானேஜர் கிட்டே பேசிட்டு வாப்பா. இந்த மாதிரி குண்டு மனிதன் வந்து பணம் கேட்கிறான். தர லைன்னா இங்கே இன்னொரு பம்பாய் நடக்கும்னு சொல்றான்னு சொல்லு. குண்டு டிக் டிக் டிக்னு சத்தம் போடுதே..... ஓடு.*

***காஷியர்:*** *சரியான சாவு கிராக்கியா இருக்கியே பெரியவரே! சரி, சரி. நான் போய் மனேஜர்கிட்டே பேசிட்டு வரேன். அந்த ஆள் ஒரு சரியான சிடுமூஞ்சி. மூடு எப்படி இருக்குதோ.*

*(காஷியர் காந்தி, மனேஜர் அறையில் நுழைகிறான். மானேஜர் வஜ்ரநாத் சிகரெட் பிடித்தவாறு ஏதோ யோசனையில் இருக்கிறார்)*

***காஷியர்:*** *மனேஜர் சார்! முதலிலே சிகரெட்டை அணையுங்க.*

***மானேஜர்:*** *இடியட்! அதைச் சொல்ல நீ யார்?*

***காஷியர்:*** *குண்டை கட்டிக்கிட்டு ஒரு ஆள் கவுண்டர்லே நிற்கிறான்.*

***மானேஜர்:*** *நிற்கட்டும். ஆமாம், செக்யூரிட்டி நின்னுக்கிட்டிருப்பானே? அவன் ஒண்ணும் பண்ணலையா?*

***காஷியர்:*** *நாஷ்டா பண்ணப் போயிருப்பான். டயாபடிக் பேஷண்ட் ஆச்சே. மணிக்கு ஒருதரம் ஏதாவது போண்டா கீண்டா வயித்துக்குப் போட்டுக் கிட்டே இருக்கணும்.*

***மானேஜர்:*** *சரி குண்டுக்காரன் எப்படி இருக்கான்?*

***காஷியர்:*** *சௌக்கியமா இருக்கான். பதினொண்ணு இருபத்தைஞ்சு வரை எல்லோருமே நல்லா இருப்போம். அப்புறம் தான் சுவிட்சை அழுத்தி எல்லாத்தையும் தூள் பண்ணிடுவாங்களாம்.*

***மானேஜர்:*** *என்ன விஷயமாம்? ஹாவ்... (கொட்டாவி விடுகிறார்).*

***காஷியர்:*** *ஆவியை விடுகிற நேரம் சார்! நீங்க கொட்டாவியை விடறீங்க.*

***மானேஜர்:*** *இந்த டி.வி.யிலே பன்னெண்டு மணி வரை எதையாவது (ஹி! ஹி! பார்த்துட்டு தூங்கறேனா? தூக்கம் தூக்கமாக வருது. சரி அந்தக் குண்டுக் காரனை இப்படி அனுப்பு.*

***காஷியர்:*** *டைம் இல்ல சார். பதினொண்ணு இருபத்தைஞ்சிக்கு அழுத்திடுவானாம்.*

***மானேஜர்:*** *அப்போ கேஷை யெல்லாம் கொடுத்திடு. வேறென்ன பண்றது?*

***காஷியர்:*** *அதெப்படி தந்துடறது. நான் என்ன இளிச்சவாயனா? இந்த மாதிரி குண்டு கட்டிக்கிட்டு ஒரு ஆசாமி மிரட்டினான். ஆகவே கேஷையெல்லாம் அந்த ஆளிடம் ஒப்படைச்சிடு'ன்னு நீங்க ஆர்டர் டைப் பண்ணிக் கையெழுத்துப் போட்டுத் தாங்க. உங்க வாய் வார்த்தையை நம்பியெல்லாம் லட்சக்கணக்கான பணத்தை எவனுக்கோ தந்துவிட முடியாது.*

*(அப்புசாமி உள்ளே நுழைகிறார்)*

***மானேஜர்:*** *"யாருய்யாது பெரீவரு? இஷ்டத்துக்கு உள்ளே நுழையறது?*

***அப்புசாமி:*** *இஷ்டத்துக்கு இல்லய்யா. கஷ்டத்துக்கு உள்ளே நுழையறேன். நான்தான். குண்டு மனுஷன்.*

***காஷியர்:*** *காட்டேன்யா உன் குண்டை. நல்லாப் பார்க்கட்டும்.*

***மானேஜர்:*** *(ஹாவ்வென்று கொட்டாவி விட்டுக்கொண்டு) அட மண்டு! நான் பார்த்திருக்கேண்டா குண்டு. இதுக்கு முன்னாடி ஸ்ரீநகர்லேதான் மானேஜரா இருந்தேன். நான் பர்க்காத குண்டா. குண்டர்களா? தேச சேவைன்னு வந்துட்டால்... ஆமாம் எத்தனை மணிக்கு குண்டை வெடிக்கப் போறே?*

***அப்புசாமி:*** *என்னையா அக்கிரமம்? எல்லோரும் சாவகாசமா கதை கேட்கிறீங்க. இன்னும் நாலு நிமிஷம்தான் இருக்கு. அப்புறம் நான், நீ,காஷியர், கட்டிடம், பாங்குக்கு வந்திருக்கிற பப்ளிக், நீ, உன் மூக்குக் கண்ணாடி எல்லாரும் தூள்.*

***மானேஜர்:*** *ஐயையோ! மூக்குக் கண்ணாடி தூளாயிடுமா? ஃபிரேம் மட்டும் மூவாயிரத்துத் தொளாயிரம் ரூபாய். ஸ்ரீநகர்லேந்து ஒரு கடத்தல்காரன்கிட்டேவாங்கினது. சரி, சரி, உம்க்கு வேண்டியதென்ன? நீரே பயங்கரவாதியா? அல்லது பயங்கரவாதிகளின் ஏஜண்ட்டா?*

***அப்புசாமி:*** *இன்னும் நாலு நிமிஷம்தான் இருக்கு. குண்டு டிக்கு டிக்குங்குது.*

***மானேஜர்:*** *ஹஹஹ! சும்மாக் குண்டு விடாதேயும். நான் எதையும் நம்ப மாட்டேன். கொஞ்சம் இரும். காதை வைத்துக் கேட்கிறேன்.*

*(குண்டுமீது காதை வைத்துக் கேட்கிறார் மானேஜர்).*

***அப்புசாமி:*** *ஆகா! நீரல்லவா வீர புருஷன். உமக்குப் பரம வீர சக்ர பட்டம் கொடுக்க வேண்டும்.*

***அப்புசாமி:*** *அதோ ஆட்டோ கூட பிய்யாங் பிய்யாங்குனு ஹார்ன் அடிக்குது. வண்டி வந்துட்டுது. ரூபாய் நோட்டுக் களை பெட்டியிலே போட்டு சீக்கிரம் கொண்டு போய் ஆட்டோவில வையுங்க. ஆட்டோ நம்பர் 0034 ZY*

***மானேஜர்:*** *ஆகா! இத்தனை வயசிலும் என்ன ஒரு ஞாபக சக்தி. யோவ் காஷியர், சீக்கிரம் பணத்தைக் கட்டச் சொல்லுய்யா.*

***காஷியர்:*** *லாக்கர் ரூமிலே முப்பது லட்சம் இருக்கே. அதையும் குடுத்துடறதா?*

***மானேஜர்:*** *அதையெல்லாம் ஏய்யா இந்த ஆள் எதிரிலே கேட்கறே?*

***காஷியர்:*** *சத்தியமே வெல்லும் சார். ஸத்யமேவ ஜெயதே என்கிறதை மறந்துட்டீங்களா?*

***அப்புசாமி:*** *ஐயோ! சீக்கிரம், சீக்கிரம். இன்னும் மூணு நிமிஷம் கூட இல்லே. இருக்கிற காஷைக் கொண்டு போங்கய்யா ஆட்டோவுக்கு. இல்லாட்டி ரிமோட்லே சுவிட்சை அமுக்கி டுவாங்க.*

***மானேஜர்:*** *காஷியர் நீ போய் பணத்தைத்தயார் பண்ணி ஆட்டோவில் ஏற்று."*

***காஷியர்:*** *ரைட்டிங்கிலே வரணும் சார் உத்தரவு*

***மானேஜர்:*** *சரி போய் ஸ்டெனோ மாலதியை உடனேஅனுப்பு.*

***காஷியர்:*** *மாலதி லீவாச்சே இன்னிக்கும் நாளைக்கும்.*

***மானேஜர்:*** *அது எப்படி உமக்குத் தெரியும்?*

***காஷியர்:*** *என் பொண்டாட்டி சார்.*

***மானேஜர்:*** *உம்ம பொண்டாட்டி பேர் மல்லிகா இல்லையோ?*

***காஷியர்:*** *ஹஹஹ! எனக்கு ரெண்டு சம்சாரமாச்சே! மல்லிகா, மாலதி. இங்கே வேலை செய்யறவ மாலதி, கஸ்டம்ஸிலே வேலை செய்யறவ மல்லிகா.*

***அப்புசாமி:*** *யோவ்! என்னங்கடா நினைச்சுக்கிட்டு நீங்க கவுண்டமணி- செந்தில்மாதிரி பேசிக்கிட்டிருக்கீங்க. நான் வயிற்றிலே குண்டை கட்டிக் கிட்டிருக்கேன். இன்னும் ரெண்டு நிமிஷம் தான் இருக்கு.*

அப்புசாமியின் வயிற்றுக் குண்டிலிருந்து *'கிர்ரிக்'* என்ற ஒலி கேட்கிறது.

**(அடுத்த வாரம் தொடரும்)**

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# காமன் தொடுக்கும் கணைகளும் டாக்டர் லவ் கற்றுத்தரும் வழிகளும்

• அடுத்த மாதம் கருப்பை அறுவைச் சிகிச்சை செய்யப் போகிறேன். கூடலில் உள்ள நாட்டம் பாதிக்கப்படுமா?



உங்கள் கருப்பை முழுமையாக நீக்கப்படுமா? அல்லது பாதிதான் நீக்கப் படவிருக்கிறதா? பாதிக் கருப்பை நீக்கப்படுமானால் போதுமானஅளவு ஹோமோன் களை உற்பத்தி செய்யலாம். முழுமையான சத்திரசிகிச்சை என்றால் ஹோமோன் உற்பத்திக்கு இடமிருக்கிறதா என்று உங்கள் மருத்துவரோடு ஆலோசித்து முடிவு செய் யுங்கள்.

• எனது கணவர் "உன்னை நான் காதலிக்கிறேன்" என்று சொல்வதில் சங்கடப்படு கிறார். அவரது உணர்வு களை வெளிப்படுத்துவதற்கு நான் எவ்வாறு தூண்ட முடியும்?

அவருடைய கருத்து வெளிப் பாடு உங்களுக்கு எவ்வளவு முக்கியமானது என்பதை அவருக்கு உணர்த்தினீர்களா? இருவரும் கருத்துப் பரிமா றுவதில் உள்ள அவசியத்தை அவருக்கு எடுத்துக் கூறுங்கள்.

• ஒன்று கலத்தலில் ஈடுபடு வதில் சலிப்படைந்துள்ளேன். எனது கணவர் தவறான நேரத்தில் என்னை அணுகு கிறார். இது என் தவறா? அல்லது அவரது தவறா?

வசதியான நேரம் எது என்பதை இருவரும் இணைந்து தீர்மா னித்துக் கொள்ளுங்கள்.

• பாலியல் பற்றிய புத்தகங் களும் - அறிவுரைகளும் எவ்வளவு தூரம் நன்மை பயக்கவல்லன? எனது பாட்டன்பாட்டி காலத்தில் வாழ்ந்தவர்கள் எவரும் பாலியல் பாடங்கள் படிக்க வில்லையே?

பாலியல் தொடர்புகள் பற்றிய அறிவு இயல்பாகவே எப்படி வரமுடியும்? எனினும் உங்களை எது திருப்திப்படுத்துகிறது என்பதை நீங்களே கண்டறிந்து, உங்கள் துணையோடு பகிர்ந்து கொள்ள முடியுமானால் நூல் அறிவு தேவையில்லை. அவ்வாறு இல்லாதவர்களுக்கு புத்தகங்கள் உதவக்கூடும்.

• நான் உண்மையில் பாலியல் லீலைகளை அதிகம் விரும்பு கிறேன். புதிய முறைகளை கையாள்வது பற்றி அவரிடம் நான் எப்படிக் கூறமுடியும்?

உங்கள் ஆசைகளை வெளிப்ப டுத்தி காதல் கடிதம் ஒன்றை அவருக்கு எழுதுங்கள். நேருக்கு நேர் உரையாடுவதை தவிர்க்க லாம்.

• கலத்தலின் பின் ஆண்கள் உடனடியாக தூங்கி விடுகின் றனர். இது நாகரீகமற்ற செயலாகப்படுகிறது. சரியா?

அது வழமையானதே. அவர் களது உயிர் அணுக்கள் உற்பத்தி செய்யப்படவும், உடல் மீண்டும் சக்தி பெறவும் அவகாசம் தேவை. தூங்கி எழுந்ததும் மீண்டும் கலத்தலுக்கு தயாராகி விடுவர்.




• பாலியல் தொடர்பு இல்லா மல் ஒரு தம்பதி நெருக்கமாக வாழ முடியுமா?

முடியும். சிலருக்கு கிளர்ச்சிகள் குறைவாகவே இருக்கும். அவர் களுக்கு நெருங்கிய துணை பிரதானமானது.

• எனது கணவர் இருதய நோயில் இருந்து இப்போது தான் குணமாகிவருகிறார். மீண்டும் எப்போது நாங்கள் கூடலில் ஈடுபடமுடியும்?

இருதயக் கோளாறில் இருந்து சாதாரண நிலை பெற மெதுவாகவும், சீராகவும் முயற்சி செய்யவேண்டும். பொதுவாக சமதரையில் அரைமைல் தூரம் அவரால் நடக்க முடியுமானால் மென்மை யான உறவில் ஈடுபடலாம். அவருக்கு மார்பில் வலி ஏற்படுமானால் நிறுத்திவிட வேண்டும்.



• பெண்களின் உணர்வெழுச்சி நிலை ஒருவருக்கொருவர் வேறுபடுமா?

வேறுபடும். சிலருக்கு அதிகநேரம் ஆகலாம். காலம் நீடிப்பதில் பிரச்சனை இல்லை. மேலும் கால எல்லை நீடிப் பதற்கு புலனை வேறுபக்கம் திருப்புதல், வேறு நெருக்கடிகள், ஆயத்தமின்மை போன்றவை காரணங்களாக இருக்கலாம்.

• எனது கணவர் கூடலில் ஈடுபடும் நேரத்தில் கடின மானவராக தோன்றுகிறார். கட்டில் கால்களுடன் என் கால்களை கட்டிவிட்டு, என்னை சவுக்கால் அடிப் பது போல் பாவனை செய் கிறார். அவர் என்னை உண்மையாகவே அடிக்கா விட்டாலும் நான் குற்ற வாளியோ என்று எண்ணத் தோன்றுகிறது. நான் என்ன செய்யவேண்டும்?

உங்களுக்கு மகிழ்ச்சியூட்டு வதாகவும் அதே சமயம் மற்ற வர்களுக்கு துன்பமூட்டுவதா கவும் இல்லாத போது நீங்கள் ஏன் அப்படிக் கருத வேண்டும்? உங்கள் கணவரோடு மனம் விட்டுப் பேசுங்கள்.

(மறுவாரம்

மீண்டும்

டாக்டர் லவ்)



# இரும்பு மனிதனின் இதயம் கவர்ந்தவள்

-ரசிகன் எழுதுவது-

கியூபாவின் இரும்பு மனிதர் பிடல் காஸ்ட்ரோ!

அமெரிக்காவின் சவால்கள்-

அச்சுறுத்தல்கள் எதுவும் அந்த புரட்சிவாதியை ஒன்றும் செய்யமுடியவில்லை.

பல தடவைகள் படுகொலை முயற்சிகள். எதிலும் சிக்காமல் தப்பித்துக் கொண்டார் அந்த இரும்பு மனிதன்.

கியூபா மக்கள் காஸ்ட்ரோ மீது உயிரையே வைத்துள்ளனர்.

சோவியத் யூனியன் சோச லிசத்தை கைவிட்டது. இன்று உடைந்து பல துண்டுகளாக பிரிந்துவிட்டது.

அதனைத் தொடர்ந்து பல சோசலிச நாடுகள் பாதையை மாற்றிக்கொண்டன. சோசலிசத் திற்கு கும்பிடு போட்டன.

ஆனால் -கியூபா மாற வில்லை. இரும்பு மனிதன் காஸ்ட்ரோ உள்ளவரை அந்தப் பேச்சுக்கே இடமில்லை.

காஸ்ட்ரோ மிக கவர்ச்சி யானவர். அற்புதமான பேச்சாளர். தீவிரமான புரட்சி யாளர். கியூபாவின் கரும்புக் காடுகளுக்குள் புரட்சிப் பொறியை மூட்டியவர் என் றெல்லாம் பாராட்டப்படுகிறவர்.

அவர்பால் அழகுப் பெண் கள் மோகம் கொண்டதுண்டு. காஸ்ட்ரோவும் அந்த மோகன பாணங்களால் வீழ்ந்ததுமுண்டு.

அமெரிக்காவின் ஆயுதங்க ளால் வெற்றி கொள்ள முடியாத அந்த மனிதன் பூவுலக தேவதைகளின் மன்மத பாணங் களால் வெற்றி கொள்ளப் பட்டதுண்டு.

யாவும் துறந்த முனிகள் கூட மோகினிகளின் மடிகளில் துவண்டது உண்டு. மலர்க்குலம் மீது வண்டாகத் தாவியது முண்டு. காஸ்ட்ரோ மனிதன் அல்லவா?

முப்பது வருடங்களுக்கு முன்பு அந்த ஒய்யாரச் சிலை யைக் கண்டார் காஸ்ட்ரோ.

வாலிபத்தின் வண்ணக் கனவுகள் அவள் விழிகளில்.

திமிறும் இளமை களின் இனிய அழைப்பு அந்த சிலையின் மேனியில்.

காஸ்ட்ரோ தன்னை மறந்தார். அந்த அழகின் அரங்கத்தை ஆக்கி ரமித்தால் என்ன? மனது தவித்தது.

அவள் மட்டும் என்னவாம்? சுருட் டுப் பிடித்தபடி, வசீகரிக்கும் கம்பீர ஆண்மையில் உயர் ந்த மனிதனை விழிகளால் பருகி னாள். மையல் கொண்டு மனதுக் குள் தழுவினாள்.

-அவள் பெயர்-

-மரிதா லோறன்ஸ்-

இன்று மரிதா லோறன்ஸ் நியூ யோர்க்கில் உள்ள நெரிசலான பகுதியில் தன் வாழ் நாளை நகர்த்திக் கொண்டி ருக்கிறாள்.

நினைவுத் திரையில் காஸ்ரோவிடம் பெற்ற அனுபவங்களை மீண்டும்- மீண்டும் ஓடவிட்டுப் பார்க் கிறாள்.

பத்திரிகை ஒன்றிற்கு தன் அனுபவங்களை விபரித்தாள்.

அது- இதுதான்-

-முப்பது வருடங்களுக்கு முன்பு-



மரிதாவின் தந்தையார் ஜெர்மன் கப்பல் ஒன்றில் காப்ட னாக இருந்தார்.

கப்பல் கியூபாவில் தரித்து நின்றது.

மரிதாவும்- தந்தையோடு கியூபாவின் புதிய தலைவரைச் சந்திக்கச் சென்றாள்.

அப்போதுதான் காஸ்ட்ரோ புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றி இருந்தார்.

காஸ்ட்ரோ வசீகரமாய் புன்னகைத்து அவர்களை வரவேற்றார்.

மரிதாவின் மீது காஸ்ட்ரோ வின் பார்வை பரவியது.

மரிதாவுக்குள்ளும் மின்சாரம்.

"அவரை எந்தப் பெண்ணும் விரும்புவாள். உயிரோட்ட முள்ளவர். மோகம் கொள்ள வைக்கக் கூடியவர்."

என்கிறார் மரிதா. இப்போது கூட தமது முதல் சந்திப்பை நினைக்கும் போது மரிதா சிலிர்த்துக் கொள்கிறாள்.

"கப்பலில் பயணம் செய்யவேண்டும் ஏற்பாடு செய்யுங்கள்" மரிதாவின் தந்தைக்கு காஸ்ட்ரோ உத்தர விட்டார்.

பயணம் ஆரம்பமானது. மின் ஏணிகளில் ஏறிச் செல்லும் போது இருவரது உடல்களும் உரசிக்கொண்டன. பஞ்சிலே பட்ட நெருப்பு.

உள்ளே எரிந்தது ஆசைத்தீ. ஆசைக்கு வெட்கமில்லை. மரிதா காஸ்ட்ரோவின் முதுகில் வேண்டுமென்றே சரிந்தாள்.

மெத்தென்று மோதிய இளமைகள் இரண்டும் காஸ்ட் ரோவின் உள்ளே இனிமை விதைக்க-

காஸ்ட்ரோவின் கரம் நீண்டு மரிதாவின் கரம் பற்றி அழுத்தியது. அந்த அழுத்தலில் உணர்ச்சிகள் பரிமாறப்பட்டன.

அணைக்கப்பட்டாள். அணைத்தும் கொண்டாள். அலைகள் தாலாட்ட, தென்றல் மெல்ல இருவரையும் தழுவிச் சென்றது.

இளமையின் அழைப்புக்கு இருவரும் சம்மதம் கொடுத் தனர்.

எனினும் - இளமையின் இரகசியங்களை முழுவதும் அறிய கப்பலின் தளம் களமல்லவே. எனவே பாதிக் கதையோடு பிரிந்தனர்.

அன்று இரவு மரிதாவின் கப்பல் அறைக் கதவு தட்டப் பட்டது.

கதவைத் திறக்க-

எதிரே காஸ்ட்ரோ.

புயல் போல நுழைந்து காலால் எட்டிக் கதவைச் சாத்த-

மரிதா பயந்து போனாள்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

## அங்கவீனர்களுக்கான விளையாட்டுப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

இலங்கையில் தேசிய மட்டத்தில் நடத்தப்பெறும் இலங்கை அங்கவீரர்களுக்கான எஸ்கொலம்பிக்ஸ் விளையாட்டுப் போட்டி நான்காவது தடவையாக மொரட்டுவ எககொட உயணவில் அமைந்துள்ள சிறீ சுனந்தோபானந்த மகாவித்தியாலயத்தில் எதிர்வரும் ஜுலை மாதம் 30-31ம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் இலங்கையைச் சார்ந்த அங்கவீனர்களிடமிருந்து போட்டிக்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 15ம் திகதிக்கு முன்பதாகக் கோரப்படுகின்றன. அனைத்து விண்ணப் பங்களும் "எஸ்க்கோ அங்க வீனர்களுக்கான புனர்வாழ்வுச்சபை, இலக்கம் 26, எககொட உயன, மொரட்டுவ, என்ற முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

ஆண் மற்றும் பெண் இருபாலாருக்கும் வெவ்வேறாக நடத்தப்படும் இப் போட்டிகளின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது:

பார்வை குறைந்தோர்- (15 வயதிற்கு மேற்பட்டோருக்கான போட்டி)

மரதன் ஓட்டம், (மீட்டர் 100-400வரை) உயரப்பாய்தல், தூரப்பாய்தல், 50 மீட்டர் நீச்சல் போட்டி.

செவிப்புலன் குறைந்தோர்- (15 வயதிற்கு மேற்பட்டோருக்கான போட்டி)

உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், 110 மீட்டர் தடைபாய்தல், உயரப் பாய்தல், ஆண்களுக்கு கிரிக்கெட்.

உடல் ஊனமானோர்- (15 வயதிற்கு மேற்பட்டோர்)

50 மீட்டர் முன்னோக்கி நீந்துதல், பின்நோக்கி நீந்துதல், தள்ளுவண்டியிலிருந்து ஈட்டி எறிதல், தட்டெறிதல், உருளைக் கதிரை ஓட்டப் போட்டி, தரையில் அமர்ந்திருந்து கரப்பந்தடித்தல், நிலையிலேயே அல்லது இருக்கையிலே இருந்து மேசைப்பந்தடித்தல், இலக்கு நோக்கிச் சுடுதல், பெட்மெண்டடித்தல்.

மூளை வளர்ச்சி குன்றியோர்- (15 வயதிற்கு மேற்பட்டோர்)

மீட்டர் 100-400 ஓட்டப் போட்டி, தூரப்பாய்தல், உயரப்பாய்தல், ஈட்டி எறிதல், 50 மீட்டர் நீச்சல் போட்டி ஆகியவை நடைபெறும்.

## ஸ்போர்ட்ஸ்

# மோனிகா மீண்டும்!

மோனிகா- மோனிகா செலஸ்!

டென்னிஸ் உலகின் வெற்றித் தேவதை-

கவர்ச்சியான வீராங்கனை.

களத்தில் ஆடும்போது வீசும் பந்துகளில் இலாவகம். ஆடும் போது நளினம்.

கண்டு களிக்க உலகெங்கும் பல கோடிக்கண்கள் காத்திருக்கும்- காத்திருக்கின்றன.

ஜெர்மன் நாட்டில் ஆம்பர்க் நகரம். அங்கே தான் டென்னிஸ் ஆடுகளம்.

எதிர்வந்த பந்துகளை இலக்குத் தவறாமல் அடித்து திருப்பி அனுப்பிக் கொண்டிருந்தார் மோனிகா.

திடல் நிறைந்திருந்தது. ரசிகர்களின் கண்கள் மோனிகாவின் ஆட்டத்தில் லயித்திருந்தன.

திடீரென்று மோனிகாவின் முதுகில் ஒரு கத்தி பாய்ந்தது.

மோனிகா மயங்கிச் சாய்ந்தார். திடலிலும், தொலைக் காட்சியிலும் திரளான ரசிகர்கள் பார்த்திருக்க, அவர்களின் மனம் கவர்ந்த வீராங்கனை களத்தில் சரிந்தாள்.

கத்தியால் குத்தியவன உடனே மடக்கப்பட்டான உடனடியாக விசாரிக்கப பட்டான்.

அவன் பெயர் கன்தா பார்ச்சே. வயது 38.

ஏன் குத்தினான்?

டென்னிஸ் உலகில மோனிகாவுக்கு அடுத்த நிலையில் இருப்பவர் ஸ்டெபிகிராபி குத்தியவன் ஸ்டெபி ரசிகன் தீவிர விசிறி.

"எப்போதுமே மோனிகா வெற்றிபெற்றால் ஸ்டெபி எப்படி முதலிடத்திற்கு வருவது?" என்று கேட்கிறான கன்தர் பார்ச்சே.

தற்போது மோனிகா கத்தியால் பட்ட காயத்தை ஆற்றிக்கொள்ள ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார்.

விரைவில் மீண்டும ஆடுகளத்திற்கு வருவார்.



மரிதாவுக்குள் இன்னொரு மரிதா உள்ளூர மகிழ்ச்சி கொண்டாள்.

மரிதா சொல்கிறாள்-

"அன்று ஒரு மனித இராட்சதன் போல அவர் நடந்து கொண்டார்"

இப்போது கூட மரிதாவை வெட்கம் முகம் சிவக்க வைக்கிறது.

காஸ்ட்ரோ- மரிதா காதல் உறவில், மரிதா வயிற்றில் பாரம் சுமந்தாள்.

"குழந்தைக்கு தாயாகப் போகிறேன் என்று சொன்ன போது காஸ்ட்ரோ மகிழ்ச்சியடைந்தார்" என்கிறாள்.

ஹவானாவுக்கு மரிதாவை அழைத்துச் செல்லப்பட்டு விடுதி ஒன்றில் தங்கவைக்கப் பட்டாள்.

அன்று-இரவு-

சில மர்மமான சம்பவங்கள் நடந்தன.

மரிதா விடுதியைவிட்டு யாரோ சிலரால் தூக்கிச் செல்லப்பட்டாள். விமானம் ஒன்றில் ஏற்றப்பட்டாள். நியூயோர்க் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டாள்.

"கண்விழித்துப் பார்த்த போது குழந்தை இறந்து விட்டது என்றும், காஸ்ட்ரோ கவலைப் படவில்லை என்றும் கூறினார்கள்" என்கிறாள் மரிதா.

வருடங்கள் பல உருண்டோடின.

நம்பமுடியாத கடிதம் ஒன்றை கண்டெடுக்கும் வரை தன் குழந்தை உயிரோடிருப்பது மரிதாவுக்கு தெரியாது.

தெரிந்தபோது காஸ்ட்ரோவை போய்ச் சந்தித்தாள்.

"என் குழந்தை எங்கே இருக்கிறது. ஒரு முறையேனும் அந்த முகத்தை காண முடியுமா?"

காஸ்ட்ரோ அமைதியாக உள்ளே சென்று, திரும்பிவரும் போது அழகான வாலிபனோடு வந்தார்.

அவன்தான் மகன் அண்ட்றே.

மரிதா அழுதாள். மரிதா பாசத்தைப் பொழிந்தாள். மரிதா துயரோடு பிரிந்தாள். மீண்டும் நியூயோர்க் வாசம்.

அண்ட்றே இன்று கியூபாவின் குழந்தைப் பேறு சம்பந்தப்பட்ட டாக்டராக இருக்கிறார். ●

## இளமைத் தொடர்



மதுமிதா அழகாக இருந்தாள். அம்சமாக இருந்தாள். ஆனால் ஆபத்தானவளாக இருந்தாள்.

அந்த- மதுமிதா இப்போது எங்கே இருக்கிறாள்?

-அவசரப்படவேண்டாம்-

-அடுத்த வாரம்-

**கண்ணே - மதுமிதா**


ரசிகன்


-எழுதும்-

புதுமை+ இனிமைத் தொடர்

# அன்று குபேர ராணி இன்று குடிசைவாசி!







இலங்கையிலும் வெற்றிகரமாக ஓடி வசூலை வாரிக் கொட்டியது கோட்ஃபாதர். அதில் நடித்தவர்தான் மார்லன் பிராண்டோ.

ஒரு காலத்தில் ஹொலிவூட்டின் தலைச்சிறந்த நடிகராக, அதிக ஊதியம் வாங்கிக் குவித்தவர்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசனை பேரறிஞர் அண்ணா தென்னாட்டின் மார்லன் பிராண்டோ என்று கூறியதுண்டு.

இன்று அதே மார்லன் பிராண்டோ குட்டிச்சுவராகி விட்டார். குவித்த கோடிகளை எல்லாம் காதல் லீலைகளிலும், இன்னபிற வழிகளிலும் கரைத்து விட்டார்.

மார்லன் பிராண்டோவின் முதல் மனைவி அன்னா காஸ்பியின் வாழ்க்கை எல்லாவற்றையும் விட சோகமானது.

மார்லன் பிராண்டோவின் மனைவியாக இருந்த போது ஹொலிவூட்டின் இளவரசி போல் வாழ்ந்தவர்.

-படாடோபமான பங்களா-

-பகட்டான வாழ்க்கை-

மார்லன் பிராண்டோ பலமலர் தாவும் வண்டு. அதனால் கசந்து போனது காதல் வாழ்க்கை.

பள்ளியறையில் அன்னா காத்திருக்க மார்லன் வேறு பாவைகளின் பள்ளியறைகளில்- விளைவு?

12 மாத உறவு முறிந்தது. ஆனால் மார்லனின் குழந்தையை அன்னாவின் வயிறு சுமந்தது.

விவாகரத்து பெற்ற போது மார்லன் பிராண்டோவிடம் இருந்து அன்னா பெற்ற நட்டஈட்டுத் தொகை ரூபா 2 கோடியே 35 இலட்சம் (5 லட்சம் அமெரிக்க டொலர்)

அன்னாவுக்கு கிறீஸ்ரீன் என்னும் மகன் பிறந்தான்.

அன்னா ஜிம் என்ற ஓவியரை மணந்தார். ஜிம் சொற்ப காலத்தில் இறந்துவிட அன்னா மீண்டும் முள்படுக்கையில் வீழ்ந்தார்.

தனது மகனை வளர்க்கப் போவதாக வழக்குப் போட்ட மார்லன் பிராண்டோ தாயை மகனிடமிருந்து பிரித்தார்.

சரியான பராமரிப்பு- கண்காணிப்பு இல்லையென்பதால் கிறிஸ்ரீன் தீய வழிகளில் சென்றான்.

"அவனை இயல்பான முறையில் வளர்க்கப் போவதாக மார்லன் சொன்னார். ஆனால் அதைச் செய்யவில்லை" என்கிறார் அன்னா.

விவாகரத்தில் பெற்ற பணம் கரைந்து போக அன்னா வறுமையில் வீழ்ந்தார்.

கோடீஸ்வர ராணி கூலி வேலை செய்து வயிற்றைக் கழுவும் நிலை ஏற்பட்டது.

இன்று இழுவை வாகனத் தொகுதிகளை கழுவித் துப்பரவு செய்யும் பணியைச் செய்து வருகிறார்.

கூலி? 50 டொலர் மட்டும் தான். விவாகரத்துப் பெறும் போது மாதம் ஒன்றுக்கு 50 ஆயிரம் டொலர் வீதம் வாங்கியவர் இன்று வாரம் ஒன்றுக்கு 50 டொலர் வாங்கும் கூலித்தொழிலாளியாகிவிட்டார்.

அதைவிடத்துயரம்- மார்லனிடம் வளர்ந்த மைந்தன் கிறீஸ்ரின் கொலைக்குற்றம் சாட்டப்பட்டு சிறையில் வாடுவது.

தனது சகோதரியின் (மார்லனின் மற்றொரு மனைவியின் மகள்) காதலனை சுட்டுக் கொன்றுவிட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சோகம் முன்னாள் குபேர ராணியை உருக்குலைத்துப் போட்டிருக்கிறது.

"யாக்கை நிலையாமை" என்பது இதுதானோ?

# முத்தமும் வழக்கும்

றொபெட் டொயிஸ்னியோ பிரான்சின் சிறந்த படப்பிடிப்பாளர். 1950ஆம் ஆண்டு அவர் பிடித்த ஒரு படத்துக்காக அவர் இன்று நீதிபதி முன் கூண்டில் ஏறவேண்டிய நிலையிலுள்ளார்.

பாரிஸ் நகர மண்டபத்தின் முன்புறமாக ஒரு இளம் காதல் சோடியினர் ஆரத்தழுவிக் கொண்டிருக்கும் போது டொயிஸ்னியோ "கிளிக்" செய்தார். அப்படம் பல தடவைகள் பத்திரிகைகளில் பிரசுரமானது. 50 இலட்சம் தடவைக்கு மேல் இப்படம் செய்தித்தாள்களில் இடம்பெற்றது. அன்று காதல் அரவணைப்பில் கட்டுண்டு கிடந்த



அந்த இளம் சோடிக்கு இன்று வயது 60க்கு மேலாகிவிட்டது. தங்கள் காதல் வெளிப்பாடு இவ்வளவு தூரம் பகிரங்கப்படுத்தப்படுவதை இத்தம்பதியினர் ஆட்சேபித்து வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். இவ்வாறு காதல் அணைப்பில் கட்டுண்டு கிடப்பதற்காக அவர்களை பணம் கொடுத்து ஏற்பாடு செய்ததாக 81 வயதான டொயின்ஸ்னியோ கூறுகிறார்.



www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்











# உண்மையாகவே-ஒரு புரட்சிகர இயக்குநர்

சினிமா உலகின் உயர்ந்த விருதாகக் கருதப்படுவது ஒஸ்கார் விருதாகும்.

ஒஸ்கார் விருதுக்கு முதன்முதலாக சீனாவிலிருந்து தெரிவு செய்யப்பட்ட இருதிரைப்படங்கள் 'ஜு டௌ', 'றெயிஸ் த றெட் லன்ரன்' ஆகியவையாகும். ஆனால் அவை இரண்டும் சீனாவில் திரையிடப்படுவதற்குத் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திரைப்படங்களைத் தயாரித்து இயக்கியவர் இன்று சர்வதேச அளவில் புரட்சிகர இயக்குநர் என்று பெயரெடுத்த சாங் ஜி மௌ என்பவராகும்.

சீனாவில் கடந்த இருபது வருடங்களாக சீனாவின் மறைந்த தலைவர் மா ஓ சேதுங்கின் கோட்பாடுகளை அடிப்படையாக வைத்தே திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டன. இப்போது நிலமை மாறி வருகிறது.

இயக்குநர் சாங் தனது படங்களில் அறிமுகப்படுத்திய 29 வயதான கொங்லி என்ற கதாநாயகி இன்று உன்னத இடத்திற்கு உயர்ந்துள்ளார்.

கொங்லியை றெட் சொர்கம் என்ற திரைப்படத்தில் சாங் அறிமுகப்படுத்தினார். 1988ல் திரையிடப்பட்ட அந்தப் படத்தில் கொங்லி விலைபேசி விற்கப்படும் பெண்ணாகத் தோன்றுகிறார்.

சீனாவில் ஆண்கள் பெண்களைப் பெற்றோருக்குப் பணம் கொடுத்து வாங்கிக் குடும்பம் நடத்துவது வழக்கமாகும்.

கொங்லியை விலை கொடுத்து வாங்கியவன் பின்னர் நல்ல லாபமொன்று வைத்து முரட்டுத்தனமான பணக்காரக் கிழவனுக்குப் விலைகூறி விற்று விடுவதாக றெட் சொர்கத்தின் கதை பின்னப்பட்டிருந்தது.

1992ல் சாங், கியூ ஜூவின் கதை என்ற படத்தைத் தயாரித்து வெளியிட்டார். நேர்மையற்ற கிராமசேவையாளர் ஒருவரை ஏழை விவசாயக் குடும்பப் பெண் ஒருவர் எதிர்த்துப் போராடி வெற்றி பெறுவதாகக் கதை பின்னப்பட்டிருந்தது.

42 வயதான இயக்குநரான சாங்கின் புரட்சிகரமான கருத்துக்களை கொண்டபடங்களில் அவரது காதலி கொங்லி மிகவும் உன்னதமான நடிப்பாற்றலை வெளிக்காட்டி வருகிறார். அதனால் பல வெளிநாட்டு தயாரிப்பாளர்கள் சாங்கின் படங்களுக்கு முதலீடு செய்யப் போட்டி போடுகின்றனர்.

புரட்சிகர இயக்குநர் சாங் ஜி மௌ ஒரு திரைப்படத்தைப் பார்க்க வேண்டுமென்று மிகவும் ஆசைப்படுகிறார். அத்திரைப்படத்தின் பெயர், அன்போகிவன். கிளின்ட் ஸ்ட்வூட் நடித்தது. ஒஸ்கார் விருதுகளைப் பெற்றது.

## உலகமோ உலகம்...





அழகான மீன்கள்

-வசந்த வாழ்த்துக்கள்-

-மீண்டும் சந்திப்போம்-





இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை சோமாதேவி பிளேஸ், 88/14ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினால் 29, வெலிபார, நாவலவில் உள்ள சமனல அச்சகத்தில் ஜூன் மாதம் 20ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.